# இஸ்லாம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் - 11

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

இஸ்லாம்

தரம் 11
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு **2015**

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள், விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

**ஸ்ரீலங்கா**

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016 ஆம் ஆண்டு தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரியவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக் குழு

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி சார் அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

**விடய ஆலோசனை**

**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்**
பிரதிப் பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**மௌலவி ஏ.எல்.எம். அலியார்**
பிரதிநிதி, கல்விக் குழு,
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா
பீடாதிபதி,
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகளுக்கான பீடம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**மௌலவி எம்.ரீ. இக்பால்**
ஆசிரிய ஆலோசகர் - இஸ்லாம்
கொழும்பு கல்வி வலயம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
தேசிய கல்வி நிறுவகம்

**வெளியக**

**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி,**
ஆசிரிய ஆலோசகர்.

**எம்.எச்.எம். நாளிர்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்.

**எம்.எஸ்.எம். அனஸ்**
ஆசிரியர், அலுத்கம்வீதிய தேசிய பாடசாலை.

**எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்**
ஆசிரியர், பாபுஸ்ஸலாம் மு. வி, நாம்புளுவ.

**எஸ்.ஏ.எம். ரிஸ்வி**
ஆசிரியர், அல்ஹுதா மு. மகா வி, ரிதீகம.

**எம்.எப்.எம்.பாஹிம்**
ஆசிரிய ஆலோசகர், மினுவன்கொடை கல்வி வலயம்.

**எம்.எம்.முகர்ரம்**
ஆசிரியர், பாபுஸ்ஸலாம் மு.வி, நாம்புலுவ.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்கு பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் இது விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றதுது.

இஸ்லாம் பாட கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்கு தேவையான காலப்பகுதியை சுயாதீனமாக தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தை திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின் போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காக குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. இக்குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களை பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாக திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

இவ்வழிகாட்டி ஆசிரியருக்கான வழிகாட்டல் குறிப்புக்களை கொண்டுள்ளதே தவிர மாணவர்களுக்கான மேலதிக வாசிப்புக்கானதல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் என்ற தொடர்பை வலுப்படுத்தி மாணவர் செயற்பாட்டை வீட்டுச் சூழலுடன் இணைக்கும் வகையில் பாடத்தை திட்டமிடுவதற்கான வழிகாட்டலின் இறுதிப் பகுதியில் வீட்டுச் சூழலில் பின்தொடர் செயற்பாடு என்ற பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சியாகும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் பெற்றோரின் பரஸ்பர ஈடுபாடும் அனுபவப் பகிர்வும் பிள்ளைகளின் கற்றலை மேலும் வளப்படுத்தும் என நாம் நாம்புகிறோம். ஆனால் இப்பகுதி பிள்ளைகளுக்கு மேலதிக சுமையாக அமையாத வகையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம். அத்தோடு பிரதேசத்தின் தன்மை, மாணவரின் அனுபவம், பெற்றோரின் ஈடுபாடு முதலான காரணிகளை முன்வைத்து இச்செயற்பாடுகளில் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ளும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மற்றங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவரின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் வகையில் பயன்மிக்க கற்பித்தலின் ஊடாக சிறந்ததொரு எதிர்கால சந்ததியை உருவாக்குவதே எதிர்பார்ப்பாகும்.

ஜே.எம்.ஜெஸார்.
செயற்றிட்டத் தலைவர்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| • பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| • பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| • கலைத்திட்டக்குழு | v |
| • ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | vi |
| அறிமுகம் | viii |
| தேசிய இலக்குகள் | ix |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | x-xii |
| 11ம் தர இஸ்லாம் பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | xiii |
| கற்றல் கற்பித்தல் முறை | xiii-xiv |
| பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | xv- xvi |
| கணிப்பீடும் மதிப்பீடும் | xvii |
| பாடத்திட்டம் | xviii-xxi |
| • கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் | 1-85 |

## 11.1.0 அறிமுகம்

மனிதன் உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றையும் உள்ளடக்கியவன். இவற்றுக்கிடையில் சமநிலை பேணப்படும்போதுதான், முழுமையான ஆளுமை விருத்தியடைய முடியும். இந்த நிலைப்பாட்டிலேயே இஸ்லாம் மனிதனின் ஆன்மீக, தார்மீக வாழ்வுக்கான வழிகாட்டல்களையும் போதனைகளையும் வழங்கியிருக்கின்றது.

இன்றைய உலகம், விஞ்ஞான தொழிநுட்ப சாதனங்களுக்கூடாக பெருவாரியான மாற்றங்களைக் கண்டு வருகின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி உடல், அறிவு என்பவற்றை போஷிக்கும் அதேவேளை ஆன்மீகத்தை புறக்கணிக்கின்றது. ஆன்மீக வாழ்வு புறக்கணிக்கப்பட்டதன் காரணமாக மனித வாழ்வு அமைதியையும் மகிழ்வையும் இழந்து நிற்கின்றது.

கவலை, மன இறுக்கம், விரக்தி முதலான உளநோய்கள் மனிதனில் வேரூன்றி வருகின்றன. மனித விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக வாழ்வதற்கான உரிமைகூட கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. சிந்தனைக்கன்றி உணர்வுகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கியதன் காரணமாக வன்முறை, கட்டற்ற நுகர்வு, சுரண்டல், மோசடி முதலானவை இறைவனை புறக்கணித்த வாழ்வுமுறைக்கு மனிதனைத் தள்ளிவிட்டுள்ளன.

இந்நிலையை அவதானித்து வரும் சிந்தனையாளர்களும் கல்வியியலாளர்களும் ஆன்மீகத்தினதும் விழுமியங்களினதும் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர். ஆன்மீக வறுமைக்குட்பட்டிருக்கும் மனித சமுதாயத்தை விடுவிக்கின்ற பயிற்சியை வழங்கும் பெரும் பணியை சமய பாடத்திடமும் அதனை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்களிடமும் எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் பின்னணியில் மனிதனின் தனிப்பட்ட, குடும்ப, சமூக, தேசிய வாழ்வு முறைகளில் சமயமும் அது சார்ந்த விழுமியங்களும் முக்கியத்துவம் பெற வேண்டிய தேவை எமது நாட்டிலும் உணரப்பட்டு வருகின்றது. நலிவுற்றிருக்கும் தார்மீக, ஆன்மீகப் பண்புகள், ஒழுக்க விழுமியங்கள் மீண்டும் வலுப்பெறுவதற்கான செயற்றிட்டங்களை வகுத்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை சமயத் தலைவர்கள் மட்டுமன்றி, கல்வியியலாளர்களும் உணர்த்தி வருகிறார்கள்.

வேகமாக மாறிவரும் உலகில் மானிடப் பெறுமானங்கள் தளர்ந்து விடாமல் பாதுகாப்பதற்கு கவர்ச்சிகரமான சமயப் போதனையும், ஆன்மீகப் பயிற்சியும் அவசர நடவடிக்கைகளாக விதந்துரைக்கப்படுகின்றன. எனவே, இஸ்லாம் பாடத்திற்கூடாகவும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, தேர்ச்சி என்பன விருத்தி செய்யப்பட்டு அவை நடைமுறை வாழ்வில் பிணைந்து கொள்ளும் அளவிற்கு இஸ்லாம் பாடக் கற்றல் கற்பித்தல் செயன்முறை இடம்பெற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்லாம் நிலையானதும், காலத்தால் மாறாததுமாகும். இருப்பினும் காலத்துக்கு பொருத்தமான வகையில் ஷரீஆவை கற்பதற்கான உத்திகளையும் அணுகுமுறைகளையும் கையாள்வதனை அது தடுக்கவில்லை. எதிர்கால சந்ததியினர் இஸ்லாத்தினது தூதின் ஒளியில் பயணிப்பதற்கான பயிற்சியையும் அனுபவத்தையும் வழங்கும் வகையில் இஸ்லாம் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்ந்த இலட்சியத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எமது ஆசிரியர்களே பிரதான பங்குதாரர்களாவர். எனவே ஆசிரியர்கள் தமது பணியையும் பங்களிப்பையும் விருத்திசெய்துகொள்வதற்காகத் தம்மைத் தயார்படுத்திச் செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

## 11.2.0 கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்கு தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*தேசிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கை (2003)*

## 11. 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

எழுத்தறிவு :கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு :பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல்.

சித்திர அறிவு :கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில் நுட்பத் தகைமை: கணனி அறிவு கற்றலில், தொழிலில், சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் nj hopy ; EI gq;f i s g; (ICT) பயன்படுத்துதல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

**சமூகச் சூழல்** : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும்சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

**உயிரியல் சூழல்** : வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத்தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii) கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்:**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமை யளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 11.3.0

## 11 ஆந் தர இஸ்லாம் பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. **அர்கானுல் ஈமான்**

   ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.

2. **அர்கானுல் இஸ்லாம்**

   இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.

3. **அல்அஹ்லாக் வத்தஸ்கிய்யா**

   இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையோருக்கும் வழி காட்டுவார்.

4. **அல்குர்ஆன் வஸ்ஸுன்னா**

   இஸ்லாத்தின் மூலாதாரங்களை அறிந்து, அவற்றின் போதனைகளை வாழ்வில் நடைமுறைப்படுத்துவார்

5. **அஸ்ஸீறா வத்தாரீஹ்**

   நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர் ராஷிதீன்களதும் வாழ்க்கை முறையை விளங்குவதோடு இலங்கை முஸஸ்லிம்களின் வரலாற்றையும் அவர்களின் தேசியப் பங்களிப்புகளையும் விரிவாக விளங்கி மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.

6. **அல்முஆமலாத்**

   பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமியப் போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமியக் கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.

7. **அல்மபாஹீமுல் இஸ்லாமிய்யா**

   ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.

## 11.5 கற்றல்- கற்பித்தல் முறை

கலைத் திட்டத்தில் சமய பாடம் மிக முக்கியமானதொன்றாகும். மாணவர் மிகவும் விரும்பத்தக்க விதத்தில் கவர்ச்சியாகவும் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் விதமாகவும் நடைமுறை வாழ்வில் பயிற்சிக்கு வரும் விதமாகவும் அதன் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும். மாணவர்களது ஆக்கத் திறன், கற்பனைத் திறன், தொடர்பாடல் திறன், சமூகத் திறன் ஆகியவற்றை வளர்த்து வெளிக்கொணரும் விதமாக கற்றல்- கற்பித்தல் முறை அமைய வேண்டும்.

குறிப்பாக, சமய பாடத்தைப் பொறுத்தவரை மாணவர்களின் மூளையை அறிவாலும் தகவல்களாலும் போஷிக்கச் செய்து பரீட்சை எழுதும் திறனை மாத்திரம் வளர்த்து விடுவது போதுமானதல்ல. மாறாக, மாணவரிடையே தெளிவானதும் நிலையானதுமான ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும். பொருத்தமான கற்றல்- கற்பித்தல் முறைகளைத் தெரிந்திருப்பது ஆசிரியரின் தலையாய பணியாகும். இதன்போது வயது, அனுபவம், சூழல், தனியாள் வேறுபாடு என்பவற்றைக் கருத்திற் கொள்வது வரவேற்கத்தக்கது.

இப்புதிய கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கு மாணவர்களை மையமாகக் கொண்டே இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. எனவே, புதிய கற்றல்- கற்பித்தலில் மாணவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும் விதமாக மாணவர்களது தொழிற்பாடுகள் மிகைத்துக் காணப்பட வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கில் ஆசிரியர் தனது மாணவரது தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்கள் எதிர்கொள்கின்ற இடர்பாடுகளை நிவர்த்தித்து உற்சாகமூட்டியும் திறமைகள், ஆற்றல்களுக்கு மதிப்பளித்து பாராட்டியும் நடந்து கொள்ள வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் முறைகள் சில தரப்பட்டுள்ளன.

- கலந்துரையாடல் முறை
- பங்கேற்றுக் கற்றல் முறை
- தகவல் திரட்டும் முறை
- கதை கூறல் முறை
- விரிவுரை முறை
- குழு முறை
- செய்து காட்டல் முறை
- பாத்திரமேற்று நடிக்கும் முறை
- சிந்தனைக் கிளர்வு முறை

இவ்வாறான முறைகளுடன் பாடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான மாணவர் மைய சூழலைத் தேர்ந்தெடுப்பது வரவேற்கத்தக்கது.
மாணவரின் கற்றலை மேம்படுத்த உதவும் வகையில் இஸ்லாமிய சஞ்சிகைகள், செய்தித் தாள்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், பத்திரிகை நறுக்குகள், வரைபடங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

மேலும் கற்றலை இலகுபடுத்தி கவர்ச்சிகரமானதாக்கிக் கொள்வதற்காக கற்றல்- கற்பித்தல் சாதனங்கள், பொருத்தமான இணையத்தளம் போன்றவற்றை தேவைக்கேற்ப பயன்படுத்துவது உசிதமானதாகும்.

மேலும் பாடசாலையிலும் சுற்றாடலிலும் நடைபெறுகின்ற சமய, கலாசார நிகழ்ச்சிகள், வேலைத் திட்டங்கள் போன்றவற்றில் மிகப் பொருத்தமானவற்றை இனங்கண்டு அவற்றில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்து பயன்பெற வழிகாட்ட முடியும்.

எனவே, மாணவர்கள் இஸ்லாம் பாடத்தை ஆர்வத்தோடு கற்று முன்மாதிரிமிக்க முஸ்லிமாகவும் நாட்டுக்கு நல்ல பிரஜையாகவும் வாழ்வதற்கான பயிற்சியை வழங்கும் விதத்தில் கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கை காத்திரமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் ஆசிரியர்கள் அமைத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## 11.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

எமது நாட்டின் கலைத்திட்டம் அறிவு வளர்ச்சி, திறன் விருத்தி, மனப்பாங்கு மாற்றம் என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்படுகின்றது.

இஸ்லாம் ஒரு வாழ்வு முறையாக அமைவதால் பாடசாலைச் சூழலில் மனப்பாங்கு மாற்றத்தையும் அதற்கூடாக செயற்பாட்டுச் சீர்மையையும் ஏற்படுத்துவதற்கான அறிவும் முறையான பயிற்சியும் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

- சமய, பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
- வெளிக்களப் பயணங்கள், கல்விச் சுற்றுலாக்கள் போன்றவற்றை ஒழுங்குசெய்து அவற்றின் மூலம் சமய, கலாசார மையங்களைத் தரிசிக்கச் செய்தலும் அவற்றுக்கு மதிப்பளித்தலும்.
- புத்தாக்க செயற்பாடுகளை உள்ளடக்கிய முஹர்ரம் புத்தாண்டை வரவேற்றல், ரமழான் மாதத்தை வரவேற்றல், மீலாத் தொடர்பான ஆக்க முயற்சிகளை மேற்கொள்ளல் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- இனங்காணப்பட்ட புத்தாக்கத் திறனுள்ள மாணவர்களின் திறமையை மேம்படுத்தும் வகையில் வளப்பங்களிப்புச் செய்யக் கூடியவர்களை வரவழைத்து செயலமர்வுகளை ஒழுங்கு செய்தலும் அவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தலும்.
- பாடசாலைச் சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல், அழகுபடுத்தல், பராமரித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக தனித்தனி மாணவக் குழுக்களை அமைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்தல்.
- தேசிய, சர்வதேச தினங்களை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தல்.
- இஸ்லாமிய நடைமுறைகளின் யதார்த்தபூர்வமான உண்மைகளைப் புரியவைத்து, மாணவர்கள் அவற்றை உணர்ந்து பின்பற்றுவதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

இத்தகைய பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்குப் பாடசாலை முறைமையிலுள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் முதலானோரின் பங்களிப்பு அவசியமாகின்றது. இப்பணியை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்குத் தேவையான பௌதிக, மனித வளங்களை இனங்கண்டு அவற்றின் மூலம் பாடசாலைச் சமூகம் பயன்பெறலாம்.

மேலும் குறித்த செயற்பாடுகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்து அதன் மூலம் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளில் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

இஸ்லாம் பாடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளின் கால நேரத்தைக் கவனத்திற் கொண்டு குறித்த நேரத்திற்குள் மாணவர்கள் கூடிய பயனைப் பெறும் வகையில் பாட ஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பாடத்துக்காக ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும்போது, இஸ்லாம் பாடத்துக்காக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இஸ்லாமிய ஷரீஆ கலாநிலையங்களில் தராதரம் பெற்றவர்கள், இஸ்லாமிய கலாசாரத்தை ஒரு பாடமாகக் கற்ற பட்டதாரிகள் என்போரை ஈடுபடுத்துவது பயன்மிக்கதாக அமையும்.

இந்தப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இஸ்லாமிய அறிவும், சிந்தனைத் தெளிவுமுள்ள, ஒழுக்க விழுமியங்களைப் பேணி நடக்கின்ற, நேர்முறையாகச் சிந்திக்கின்ற, நல்ல உள்ளங்கொண்ட சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனளிக்கக்கூடிய எதிர்கால சந்ததியை உருவாக்கும் பணியில் வெற்றி காணலாம்

## 11.8 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல்- கற்பித்தல் நடவடிக்கைகளுக்கூடாக மாணவர்களின் கற்றல் பேறுகளை அளவிடும் ஒரு வழிமுறையாகவே கணிப்பீடும் மதிப்பீடும் அமைகின்றது. இது ஒவ்வொரு பாட வேளையிலும் இடம்பெற வேண்டிய ஒரு செயன்முறையாகும்.

இஸ்லாம் பாட உள்ளடக்கத்தினூடாக மாணவரின் நடத்தை சார்ந்த பண்புகள், வணக்க வழிபாடுகள் மீது கொண்டுள்ள அக்கறை, சமய சமூக செயற்பாடுகளில் ஈடுபாடு போன்றன கணிப்பீடு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது வகுப்பறைக்குள்ளேயும் வகுப்பறைக்கு வெளியேயும் குறித்த தேர்ச்சியை அடைந்துள்ளாரா என முறைசார்ந்த அல்லது முறைசாராத வகைகளில் இடம்பெற முடியும்.

பாட ஆரம்பம் முதற்கொண்டே கணிப்பீடு செய்யப்பட்டு, இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு பரிகாரக் கற்பித்தலை உடனடியாக ஆரம்பிப்பது பயனுடையதாக அமையும். கணிப்பீட்டுக் கருவி ஆளுக்காள் வேறுபடுவதோடு இஸ்லாம் பாடம் தொடர்பான மதிப்பீடு, கற்றல் கற்பித்தல் முடிவுற்ற பின்பும் மாத, தவணை, ஆண்டு இறுதியிலும் வாய்மொழி வினாக்களுக்கூடாகவோ, எழுத்து மூலமாகவோ, வேலைத் திட்டங்களுக்கூடாகவோ இடம்பெற முடியும். இவற்றுக்குப் பொருத்தமான நியதிகள், வழிமுறைகளை நேர காலத்துடன் உருவாக்கிக் கொள்வது அவசியமாகும்.

இவை தவிர, ஸூறாக்கள், அத்கார்கள், ஹதீஸ்கள், துஆக்கள் முதலியவற்றின் எழுத்துக்கள் சரியாக உச்சரிக்கின்றனரா, மனனமிட்டுள்ளனரா, குறித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகின்றனரா என்பவற்றையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், கணிப்பீடும் மதிப்பீடும் மாணவர்களுக்குரியது மட்டுமன்றி, ஆசிரியர்களுக்கும் முக்கியமானது என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இஸ்லாம் பாடத்தில் மனப்பாங்கு தொடர்பான கணிப்பீட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானதாகும். பாடத்திட்டத்தில் இடம்பெறும் அல்குர்ஆன் ஸூறாக்கள், சந்தர்ப்ப துஆக்கள் என்பவற்றைக் கணிப்பீடு செய்யும்போது அறபு எழுத்துக்களின் உச்சரிப்பு, நீட்டல்- குறுக்கம், மனனமிட்டிருத்தல் போன்றன அவதானிக்கப்படல் வேண்டும். கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் கணிப்பீடும் மதிப்பீடும் தவிர்க்க முடியாதவை. ஏனெனில் கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றி- தோல்வி அதற்கூடாகவே தீர்மானிக்கப்படுகின்றது.

# பாடத்திட்ட உள்ளடக்கம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **1.0**<br>**அர்கானுல் ஈமான்**<br>ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார் | 1.1<br>அகீதாவின் பிரிவுகளையும் அவை தோன்றியமைக்கான காரணங்களையும் அறிந்து கூறுவார். | ● அகீதாவின் பிரிவுகள்<br>● அகீதாவில் பிரிவுகள் தோன்றியமைக்கான காரணங்கள் | • இஸ்லாமிய அகீதாவில் தோன்றிய பிரிவுகளை இனங்கண்டு கூறுவார்.<br>• இஸ்லாமிய அகீதாவில் பிரிவுகள் தோன்றிய கால சூழ்நிலையையும் வரலாற்றுப் பின்னணியையும் இனங்கண்டு கூறுவார்.<br>• அகீதாவில் பிரிவுகள் தோன்றியமைக்கான காரணங்களை விளக்குவார்.<br>• அகீதாவில் பிரிந்து செயற்படும் பிரிவினருடன் கருத்துப் பரிமாறுவார். | 02 |
| | 1.2<br>அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின அகீதா பற்றி தமது நம்பிக்கையை ஒப்புநோக்குவார். | ● அஹ்லுல் சுன்னத் வல் ஜமாஅத்தின் அகீதா<br>- அஹ்லுல் சுன்னத் வல் ஜமாஅத்துக்கு முரணானவை | • அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத் என்றால் யாது என்று வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா கோட்பாடுகள் எவை என்பதை இனங்கண்டு கூறுவார்.<br>• அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதாவுக்கு முரணான பிரிவுகளை அடையாளம் காண்பார்.<br>• குர்ஆன் ஸுன்னா அடிப்படையில் அகீதாவை விளங்கி அதனைக் கடைப்பிடிப்பார். | 02 |
| | 1.3<br>தவ்ஹீத் பற்றியும் அதற்கு முரணானவை பற்றியும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் பற்றியும் இனங்காண்பார் | ● தவ்ஹீத் - கோட்பாடு<br>● ஈமானையும் தவ்ஹீதையும் பாதிப்பவை<br>- இல்ஹாத்<br>- குப்ர்<br>- ஷிர்க்<br>- ரித்தத் | • தௌஹீத் கோட்பாடு என்றால் என்ன என்று கண்டறிந்து கூறுவார்.<br>• தௌஹீதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அல்குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்களை முன்வைப்பார்.<br>• தௌஹீதைப் பாதிக்கும் நம்பிக்கைகளும் செயற்பாடுகளும் எவை என்பதை இனங்கண்டு கூறுவார்.<br>• தௌஹீதுக்கு எதிரான அனைத்து செயற்பாடுகளையும் தவிர்த்து நடப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.4<br>இறுதி நபித்துவக் கோட்பாட்டை ஆதாரங்களுடன் நிருபித்துக் காட்டுவார் | ● இறுதி நபித்துவம்<br>- இறுதி நபித்துவ கோட்பாடு<br>- இறுதி நபித்துவத்தை மறுப்போர் | • நபி (ஸல்) அவர்களே இறுதி நபி என்பதற்கான ஆதாரங்களைக் கண்டறிந்து கூறுவார்.<br>• நபி (ஸல்) அவர்களின் இறுதி நபித்துவக் கோட்பாட்டை விசுவாசிப்பது ஈமானின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும் என்பதை நிருபித்துக் காட்டுவார்.<br>• இறுதி நபித்துவக் கோட்பாட்டை நிராகரித்து தாமும் நபி என வாதிட்டவர்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• இறுதி நபித்துவக் கோட்பாட்டை நிராகரிப்போர் முன்வைக்கும் ஆதாரங்களை தர்க்க ரீதியாக எதிர் கொள்வார். | 02 |
| | 1.5<br>பிரஞ்ச விதிகள் அல்லாஹ்வின் கத்ரின் படியே நிகழ்கின்றன என்பதை ஏற்று செயற்படுவார் | ● கத்ரும் பிரபஞ்ச விதிகளும் | • அல் கழா வல் கத்ர் என்ற பதங்களின் கருத்துக்களை விளங்கி எழுதுவார்.<br>• பிரபஞ்ச விதிகள் என்றால் என்ன என்பதை உதாரணங்களுடன் விவரிப்பார்.<br>• அல்லாஹ்வின் கத்ரின் படி நிகழும் பிரபஞ்ச விதிகளின் விளைவுகளை திருப்தியுடன் ஏற்றுக் கொள்வார்.<br>• கத்ரின் படி நிகழும் பிரபஞ்ச விதிகள் மத்தியில் தனது வாழ்வை சீரமைத்துக் கொள்வதற்காக தனக்கிருக்கும் செயற்சுதந்திரத்தை பயன்படுத்துவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **2.0**<br>**அர்கானுல் இஸ்லாம்**<br>இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார். | 2.1<br>ஸகாத்தின் முக்கியத்துவத்தையும் அதனை நிறைவேற்றும் வழிமுறைகளையும் அறிந்து எடுத்துக் கூறுவார். | • ஸகாத்<br>- ஸகாத்தின் முக்கியத்துவம் | • அடிப்படை வணக்கங்களில் ஸகாத்தும் ஒன்று என்பதை அறிந்து கூறுவார்.<br>• இஸ்லாத்தில் ஸகாத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி ஆதாரத்தோடு எடுத்துக் கூறுவார்.<br>• ஸகாத் கூட்டுக் கடமை என்பதை அறிந்து முன்வைப்பார்.<br>• தனிமனித, சமூக பொருளாதார சமநிலை பேணுவதில் ஸகாத்தின் பங்கு பற்றி அறிந்து கூறுவார்.<br>• ஸகாத் கூட்டுக் கடமை என்பதை விளங்கி நடைமுறைப்படுத்தத் தூண்டுவார். | 02 |
| | 2.2<br>ஸகாத் நிறைவேறறப்படும் முறைகளை, ஸகாத்தின் பயன்களையும் அறிந்து எடுத்துக் கூறுவார். | • ஸகாத் கூட்டுக் கடமை<br>- ஸகாத் விதியாகும் பொருட்கள்<br>• ஸகாத் பெறத் தகுதியானவர்கள் | • ஸகாத் விதியாகும் பொருட்களை அறிந்து கூறுவார்.<br>• ஸகாத் விதியாகும் பொருட்களுக்குரிய நிஸாப், கொடுபட வேண்டிய அளவு என்பவற்றை அறிந்து கூறுவார்.<br>• ஸகாத் பெறத் தகுதியானவர்களை அறிந்து முன்வைப்பார்.<br>• ஸகாத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகளை அறிந்து கூறுவார். | 02 |
| | 2.3<br>நோன்பின் பயன்களை அறிந்து கடைப்பிடித்து ஒழுகுவார். | • நோன்பின் தாற்பரியம் | • அடிப்படை வணக்கங்களில் நோன்பும் ஒன்று என்பதை அறிந்து கூறுவார்.<br>• நோன்பின் தாற்பரியங்களை அறிந்து கடைப்பிடித்து ஒழுகுவார்.<br>• நோன்பைக் கடைப்பிடித்து ஆன்மீக வலிமை பெறுவார்.<br>• நோன்பை ஈருலக வெற்றிக்குமான ஒரு சாதனமாகப் பயன்படுத்திக் கொள்வார் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.4.<br><br>ஹஜ், உம்றா ஆகிய கடமைகளின் முக்கித்துவத்தையும் அவற்றின் மூலம் கிடைக்கும் பயன்களையும் அறிந்து கூறுவார் | • ஹஜ்ஜும் உம்றாவும்<br>- சிறப்பும் பயன்களும்<br>- நிறைவேற்றும் முறை | • ஹஜ்,உம்றாக் கடமைகள் பற்றி அறிந்து கூறுவார்.<br>• ஹஜ்,உம்றா நிறைவேற்றப்படும் முறையினை அறிந்து கூறுவார்.<br>• ஹஜ், உம்றாக் கிரியைகளின் சிறப்பு பற்றி அறிந்து கூறுவார்.<br>• ஹஜ், உம்றா என்பவற்றின் பயன்கள் பற்றி கலந்துரையாடி கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார். | 02 |
| | | • புனிதஸ்தலங்கள்<br>- மஸ்ஜித் ஹரம் - நபவி<br>- மஸ்ஜிதுல் அக்ஸா | • மஸ்ஜிதுகள் முஸ்லிம்களது புனிதஸ்தலங்கள் என்பதனை அறிந்து கூறுவார்.<br>• புனித யாத்திரை மேற்கொள்ள முடியுமான மூன்று மஸ்ஜித்களையும் பற்றி அறிந்து விளக்குவார்.<br>• இம்மூன்று மஸ்ஜித்களும் அமைந்துள்ள இடங்கள் அருள் பொருந்திய இடங்கள் என நயந்து கூறுவார்.<br>• நபிமார்களது பணிகளோடும் வரலாற்றோடும் தொடர்புடைய இவ்விடங்கள் முஸ்லிம் உம்மாவிற்குச் சொந்தமான இடங்கள் என்பதை அறிந்து உணர்ந்து செயற்படுவார் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **3.0**<br>**அல் அக்லாக் வத்தஸ்கிய்யா**<br>இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கித் தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார். | 3.1.<br>இஸ்லாம்கூறும் நற்பண்புகளை அறிந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவார் | • நற்பண்புகள்<br>- பொறுமை<br>- வீரம்<br>- பணிவு<br>- மன்னிப்பு<br>- நீதி, நேர்மை | • ஒழுக்கப் பண்புகள் பற்றி இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளக்கிக் கூறுவார்.<br>• ஒழுக்கப் பண்புகளை கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• பொறுமை, வீரம், பணிவு, மன்னிப்பு, நீதி. நேர்மை முதலான நற்பண்புகளின் சிறப்பு பற்றிய அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களை முன்வைப்பார்<br>• பொறுமை, வீரம், பணிவு, மன்னிப்பு, நீதி. நேர்மை முதலான நற்பண்புகளை கடைப்பிடிப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகளை விளக்குவார். | 02 |
| | 3.2<br>ஒழுக்க மேம்பாட்டுக்கான வழிமுறைகளை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவார் | • ஒழுக்க மேம்பாடு<br>- முக்கியத்துவம் | • ஒழுக்க மேம்பாட்டுக்கு இஸ்லாம் வழங்கும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• ஒழுக்க மேம்பாடு மிக்க சமூகத்தை உருவாக்க நபி (ஸல்) அவர்கள் கையாண்ட வழிமுறைகளை விளக்குவார்.<br>• ஒழுக்கமிக்க சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகளை இனங்கண்டு கூறுவார்.<br>• ஒழுக்க வீழ்ச்சியினால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புக்களை அடையாளப்படுத்துவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.3. ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகளை அறிந்து செயற்படுவார். | • ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிகள்<br>- ஸப்ர்<br>- தவக்குல்<br>- மஹ்ரிபா | • ஆன்மீகம் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளக்குவார்.<br>• ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிகளாக ஸப்ர், தவக்குல், ம.்.ரிபா, றிழா தொடர்பாக இஸ்லாத்தின் போதனைகளை முன்வைப்பார்.<br>• ஆன்மீக மேம்பாட்டின் காரணமாக தனிமனித சமூக வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து கூறுவார்<br>• ஆன்மீக மேம்பாடு குறைவடையும் போது தனிமனித, சமூக வாழ்வில் ஏற்படும் பாதிப்புக்களை அடையளாப்படுத்துவார். | 02 |
| 4.0<br>**மஸாதிருஷ் ஷரீஆ**<br>இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் /வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார். | 4.1. சட்ட மூலாதாரமாக அல்குர்ஆனை ஏற்று ஒழுகுவார். | • அல்குர்ஆன்<br>- சட்ட மூலாதாரம்<br>- அல்குர்ஆனின் அற்புதம் | • 'சட்ட மூலாதாரம்' என்பதற்கான விளக்கத்தை முன்வைப்பார்.<br>• அல் குர்ஆன் சட்ட மூலாதாரம் என்பதற்கான நியாயங்களை எடுத்துக்காட்டுவார்.<br>• அல் குர்ஆனின் சட்டங்களுக்கு ஏற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்ள முன்வருவார்.<br>• அல் குர்ஆன் ஓர் அற்புதம் என்பதை பல்வேறு கோணங்களில் நிரூபித்துக் காட்டுவார். | 02 |

| | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.2.<br>ஸுன்னா தொகுக்கப்பட்ட வரலாற்றை அறிந்து கூறுவார். | ● ஸுன்னா<br>- சட்ட மூலாதாரம்<br>- தொகுக்கப்படல் | • அல்குர்ஆனிற்கு விளக்கமாக ஸுன்னா உள்ளது என்பதனை அறிந்து கூறுவார்.<br>• ஸுன்னா என்பது சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக்காட்டுவார்.<br>• ஸுன்னாவின் முக்கியத்துவத்தினை உணர்ந்து தனது வாழ்விலும் பிறர் வாழ்விலும் நபி (ஸல்) அவர்களின் வாழ்வைப் பின்பற்ற வழிசெய்வார்.<br>• ஹதீஸ் தொகுக்கப்பட்ட முறையினை படிமுறையாகவும் வரலாற்று ரீதியாகவும் முன்வைப்பார். | 02 |
| | 4.3.<br>இஜ்திஹாத் கோட்பாட்டை அறிந்து அதன் பிரயோகத்தின் தேவையை எடுத்துக் கூறுவார். | ● இஜ்திஹாத்<br>- இஜ்திஹாதின் தேவை<br>- இஜ்திஹாதும் முஜ்தஹிதீன்களும் | • 'இஜ்திஹாத்' என்பதன் பதவிளக்கத்தையும் கருத்தையும் தெளிவுபடுத்துவார்.<br>• இஜ்திஹாதின் தேவையை விளங்கி ஆதாரங்களுடன் முன்வைப்பார்.<br>• முஜ்தஹித்களின் பணியை கண்ணியத்துடன் நினைவுகூர்ந்து மாணவர்கள் முன் எடுத்து வைப்பார்.<br>• நவீனகால சட்டப் பிரசினங்களுக்குரிய இஜ்திஹாத் முடிவுகளைத் தேடிப் பெற்று தமது வாழ்விலும் பிறரது வாழ்விலும் நடைமுறைப்படுத்த முயற்சிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.4.<br>இஸ்லாமிய சட்டத்துறை பற்றியும் அதன் வளர்ச்சிக்குப் பங்காற்றிய இமாம்கள் பற்றியும் அறிந்து கூறுவார். | ● பிக்ஹுத்துறை<br>● பிக்ஹுத்துறை இமாம்கள் | • இஸ்லாமிய சட்டங்களைத் தெளிவுபடுத்தும் பிக்ஹ் கலை நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே முதலில் ஆரம்பித்தது என்பதனை எடுத்துரைப்பார்.<br>• இஸ்லாமிய சட்டத்துறையின் வளர்ச்சிக் காலகட்டங்களையும் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணிகளையும் அட்டவணைப்படுத்துவார்.<br>• பிக்ஹுத் துறை இமாம்களின் பணிகளை உணர்ந்து எடுத்துக்காட்டுவார்.<br>• முக்கிய பிக்ஹுத்துறை இமாம்கள் நால்வரினதும் புத்தகங்கள் மற்றும் பணிகள் பற்றி அட்டவணை ஒன்றை அமைத்துக் காட்டுவார். | 02 |
| **5.0**<br>**அஸ்ஸீறா வத்தாரீஹ்**<br>நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார். | 5.1.<br>அல்குலபாவுர் ராஷிதூன்கள் பற்றி அறிந்து அபூபக்ர் (ரழி) அவர்களின் தனிப்பட்ட, அரசியல் பங்களிப்புக்கள் பற்றி அறிந்து கூறுவார் | ● குலபாஉர் ராஷிதீன்கள்<br>- அபூபக்ர் (ரழி) அவர்கள் | • அல்குலாவுர்ராஷிதூன்கள் என்ற சொற்பிரயோகத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• கலீபா அபூபக்கர் அவர்களின் ஆளுமை பற்றி எடுத்துக்காட்டுவார்.<br>• அவர் கலீபாவாக தெரிவுசெய்யப்பட்ட முறையினை விபரிப்பார்.<br>• அவர் கிலாபத்திற்குச் செய்த பணிகளை பட்டியற்படுத்துவார். | 02 |
| | 5.2<br>உமர் (ரழி) அவர்களின் தனிப்பட்ட, அரசியல் பங்களிப்புக்கள் பற்றி அறிந்து கூறுவார் | - உமர் (ரழி) அவர்கள் | • உமர் (ரழி) அவர்களின் ஆளுமை பற்றி எடுத்துக் கூறுவார்.<br>• உமர் (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின்னணியையும் அதன் விளைவுகளையும் விபரித்துக் கூறுவார்.<br>• உமர் (ரழி) அவர்கள் கலீபாவாக நியமிக்கப்பட்ட முறையினையும், அவர் கிலாபத்திற்குச் செய்த சேவைகளையும் முன்வைப்பார்.<br>• உமர் (ரழி) அவர்கள் அறிமுகப்படுத்திய நிர்வாக அமைப்பை விளக்கிக் காட்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.3<br>உஸ்மான் (ரழி) அவர்களின் தனிப்பட்ட, அரசியல் பங்களிப்புக்கள் பற்றி அறிந்து கூறுவார் | - உஸ்மான் (ரழி) அவர்கள் | ● உஸ்மான் (ரழி) அவர்களின் ஆளுமை பற்றி எடுத்துக் கூறுவார்.<br>● உஸ்மான் (ரழி) அவர்கள் கலீபாவாக தெரிவுசெய்யப்பட்ட முறையினை விபரிப்பார்.<br>● உஸ்மான் (ரழி) அவர்கள் சமூகத்திற்கும், ஆட்சிக்கும் செய்த பங்களிப்புக்களை விளக்கி எழுதுவார்.<br>● உஸ்மான் (ரழி) அவர்கள் கிலாபத்தின் எதிர்நிலைகளை நேர்மைய சிந்தனையோடு எடுத்துக்காட்டுவார். | 02 |
| | 5.4<br>உஸ்மான் (ரழி) அவர்களின் தனிப்பட்ட, அரசியல் பங்களிப்புக்கள் பற்றி அறிந்து கூறுவார் | - அலி (ரழி) அவர்கள் | ● அலி (ரழி) அவர்களின் ஆளுமை பற்றி எடுத்துக் கூறுவார்.<br>● அலி (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற முறையையும் அவர் இஸ்லாத்திற்குச் செய்த சேவைகளையும் எடுத்துக்காட்டுவார்.<br>● அலி (ரழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்ட சூழ்நிலையையும், அவர் கிலாபத்துக்குச் செய்த சேவைகளையும் விபரிப்பார்.<br>● அவர் கிலாபத்தில் எதிர்நோக்கிய பிரச்சினைகளை விமர்சன ரீதியாக விளக்குவார். | 02 |
| | 5.5.<br>இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகிய வரலாற்றையும் முஸ்லிம்கள் தாய்நாட்டுக்கு ஆற்றிய பங்களிப்புக்கள் பற்றியும் அறிந்து கூறுவார. | ● இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்<br>- வரலாறு<br>- பங்களிப்பு<br>● முன்னோடிகள்<br>- அறிஞர் சித்திலெப்பை<br>- கலாநிதி ரீ.பீ. ஜாயா | ● அறபிகள் இலங்கையை அடைவதற்குச் சாதகமாக அமைந்த காரணிகளைக் கண்டறிந்து கூறுவார்.<br>● இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.<br>● இலங்கையில் முஸ்லிம்களின் பரம்பல் பற்றியும், அவர்கள் தாய்நாட்டுக்கு ஆற்றியுள்ள பங்களிப்புக்கள் பற்றியும் விளக்கமளிப்பார்.<br>● இலங்கை முஸ்லிம் முன்னோடிகள் இருவரின் பங்களிப்பை எடுத்துக்காட்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **6.0**<br>**அல் முஆமலாத்**<br>பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார். | 6.1<br>இஸ்லாம் தடைசெய்துள்ள உழைப்பு முறைகள் பற்றி அறிந்து கூறுவார். | ● உழைப்பின் போது தவிர்க்க வேண்டியவை<br>- ஏமாற்று<br>- பொய்ச் சத்தியம்<br>- பதுக்கல், வட்டி, ஹராமான பொருட்களை வாங்குதல், மற்றும் விற்றல் | ● தவறான உழைப்பு முறைகளை இனங்கண்டு கூறுவார்.<br>● தவறான உழைப்பின் மூலம் பிறர் அடையும் துன்பங்களை உணர்ந்து அதிலிருந்து விலகி நடப்பார்.<br>● தவறான முறையில் உழைக்க முற்படும் ஒருவர் ஈருலகிலும் அடையும் நட்டங்களை எடுத்துக் கூறுவார்.<br>● தவறான உழைப்பு முறைகளில் இருந்து விலகி நடக்க பிறரைத் தூண்டுவார். | 02 |
| | 6.2<br>இஸ்லாமிய வங்கி முறை பற்றிய எண்ணக்கருவை அறிந்து கூறுவார். | ● இஸ்லாமிய வங்கி முறைமை | ● இஸ்லாமிய வங்கி முறை பற்றிய எண்ணக்கருவை விளக்கிக் கூறுவார்.<br>● இஸ்லாமிய வங்கிக்கும் மரபுரீதியான வங்கிக்கும் இடையேயுள்ளவேறுபாடுகளை பட்டியற்படுத்துவார்.<br>● இஸ்லாமிய வங்கிச் செயன்முறையின் அவசியம் குறித்து உரையாற்றுவார்.<br>● இஸ்லாமிய வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்து செயற்படுத்த முன்வருவார். | 02 |
| | | ● திருமணம் - முக்கியத்துவம்<br>- குடும்ப வாழ்வு | ● திருமணத்தின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் ஆதாரங்களுடன் விளக்கிக் கூறுவார்.<br>● நிகாஹிற்கான சட்டதிட்டங்களை விளங்கி எழுதுவார்.<br>● திருமணத்தில் இணைந்துள்ள மார்க்கத்திற்கு முரணான அம்சங்களை இனங்கண்டு கூறுவார்.<br>● திருமணம் ஓர் இபாதத் என்பதை ஏற்று ஒழுகுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.4<br><br>இஸ்லாமிய குடும்ப அமைப்பை அறிந்து பிற்பற்றுவார். | • முன்மாதிரி முஸ்லிம் குடும்பம் | • இஸ்லாமியக் குடும்பம் என்றால் என்ன என்பதை வரையறைசெய்வார்.<br>• குடும்ப வாழ்வின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் குர்ஆன் சுன்னா ஒளியில் அறிந்து கூறுவார்.<br>• குடும்ப வாழ்வுக்கான இஸ்லாமிய நோக்கங்களை அறிந்து செயற்படுவார்.<br>• குடும்ப வாழ்வின் நோக்கங்களை அறிந்து கொள்வதற்கான திட்டங்களை வகுத்து செயற்படுவார். | 02 |
| | 6.5<br><br>தலாக் பற்றிய இஸ்லாமிய சட்டவிதிகளை அறிந்து கூறுவார். | • விவாக விடுதலை<br>- தலாக்<br>- தலாக்கின் வகைகள் | • இஸ்லாத்தில் விவாகரத்தின் நிலைப்பாட்டை விளக்கிக் கூறுவார்.<br>• தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களிலேயே விவாகரத்து அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார்.<br>• விவாகரத்தின் வகைகளை விளக்கி எழுதுவார்.<br>• விவாகரத்தின் பாதிப்புக்களை மதிப்பிடுவார். | 02 |
| | 6.6<br><br>இத்தா பற்றிய இஸ்லாமிய சட்டவிதிகளை அறிந்து கூறுவார். | - இத்தா - விதிமுறைகள் | • இத்தா என்றால் என்ன என்பது பற்றி விளக்கிக் கூறுவார்.<br>• இத்தா பற்றி முஸ்லிம் சமூகத்திடையே காணப்படும் பிழையான செயன்முறைகளை விளங்கித் தடுப்பார்.<br>• இத்தாவின் போது தவிர்க்க வேண்டியவற்றை எடுத்துக் கூறுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **7.0**<br>**மபாஹிமுல் இஸ்லாமிய்யா.**<br>ஒவ்வொரு அம்சம் பற்றியும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார். | 7.1<br>பிரபஞ்சம், மனிதன், வாழ்வு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தை அறிந்து வாழ்வை ஒழுங்கமைத்துக்கொள்வார். | ● இஸ்லாமிய கண்ணோட்டம்<br>- பிரபஞ்சம்<br>- மனிதன்<br>- வாழ்வு | ● பிரபஞ்சம். மனிதன், வாழ்வு பற்றிய உலக நோக்கே ஒரு சமூகத்ததை அல்லது நாகரிகத்தை இனங்காட்டும் என்பதை அறிந்து கூறுவார்.<br>● பிரபஞ்சத்தின் தோற்றம், இயக்கம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளங்கி வாழ்வொழுங்கை அமைத்துக்கொள்வார்.<br>● மனிதனின் பிரதான பணிகள் மூன்றையும் வகைப்படுத்தி இனங்கண்டு கூறுவார்.<br>● இம்மை, மறுமைக்கான விளைநிலம் என்பதை அறிந்த உலக வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வார். | 02 |
| | 7.2<br>ஊடகங்களை உரிய முறையில் பயன்படுத்தவார். | ● ஊடகமும் இஸ்லாமும் | ● ஊடகங்களின் பயன்பாடு தொடர்பாக அறிந்து கூறுவார்.<br>● ஊடகங்களை வகைப்படுத்தி அவற்றின் வளர்ச்சி பற்றி விபரிப்பார்.<br>● நவீன ஊடகங்களின் சாதக பாதங்களை வகைப்படுத்திக் கூறுவார்.<br>● ஊடகங்களைப் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய இஸ்லாமிய விழுமியங்களை முன்வைப்பார். | 02 |
| | 7.3<br>முஸ்லிம் உம்மத் பற்றிய எண்ணக்கருவை அறிந்து கூறுவார். | ● முஸ்லிம் உம்மத் | ● உம்மத் என்பதை வரையறுத்து விளக்குவார்.<br>● முஸ்லிம் உம்மத்தின் சிறப்பம்சங்களை பட்டியற்படுத்துவார்.<br>● முஸ்லிம் உம்மத் உருவாகி வளர்ந்த பின்னணியை விளக்கிக் கூறுவார்.<br>● முஸ்லிம் உம்மத்தின் பணியை ஏனைய சமூகத்தின் பணிகளுடன் ஒப்பிட்டு எழுதுவார். | 02 |

# கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான வழிகாட்டல்கள்

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : அகீதாவின் பிரிவுகளையும் அவை தோன்றியமைக்கான காரணங்களையும் அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாமிய அகீதாவின் தூய்மையை விளக்கிக் கூறுவார்.
- இஸ்லாமிய அகீதாவில் பிரிவுகள் தோன்றிய கால சூழ்நிலையையும் வரலாற்றுப் பின்னணியையும் இனங்கண்டு கூறுவார்.
- அகீதாவில் பிரிவுகள் தோன்றியமைக்கான காரணங்களை விளக்குவார்.
- அகீதாவில் பிரிந்து செயற்படும் பிரிவினருடன் கருத்துப் பரிமாறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- அகீதா என்ற சொல்லின் பதவிளக்கத்தைக் கூறி அல்குர்ஆனும் ஸுன்னாவுமே அதன் அடிப்படைகள் என்பதை எடுத்துக் காட்டுங்கள்.
- அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் விட்டு விட்டு பகுத்தறிவையோ அல்லது மூட நம்பிக்கைகளையோ அடிப்படையாகக் கொண்டு மறைவான விடயங்கள் பற்றிச் சிந்திக்கும் போது பல்வேறு கருத்து மோதல்கள் தோன்றும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- இஸ்லாமிய அகீதாவில் பிரிவுகள் தோன்றிய பின்னணியும் அவ்வாறானதே என்பதை உறுதிப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
  - இஸ்லாமிய அகீதா கோட்பாடு குர்ஆன் சுன்னா ஆகியவற்றுக்கு முரணற்ற விதத்தில் அமைய வேண்டும்.
  - இஸ்லாமிய வரலாற்றின் பிற்பட்ட காலங்களில் முஸ்லிம் சமூகத்திற்குள் உருவான அரசியல் ரீதியான உட்பூசல்கள், அந்நிய சிந்தனைகள், சமயப் பிரிவுகளுடன் ஏற்பட்ட உறவுகள், தொடர்புகள் மற்றும் பகுத்தறிவுச் சிந்தனையின் தாக்கம் முதலான காரணங்களால் இஸ்லாமிய அகீதா அதன் எளிமைத் தன்மையை இழந்தது.
  - அதன் விளைவாக காலப்போக்கில் அகீதாவை மையமாகக் கொண்ட பல சிந்தனைப் பிரிவுகள் தோற்றம் பெற்றன.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:
  - நபி (ஸல்) அவர்களது காலத்திலும் கலீபாக்கள் காலத்திலும் அகீதாவை விளங்குவது தொடர்பான எந்த சிக்கல்களும் காணப்படவில்லை.
  - அக்காலங்களில் குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் வெளியில் சென்று சிந்திக்கவோ, செயற்படவோ யாரும் துணியவும் இல்லை, அவ்வாறான தேவை ஏற்படவுமில்லை.
  - அலி (ரழி) அவர்களின் இறுதிக் காலத்தில் எழுந்த அரசியல் பிரச்சினைகளும் இஸ்லாத்துக்கு எதிரான திட்டமிட்ட சூழ்ச்சிகளும் முஸ்லிம் உம்மத்தில் கவாரிஜ், ஷீயா ஆகிய சிந்தனைப் பிரிவுகள் தோன்றக் காரணமாயின.
  - அலி (ரழி), முஆவியா (ரழி) ஆகியோரிடையே எழுந்த பிரச்சினையின் போது இருவரும் ஒருவரின் தீர்ப்பை ஏற்றதனால் பெரும் பாவம் இழைத்தனர். எனவே அவர்கள் நரகில் நிரந்தரமாக தங்குவர் எனக் கூறி ஸஹாபாக்களை எதிர்த்தவர்கள்தான் கவாரிஜ்கள்
  - நபி (ஸல்) அவர்களுக்குப் பின் அலி (ரழி) அவர்களுக்குச் செல்ல இருந்த கலீபாப் பதவியை அபூபக்ர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி) ஆகியோர் அபகரித்துக் கொண்டனர் என்பதும், இமாமிய்யத் கோட்பாடு, தகிய்யாக் கோட்பாடு, முத்ஆ திருமணம் என்பனவும் ஷீஆக்களின் முரண் நம்பிக்கைக்கு உதாரணங்களாகும்.
  - உமையாக் கால சாம்ராஜ்யப் பரவல், அப்பாசியக் கால அறிவியல் மறுமலர்ச்சி போன்ற காரணிகளால் சிலர் இஸ்லாமிய அகீதாவை ஏனைய சமய சித்தாந்தங்களுடன் ஒப்பு நோக்கிப் பார்க்க முயற்சித்த போது மெய்யியல் சார்ந்த அம்சங்கள் இஸ்லாமிய அகீதாவில் தோற்றம் பெற்றன.
    - ஈமான் என்பது நம்பிக்கை மட்டுமா அல்லது நம்பிக்கையும் செயலும் இணைந்ததா?
    - அல்லாஹ்வின் தாத்தும், ஸிபாத்தும் ஒன்றா அல்லது இரண்டும் வேறுபட்ட அம்சங்களா?
    - மனிதன் செயற் சுதந்திரம் கொண்டவனா, செயற் சுதந்திரம் அற்றவனா?
    - பெரும் பாவம் செய்தவரின் நிலைப்பாடு யாது?

      அல்லாஹ்வின் கலாம் (அல்குர்ஆன்) படைக்கப்பட்டதா இல்லையா?
    - வஹி முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடன் முற்றுப் பெற்று விட்டதா இல்லையா?
  - இவ்விடயங்கள் தொடர்பில் வளங்கப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் பல்வேறு கருத்துக்களைக் கொண்ட சிந்தனைப் பிரிவுகள் தோன்றின.

- கவாரிஜ் - ஷீஆ - மு∴தஸிலா
- ஜஹ்மிய்யா - முர்ஜிஆ - அஹமதிய்யா

- இக்கொள்கைகளுக்கு எதிராக அல்குர்ஆன், ஸுன்னா அடிப்படையில் அறிவு பூர்வமாக இஸ்லாமிய அகீதாவை நிறுவும் முயற்சிகளை இஸ்லாமிய அறிஞர்கள் மேற்கொண்டனர்.
- அவர்களுள் இமாம் அஹ்மத், இமாம் தஹாவி, அபுல் ஹஸன் அஷ்அரி, இமாம் மாத்ரூதி ஆகியோர் குறிப்பிடத் தக்கோராவர்.
- மு∴தஸிலாக் கொள்கைக்கு எதிராகப் போராடியதினால் கடும் துன்பங்களுக்கு உள்ளாகிய இமாம் அஹ்மத் அவர்கள், ''நான் உயிருடன் இருந்து இஸ்லாம் மடிவதை விட இஸ்லாம் உயிருடன் இருந்து தான் மடிவது சிறந்தது'' என்ற கூற்று மிகவும் பிரசித்தமானதாகும்.
- கருத்து முரண்பாடுகள் தோன்றும்போது திறந்த மனதுடன் கலந்துரையாடுவது, உண்மை தெளிவானதும் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வது என்பன பிரிவுகளும் முரண்பாடுகளும் தோன்றாமலிருப்பதற்கான வழியாகும்.
- இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தைப் போன்றே அல்குர்ஆன் ஸுன்னாவின் அடிப்படையில் எமது அகீதாவை விளங்கி, முஸ்லிம் உம்மத் ஒன்றுபடுவது காலத்தின் தேவையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** ''இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் அகீதா ரீதியான பிரிவுகள் தோன்றவில்லை. பிற்பட்ட காலங்களிலேயே தோற்றம் பெற்றன'' இக்கூற்று சரியானதா பிழையானதா என இனங்கண்டு உங்களது கருத்துக்கான காரணங்களை கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-02** கவாரிஜ், ஷீஆ ஆகிய பிரிவுகள் தோன்றியமைக்கான காரணங்களை கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-03** அகீதாவில் எவ்வாறான சர்ச்சைகள் தோன்றின என்பதற்கு ஆறு உதாரணங்களை கலந்துரையாடி முன்வையுங்கள்.

**குழு-04** அகீதாவில் முரண்பாடுகள் தோன்றியமை துரதிஷ்டமானது. இதனைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ள முடிந்த நடவடிக்கைகளை கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

அகீதாவை பாதிக்கும் சிந்தனைகளிலிருந்து பாதுகாப்புப் பெற வீட்டில் பேண வேண்டிய வழிமுறைகளை அறிந்து கடைப்பிடிக்கவும் அது தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடவும் வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 : அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின அகீதா பற்றி தமது நம்பிக்கையை ஒப்புநோக்குவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத் என்றால் யாது என்று வரைவிலக்கணப்படுத்துவார்.
- அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா கோட்பாடுகள் எவை என்பதை இனங்கண்டு கூறுவார்.
- அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதாவுக்கு முரணான பிரிவுகளை அடையாளம் காண்பார்.
- குர்ஆன் ஸுன்னா அடிப்படையில் அகீதாவை விளங்கி அதனைக் கடைப்பிடிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- மாணவர்களிடம் பின்வரும் வினாக்களை வினவிப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
  - வஹி முஹம்மத் (ஸல்) அவர்களுடன் முற்றுப் பெற்றதா இல்லையா?
  - ஈமான் என்றால் நம்பிக்கை மட்டுமா அல்லது செயலும் சேர்ந்ததா?
  - மனிதன் செயற் சுதந்திரம் பெற்றவனா, செயற் சுதந்திரம் அற்றவனா?
  - அல்குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தையா அல்லது படைப்பா?
  - ஷிர்க் அல்லாத ஏனைய பெரும் பாவங்கள் செய்தவனை அல்லாஹ் மன்னிப்பானா, இல்லையா?
  - நபியவர்களுக்குப் பின் அபூபக்ர் (ரழி) கலீபாவானதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா, இல்லையா?
- இவ்வினாக்களுக்கு சுதந்திரமான முறையில் விடையளிக்க மாணவர்களைத் தூண்டுங்கள்
- பின்வரும் விடயங்களின் பக்கம் மாணவர்களது கவனத்தை ஈர்த்தெடுங்கள்.
  - அஹ்லுஸ் ஸுன்னா என்பது நபியவர்ளின் ஸுன்னாவைப் பின்பற்றுவோர் என்றும் ஜமாஆ என்பது பெரும் தொகை என்றும் மொழிரீதியான கருத்தாகும்.
  - நபித் தோழர்களும் அவர்களை அடியொட்டி வாழ்ந்த ஸலபுஸ் ஸாலிஹீன்களும் கொண்டிருந்த தூய அகீதாவைப் பின்பற்றுவோர் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ எனப்படுகின்றனர்.
  - அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினரின் அகீதா அல்குர்ஆன் ஸுன்னாவின் அடிப்படையில் அமைந்ததாகும்.

- அஹ்லுஸ்ஸுன்னாவுக்கு முரணான பிரிவுகள் பகுத்தறிவு, அல்லது மூட நம்பிக்கைகள், அல்லது சூழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டமைந்தமையாகும்.
- இல்முல் அகீதாவைப் பற்றிய சரியான அறிவையும் தெளிவையும் பெறுவதிலேயே ஒருவரின் ஈருலக வெற்றி தங்கியுள்ளது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:
    - அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினரின் நம்பிக்கையின் படி

- அல்லாஹ் பூரண அறிவும், ஆற்றலும், அழகும் பெற்றவன். அவனுக்கு ஒப்பாக எதுவுமே கிடையாது. அவனை எந்த ஒன்றைப் போலவும் கற்பனை செய்யக் கூடாது. முழுப்பிரபஞ்சத்தையும் தனது கட்டளைப்படி இயக்குகின்றான். அல்லாஹ்வைப் பார்ப்பது மறுமையில் நல்லடியார்களுக்குக் கிடைக்கப் பெறும் பேரின்பங்களில் முதன்மையானதாகும்.
- அல்குர்ஆன் அல்லாஹ்வின் கலாம் (வார்த்தை) ஆகும். அதன் மூலம் அதற்கு முன்புள்ள வேதங்கள் செல்லுபடியற்றவையாகி விட்டன.
- பெரும் பாவம் செய்த முஸ்லிம் பாவியாவான். ஆனால் காபிரல்ல. எனவே அவர் தனது பாவத்திற்கு ஏற்ற தண்டனையை நரகில் பெறுவான். ஆனால் அங்கு நிரந்தரமாகத் தங்க மாட்டான்.
- முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இறுதி நபியாவார்கள். அவர்களுக்குப் பின்னர் வேறொரு நபி வரப்போவதில்லை. அவர்களின் தூது மனித, ஜின் வர்க்கங்களுக்குப் பொதுவானதாகும்; இறுதியானதாகும்.
- ஸஹாபாக்கள் மு∴மின்களில் உயர்ந்தவர்களாவர். அஹ்லுல் பைத் எனும் நபியவர்களின் குடும்பத்தினரையும் அவர்களது மனைவிமார்களையும் கௌரவிக்க வேண்டும்.
- ஸஹாபாக்களில் அபூபக்ர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி) அலி (ரழி) ஆகியோர் முறையே சிறப்பிடம் பெறுகின்றனர்.

- நபியவர்களுக்குப் பின் ஆட்சி செய்த கலீபாக்கள் நியாயமான முறையில் தமது பதவியைப் பெற்று நீதியான முறையில் ஆட்சி செய்தோராவர்.

- அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தைச் சேராதோர் மேற் கூறப்பட்ட விடயங்களில் வெவ்வேறான மாற்றுக் கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

- அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினருக்கு மாற்றமான பிரிவினர், அவர்களது முரண்பாட்டின் தன்மைக்கு ஏற்பவும், அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத் பற்றிய அவர்களது கருத்துக்கு ஏற்பவும், வழிகேடர்கள், காபிர்கள், முர்தத்கள் என நோக்கப்படுகின்றனர்.

- அல் அஷ்அரிய்யா, அல் மாத்ருதிய்யா ஆகியன அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆவின் அகீதாவைப் பாதுகாப்பதற்காக தோன்றிய இயக்கங்களாகும்.
- ‘ஈமான்’ என்றால் அமலும் இணைந்ததே. அமல் இல்லாத ஈமானும் ஈமான் இல்லாத அமலும் ‘ஈமான்’ என்று ஏற்கப்படுவதில்லை.
- மனிதன் செயற் சுதந்திரம் பெற்றவன். எனவே மனிதன் செய்யும் நல்லவற்றுக்கும் தீயவற்றுக்கும் ஏற்ப அவனுக்கு வெகுமதிகளும், தண்டனைகளும் உண்டு.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-01 அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ என்ற சொற்றொடரின் மொழி ரீதியான விளக்கம், அதன் மூலம் அழைக்கப்படுவோர் யாவர் என்பவற்றை விளக்குங்கள்.

குழு-02 அல்லாஹ், அல்குர்ஆன் தொடர்பில் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினரின் நிலைப்பாட்டை விளக்கி, அவை தொடர்பில் எழுந்த மாற்றுக் கருத்துக்களையும் எழுதுங்கள்.

குழு-03 முஹம்மத் நபி (ஸல்), கலீபாக்கள், தொடர்பில் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத், ஷீயா, இறுதி நபித்துவத்தை மறுப்போர் ஆகியோரது கருத்துக்களை அட்டவணைப்படுத்துங்கள்.

குழு-04 அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ சிந்தனைகளுக்கும், முரண்பட்ட சிந்தனைப் பிரிவுகளுக்குமிடையிலான வேறுபடுகளை உதாரணங்காட்டி விளக்குங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

முஹம்மத்(ஸல்) அவர்களுக்கும் மற்றொரு நபி வருவதற்கான எத்தகைய தேவையும் இல்லை என்பதற்கான நியாயங்கள் குறித்து பெற்றோருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 : தௌஹீத் பற்றியும் அதற்கு முரணானவை பற்றியும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் பற்றியும் இனங்காண்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- தவ்ஹீத் கோட்பாடு என்றால் என்ன என்று கண்டறிந்து கூறுவார்.
- தவ்ஹீதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்களை முன்வைப்பார்.
- தவ்ஹீதைப் பாதிக்கும் நம்பிக்கைகளையும் செயற்பாடுகளையும் இனங்கண்டு கூறுவார்.
- தவ்ஹீதுக்கு எதிரான அனைத்து செயற்பாடுகளை விட்டும் தவிர்ந்தும் நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- அழகுற ஓதும் ஒரு மாணவன் மூலம் ஸூரா இக்லாஸை ஓத வைத்து அது ஏன் ''இக்லாஸ்'' (தூய்மை) என்ற பெயரில் அழைக்கப்படுகிறது என்பதை சுருக்கமாக விளக்கிப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களின் பக்கம் மாணவர்களது கவனத்தை ஈர்த்தெடுங்கள்.
    - இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் தவ்ஹீத் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.
    - தவ்ஹீதுக்கு எதிர்ப்பதம் ஷிர்க் என்றும் ஈமானுக்கு எதிர்ப்பதம் குப்ர் என்றும் அழைக்கப்படுகின்றது.
    - இல்ஹாத், குப்ர், ஷிர்க், ரித்தத் என்பன ஈமானையும் தவ்ஹீதையும் பாதிப்பவைகளாகும்.
    - அல்லாஹ் எந்தப் பாவத்தை மன்னித்தாலும் தவ்ஹீதுக்கு எதிரான குற்றங்களை மன்னிக்கமாட்டான்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:

  - ‘தவ்ஹீத்’ என்ற சொல் ‘வாஹித்’ எனும் வேர்ச் சொல்லில் இருந்து பிறந்தது. ‘வாஹித்’ ஒன்று, ஒருவன் எனும் கருத்துக்களையும் ‘வஹ்ஹத’ ஒன்றாக்கினான், தனிமைப்படுத்தினான் என்ற கருத்துக்களையும் ‘தௌஹீத்’ ஒருமுகப்படுத்தல், ஓரிறைக் கொள்கை எனும் கருத்துக்களையும் தருகின்றன.

  - இஸ்லாமிய பரிபாசையில் தௌஹீத் என்றால் பிரபஞ்சம் முழுவதையும் படைத்துப் போசிப்பவன் அல்லாஹ் மட்டுமே, அவன் தனித்தவன், அவனுக்கு இணை துணை கிடையாது. அவன் ஆதி அந்தம் இல்லாதவன். சந்ததிகள் அற்றவன், படைப்புக்களுக்கு ஒப்பாகாதவன், ஆற்றலும் வல்லமையும் மிக்கவன், அவன் மாத்திரமே வணங்கி வழிபட தகுதியானவன் என்று நம்பி செயற்படுவதாகும்.

  - அல்லாஹ்வுக்காக மட்டும் என்ற கலப்படமற்ற எண்ணம் இக்லாஸ் எனப்படுகிறது. அவ்வாறே அல்லாஹ்வின் ஏகத்துவத்தைப் பற்றி மட்டுமே கூறும் ஸூரா ‘ஸூரா இக்லாஸ்’ எனப்படுகின்றது.

  - அல்குர்ஆனின் பல வசனங்கள் தவ்ஹீதை வலியுறுத்துகின்றன.

    (அல் கஹ்ப் : 109) (அன்பியா : 56, 57) (அல் இஸ்ரா : 40, 44)

  - நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “ மனிதர்கள், அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை. நான் அல்லாஹ்வின் தூதர் என்று சாட்சியம் கூறும் வரை அவர்களுடன் போராடுமாறு ஏவப்பட்டுள்ளேன்” (புகாரி)

  - படைப்பாளன் ஒருவன் இல்லை என்றும் இப்பிரபஞ்சமும் அதில் உள்ள அனைத்தும் தானாக உருவாகியவை என்றும் நம்பும் நாத்திகத்தை அரபியில் இல்ஹாத் எனப்படுகிறது.

  - ஜாஹிலிய்யாக் காலத்திலும் இத்தகைய நம்பிக்கை உடையோர் வாழ்ந்துள்ளனர். இவர்கள் காலம் தான் அனைத்துக்கும் காரணம் என்றனர்.

  - “நாம் இறக்கின்றோம் ஜீவிக்கின்றோம் காலம் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை” (அல்ஜாஸியா : 24)

  - ‘இல்ஹாத்” அல்லாஹ்வையும் மறைவான விடயங்களையும் ஏற்க மறுப்பதன் காரணமாகவும், இறைவன் குறித்தும் மறைவானவை குறித்தும் தமது மனோ இச்சைப்படி நம்புவதாலும் அது ஈமானையும் தவ்ஹீதையும் பாதிக்கும் ஓர் அம்சமாகும்.

  - குப்ர் என்றால் அதன் நேரடிப் பொருள் நிராகரித்தல் என்பதாகும்.

  - இஸ்லாமிய பரிபாசையில் இஸ்லாமிய நம்பிக்கைகளையும் செயன்முறைகளையும் மறுப்பதும் அவற்றை மாற்றியமைக்க முயற்சிப்பதும் குப்ர் ஆகும்.

  - குப்ரை ஏற்படுத்தும் வழிமுறைகளை மூன்றாக வகுக்கலாம்.

      - நம்பிக்கை சார்ந்தவை.

- சொல் சார்ந்தவை.
- செயல் சார்ந்தவை.

- அல்குர்ஆனும் ஸுன்னாவும் குப்ர் விடயத்தில் முஸ்லிம்களை எச்சரிக்கின்றது. (முஹம்மத் : 1) (முஹம்மத் : 8-9)
- ஈமான் கொண்டு பின் நிராகரித்து மீண்டும் ஈமான் கொண்டு அதன் பின் மறுபடியும் நிராகரித்துச் செல்லும் மனிதனை அல்லாஹ் ஒரு போதும் மன்னிக்கமாட்டான். (அந்நிஸா : 137)
- ஷிர்க் என்பது தௌஹீதின் எதிர்ச் சொல்லாகும். இணையாக்குதல், கூட்டுச் சேர்த்தல் என்பது இதன் பொருளாகும்.
- அல்லாஹ்வின் தெய்வீகத் தன்மையில் எவருக்கேனும் எச்சக்திக்கேனும் பங்குண்டு என்று நம்புதல் அல்லது அத்தகைய நம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையில் எச்செயலையேனும் செய்தல் 'ஷிர்க்' எனப்படும்.
- ஷிர்க்கில் ஈடுபடுபவர் முஷ்ரிக் என அழைக்கப்படுவார்.
- ஷிர்க்கை இரு வகையாக பிரித்து நோக்கலாம்.
    1. ஷிர்க்குல் அக்பர் - பெரிய ஷிர்க்
    2. ஷிர்க்குல் அஸ்கர் - சிறிய ஷிர்க்
- வணங்குதல், பிரார்த்தித்தல், நேர்ச்சை வைத்தல், அறுத்துப் பலியிடல் போன்ற அல்லாஹ்வுக்கு மாத்திரம் செய்ய வேண்டிய கிரியைகளையும் வழிபாடுகளையும் அல்லாஹ் அல்லாதவற்றுக்காகச் செய்தல் ஷிர்குல் அக்பர் (பெரிய ஷிர்க்) ஆகும்.
- இப்பெரிய ஷிர்கில் ஈடுபடுவோரின் எந்த அமலையும் அல்லாஹ் அங்கீகரிப்பதில்லை.
- நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கவே மாட்டான். இது அல்லாத குற்றத்தை (அதுவும்) தான் விரும்பியவர்களுக்கே மன்னிப்பான். ( அந்நிஸா : 116)
- சிறிய ஷிர்க் பெரிய ஷிர்குடன் ஒப்பிடும் போது பாரதூரத்தில் குறைந்ததாயினும் பெரும் பாவங்களை விடப் பெரியதாகும்.
- தொடர்ந்து சிறிய ஷிர்கில் ஈடுபடும் ஒருவர் தௌபா செய்யாத நிலையில் காபிராக மரணிக்க இடமுண்டு என இமாம்கள் கூறுகின்றனர்.
- அல்லாஹ் அல்லாதவை மீது சத்தியம் செய்தல், சூனியம் செய்தல், சாஸ்திரம் பார்த்தல், குறிகேட்டல், சகுனம் பார்த்தல் போன்றன சிறிய ஷிர்க் வகையைச் சேர்ந்ததாகும்.
- ரித்தத் என்பது திரும்பி விடுதல், பின்னோக்கிச் செல்லல் எனப் பொருள்படும்.
- இதனை இஸ்லாத்தை விட்டும் நீங்குவதைக் குறிக்கப் பயன்படுத்துகின்றோம்.

- பெரிய ஷிர்க்கையும் குப்ரையும் உண்டாக்கும் செயல்களைச் செய்து தனது நிலைப்பாடு சரியானது எனப் பகிரங்கப்படுத்தும் போது அது ரித்தத் எனக் கருதப்படுகின்றது.
- முர்தத்துடன் உள்ள சகல தொடர்புகளையும் முஸ்லிம் சமூகம் துண்டித்துக் கொள்ளும். இவர் அறுத்த பிராணியை உண்ண முடியாது. இவரது மனைவி தானாகவே தலாக் பெற்று விடுகிறாள். இவர் மீண்டும் இஸ்லாத்தில் நுழையாத நிலையில் மரணித்தால் முஸ்லிம் மையவாடியில் இவரை அடக்கம் செய்ய முடியாது. இஸ்லாமிய ஆட்சியில் முர்தத், தேசத் துரோகி போன்று நடத்தப்படுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** தவ்ஹீத் கோட்பாடு பற்றி தெளிவாக விளங்கி அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்களை முன்வையுங்கள்.

**குழு-02** இல்ஹாத், குப்ர் ஆகிய இரண்டையும் விளக்கி அவை எவ்வாறு ஈமானைப் பாதிக்கின்றன என்பதை தெளிவுபடுத்துங்கள்.

**குழு-03** ஷிர்க், ரித்தத் என்பவற்றை விளக்கி அவற்றினால் எற்படும் பாதிப்புக்களை பட்டியற்படுத்துங்கள்.

**குழு-04** தவ்ஹீதுக்கு எதிரான அம்சங்களையும் அவற்றின் பிரிவுகளையும் பாய்ச்சல் கோட்டு வரைபு மூலம் விளக்குங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

சமுதாயத்தில் பரவிக் காணப்படும் சிறியவகை ஷிர்க்குகளையும் அவற்றை தவிர்த்துக்கொள்வதற்கு மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகள் குறித்தும் பெற்றோருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.4 : இறுதி நபித்துவக் கோட்பாட்டை ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நபி (ஸல்) அவர்களே இறுதி நபி என்பதற்கான ஆதாரங்கைளக் கண்டறிந்து கூறுவார்.
- நபி (ஸல்) அவர்களின் இறுதி நபித்துவக் கோட்பாட்டை விசுவாசிப்பது ஈமானின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும் என்பதை நிரூபித்துக் காட்டுவார்.
- இறுதி நபித்துவக் கோட்பாட்டை நிராகரித்து தாமும் நபி என வாதிட்டவர்களைப் பட்டியற்படுத்துவார்.
- இறுதி நபித்துவக் கோட்பாட்டை நிராகரிப்போர் முன்வைக்கும் வாதங்களுக்கு தர்க்க ரீதியாக பதிலளிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- مَّا كَانَ مُحَمَّدٌ أَبَآ أَحَدٍ مِّن رِّجَالِكُمْ وَلَٰكِن رَّسُولَ ٱللَّهِ وَخَاتَمَ ٱلنَّبِيِّـۧنَ ۗ وَكَانَ ٱللَّهُ بِكُلِّ شَىْءٍ عَلِيمًا ﴿٤٠﴾

  ஸூரா அஹ்ஸாபின் 40 ஆவது வசனத்தைக் காட்சிப்படுத்தி அதில் வரும் 'காதம்' என்ற சொல்லின் கீழ் கோடிடுங்கள். வசனத்தை சொல் சொல்லாக மொழி பெயர்த்துக் காட்டி பாடப் பிரவேசம் செய்யுங்கள்.

  இறுதி நபித்துவம் பற்றிய மாணவர்களின் கருத்துக்களை சுதந்திரமாக முன்வைக்க ஊக்கப்டுத்துங்கள்.

- பின்வரும் விடயங்களின் பக்கம் மாணவர்களது கவனத்தை ஈர்த்தெடுங்கள்.
  - குர்ஆனும் ஹதீஸூம் முஹம்மத் (ஸல்) அவர்களே இறுதி நபி என்பதை உறுதிப்படுத்துகின்றன.
  - நபியவர்களின் இறுதி நபித்துவக் கோட்பாட்டை நிராகரிப்பது குப்ராகும்.
  - இறுதி நபித்துவக் கோட்பாட்டுக்கு எதிரான கருத்துக்கள் முஸ்லிம் சமூகத்தைப் பிளவுபடுத்திப் பலவீனப்படுத்துபவையாகும்.
  - இறுதி நபித்துவத்துக்கு எதிராக உள்ளோர் முன்வைக்கும் ஆதாரங்கள் குர்ஆன் ஸுன்னாவுக்கும் தர்க்க ரீதியான சான்றுகளுக்கும் முரணானவையாகும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:
    - முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இறுதித் தூதரும் இறுதி நபியும் ஆவார் என்பதற்கு குர்ஆனும் ஹதீஸ் ஆதாரங்களும் உள்ளன.
    - (நம்பிக்கையாளர்களே) உங்களில் உள்ள ஒருவருக்கும் முஹம்மத் (நபி அவர்கள்) தந்தையாக இருக்கவில்லை. எனினும் அவர் அல்லாஹ்வுடைய தூதராகவும் நபிமார்களுக்கு (இறுதி) முத்திரையாகவும் (இறுதி நாபியாகவும்) இருக்கிறார். (ஆகவே அவருக்குப் பின்னர் யாதொரு தூதரையும் அனுப்பமாட்டான்) அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாக இருக்கிறான். (அஹ்ஸாப் : 40)
    - நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : தானும் அல்லாஹ்வின் தூதர் என வாதிக்கும் 30 பொய்யர்கள் தோன்றாதவரை மறுமை நிகழாது. நான் நபிமார்களுக்கு முத்திரை (இறுதி) ஆவேன். எனக்குப் பின் எந்த ஒரு நபியும் வரமாட்டார். (அபூ தாவூத்)
    - நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "எனக்கும் ஏனைய நபிமார்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு அழகுற எழுப்பப்பட்ட ஒரு பெரிய மாளிகையை ஒத்ததாகும். அதில் ஒரு செங்கல் இடைவெளி பூர்த்தி செய்யப்படாமல் இருந்தது. அதைச் சுற்றிப் பார்த்து பிரமிப்படைந்த மக்கள் அந்த சிறு பகுதி பூர்த்தி செய்யப்படவில்லையே எனக் குறை கூறினர். நான் அந்த இடத்தை அடைந்தேன். என்னைக் கொண்டு கட்டடம் பூர்த்தியாகியது. என்னைக் கொண்டு நபித் தொடர் வரிசை முற்றுப் பெற்றது." (புகாரி)
    - "நான் நபிமார்களுக்கு இறுதியாவேன். எனது இந்தப் பள்ளி, பள்ளிவாசல்களுக்கு இறுதியானதாகும்." (முஸ்லிம்)
    - குர்ஆனினதும் ஹதீஸினதும் தெளிவான இக்கருத்துக்களின் அடிப்படையில் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் இறுதி நபித்துவத்தை விசுவாசிப்பது முக்கியமானதாகும். அதை மறுப்பதோ மாற்றுக் கருத்துக் கொள்வதோ குப்ருக்கு இட்டுச் செல்லும் செயலாகும்.
    - முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்குப் பின் பலர் தாமும் நபியென வாதிட்டு முஸ்லிம்கள் மத்தியில் பிளவுகளை உண்டாக்க முயற்சித்தனர்.
    - அஸ்வத் அன்ஸி, முஸைலமா, துலைஹா, ஸஜா, மிர்ஸா குலாம் போன்றோர் அத்தகையோராவர்.

- அஸ்வத் அன்ஸி தன்னை நபியென வாதிட்டமைக்காக நபி (ஸல்) அவர்களின் காலத்திலும், முஸைலமா அபூபக்ர் (ரழி) அவர்களின் காலத்திலும் கொலை செய்யப்பட்டனர்.
- நபியவர்களின் இறுதி நபித்துவத்துக்கு பலமான ஆதாரமாக அமையும் (அஹ்ஸாப் : 40) வசனத்தில் வந்துள்ள ''காதம்'' என்ற சொல் தரும் இறுதி என்ற கருத்தை நிராகரித்து முத்திரை, சிறப்பு என்று மொழி பெயர்க்கின்றனர்.
- அனைத்து அரபு அகராதிகளும் ''காதம்'' என்ற சொல் இறுதி என்ற கருத்தைத் தருவதாகவே குறிப்பிடுகின்றன.
- 'காத்தம்' என்ற சொல்லை முத்திரை என்ற கருத்தில் மாத்திரம் மொழி பெயர்த்தாலும் அது தானாகவே இறுதி என்ற கருத்தைத் தருகிறது. ஏனெனில் நபிமார்களின் முத்திரை எனும் போது முஹம்மத் நபியவர்கள் மூலம் நபித் தொடருக்கு முத்திரை இடப்பட்டுவிட்டது இதன் பின் யாருக்கும் நபித்துவ வாதம் புரிய முடியாது என்ற கருத்தைத் தருகின்றது.
- நபியவர்களின் இறுதி நபித்துவத்தை மறுப்பதனால் முஸ்லிம்கள் பிளவுபட்டு செல்வதுடன் மறுமையில் நபியவர்களின் ஷபாஅத்தையும் பெற முடியாமல் போகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** நபி (ஸல்) அவர்கள் இறுதி நபி என்பதற்கு ஆதாரமான குர்ஆன் வசனங்களையும் ஹதீஸ்களையும் தொகுத்து எழுதுங்கள்.

**குழு-02** முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்குப் பின் போலி நபிமார்கள் வருவதை உறுதிப்படுத்தும் ஹதீஸை கூறி, அவ்வாறு வந்த போலி நபிமார்களின் பெயர்களை வரிசைப்படுத்துங்கள்.

**குழு-03** 'காதம்' என்ற சொல் மொழியியல் ரீதியில், தர்க்க ரீதியாகவும் இறுதி என்ற கருத்தையே தருகின்றது என்பதை விளக்குங்கள்.

**குழு-04** இறுதி நபித்துவத்தை மறுப்பதால் ஏற்படும் ஆன்மிக, லௌஹிகப் பாதிப்புக்களை குறிப்பிடுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்குப் பின் மற்றொரு நபி வரமாட்டார் என்பதற்கான பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களை பெற்றோருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.5 : பிரபஞ்ச விதிகள் அல்லாஹ்வின் கத்ரின் படியே நிகழ்கின்றன என்பதை ஏற்றுக் கொள்வார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ‘அல் கழா வல் கத்ர்’ என்ற பதங்களின் கருத்துக்களை விளங்கி எழுதுவார்.
- பிரபஞ்ச விதிகள் என்றால் என்ன என்பதை உதாரணங்களுடன் விவரிப்பார்.
- அல்லாஹ்வின் கத்ரின் படி நிகழும் பிரபஞ்ச விதிகளின் விளைவுகளை திருப்தியுடன் ஏற்றுக் கொள்வார்.
- கத்ரின் படி நிகழும் பிரபஞ்ச விதிகளுக்கு மத்தியில் தனது வாழ்வை சீரமைத்துக் கொள்வதற்காகத் தனக்கிருக்கும் செயற்சுதந்திரத்தை பயன்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- مَآ أَصَابَ مِن مُّصِيبَةٍ فِي ٱلْأَرْضِ وَلَا فِيٓ أَنفُسِكُمْ إِلَّا فِي كِتَٰبٍ
  مِّن قَبْلِ أَن نَّبْرَأَهَآ ۚ إِنَّ ذَٰلِكَ عَلَى ٱللَّهِ يَسِيرٌ ﴿٢٢﴾

  ஸூரா ஹதீதின் 22 ஆவது வசனத்தினை ஓதிக் காண்பித்து அதன் பொருளை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.
- உலக மாற்றங்களையும் நிகழ்வுகளையும் எடுத்துக்கூறி அவற்றை தடுப்பவர்கள் யாரும் உண்டா என வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களின் பக்கம் மாணவர்களது கவனத்தை ஈர்த்தெடுங்கள்.
  - எந்த ஒரு விடயமும் அது நடப்பதற்கு முன்னரே அல்லாஹ் எழுதி வைத்துள்ளான் என்பதே முஸ்லிமின் நம்பிக்கையாகும்.
  - இரவு பகல் வருதல். இயற்கை அனர்த்தங்கள், மரணம் ஏற்படல் என தொடரும் அனைத்து செயல்களும் ஏற்கனவே எழுதப்பட்டவையாகும்.
  - கத்ரை அல்லாஹ் மாத்திரமே அறிவான். அவன் தவிர வேறு யாரும் எதிர்காலம் தொடர்பான அறிவைப் பெற்றவர்களல்லர்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:
    - கழா எனும் அரபுச் சொல் படைத்தல், தீர்ப்பளித்தல், நிறைவேற்றல் என்ற கருத்திலும் கத்ர் என்ற சொல் நிர்ணயித்தல், முன்னேற்பாடு, மட்டிடுதல் எனும் பெருளிலும் வழங்கப்படுகின்றன.
    - நபியவர்கள் கூறினார்கள் : ''தன் படைப்புக்களில் முதலாவதாக எழுதுகோலைப் படைத்த அல்லாஹ் அதனிடம் ''எழுதுவாயாக'' எனக் கூறினான். ''என் றப்பே! எதை எழுத வேண்டும்'' எனக் கேட்டது. அல்லாஹ் ''கத்ரை எழுதுவாயாக'' எனப் பதில் அளித்தான். அன்று முதல் கியாம நாள்வரை இவ்வுலகில் நிகழும் சகல விடயங்களும் பதிவு செய்யப்பட்டன. நன்மையையும் தீமையையும் உள்ளடக்கிய இக்கத்ரை கொண்டு விசுவாசம் கெள்ளாவதவர்களை அல்லாஹ் நெருப்பினால் பொசுக்குவான்.
    - ஏராளமான பிரபஞ்ச நியதிகள் காணப்படுகின்றன. அவற்றுக்கேற்பவே இப்பிரபஞ்சம் இயங்கிக் கொண்டிருக்கிறது. உதாரணத்துக்காக சில

    - ஒரு பொருளை மேலே எறிந்தால் அது மீண்டும் கீழே விழுகிறது.
    - பூமியைச் சூழ உள்ள வளிமண்டலப் படையாகிய மாறன் மண்டலத்தில் மேலே செல்லச் செல்ல வெப்பம் குறைவடைகிறது.
    - எந்த ஒரு பெருளுக்கும் ஓர் எதிர்த்தாக்கம் உண்டு.
    - திரவமான ஒரு பொருள் வெப்பம் ஏற்றப்படும் போது வாயு நிலையை அடைகிறது.

    - பிரபஞ்ச நியதிகள் அனைத்தும் அல்லாஹ்வின் கட்டளைகளாகும் ஏழு கடல்களின் நீரை மையாக மாற்றினாலும் எழுதி முடிக்க இயலாத அளவு அதிகமானதாகும். (அல்கஹ்ப் : 109)
    - பிரபஞ்சத்தில் மிகச் சிறிய ஓர் உறுப்பாகிய இப்புவியின் அனைத்து இயக்கங்களும் பிரபஞ்ச நியதிகளுக்கு அமையவே நிகழ்கின்றன.
    - அல்லாஹ் புவியில் உள்ள வளங்கள் யாவற்றையும் மனிதனுக்காகவே படைத்துள்ளான்.
    - மனித வாழ்வில் அல்லாஹ்வின் விதிகள் இரு விதமாகச் செயல்படுகின்றன.

1. பிரபஞ்ச நியதிக்கு அமைவானவை.

(உ-ம்) மனிதனது பிறப்பு, இறப்பு, உடற் தொழிற்பாடுகள், ஏற்படும் இலாபம், நஷ்டங்கள் போன்றன.

2. மனிதனது தெரிவுச் சுதந்திரத்திற்கு அமைவானவை.

(உ-ம்) நல்லது தீயதைத் தெரிவு செய்கின்றமை, விளைவை அடைய வேண்டுமாயின் முயற்சித்தல், தனது தேவைகளைத் தானே நிறைவேற்றிக் கெள்ளல், நீதியை நிலைநாட்டுதல் போன்றன.

- ஒவ்வொரு மனிதனும் அவனது தெரிவுச் சுதந்திரத்திற்கு உட்பட்ட எல்லைக்குள் அவற்றைச் செய்வான் என்பதையும் அல்லாஹ் நன்கறிந்துள்ளான். அல்லாஹ்வின் அறிவு சிறிதும் பிழையாகாது.
- அல்லாஹ் எழுதி வைத்ததும் அவனது அறிவால் எடை போட்டதுமே கத்ர் ஆகும்.
- கத்ரை சரியான முறையில் விசுவாசிக்கும் மனிதன் ஆறுதல் அடைவான். அத்துடன் முயற்சியுடன் செயற்படுவான்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** அல் கழா, அல்கத்ர் ஆகிய இரு பதங்களின் மொழிக் கருத்தையும் விரிந்த கருத்தையும் எழுதுங்கள்.

**குழு-02** அல்லாஹ்வின் கத்ரின் படி நிகழும் பிரபஞ்ச நியதிகள் சிலதை ஆராய்ந்து எழுதுங்கள்.

**குழு-03** மனித வாழ்வில் அல்லாஹ்வின் விதிகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

**குழு-04** இஸ்லாமிய அடிப்படையில் விதியை நம்பும் மனிதனுக்கும் விதியை நம்பாத மனிதனுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை அடையாளப்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

உமது பெற்றோர் அல்லது உறவினர்கள் எதிர்கொண்ட ஒரு பெரும் துன்பமான நிகழ்வின் போது அல்லாஹ்வின் கழாகத்ரை முன்வைத்து எவ்வாறு ஆறுதல் பெற்றீர்கள் என்பதை பற்றி வீட்டாருடன் கலந்துரையாடி அவற்றை வகுப்பறையில் முன்வைக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 : ஸகாத்தின் முக்கியத்துவத்தையும் அதனை நிறைவேற்றும் வழிமுறைகளையும் அறிந்து எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஸகாத் ஒரு அடிப்படை வணக்கமாகும் என்பதை அறிந்து கூறுவார்.
- ஸகாத்தின் முக்கியத்துவத்தை ஆதாரத்தோடு வலியுறுத்திக் கூறுவார்.
- ஸகாத் கூட்டுக் கடமை என்பதை அறிந்து முன்வைப்பார்.
- தனிமனித, சமூக பொருளாதார சமநிலை பேணுவதில் ஸகாத்தின் பங்கு பற்றி அறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- خُذْ مِنْ أَمْوَالِهِمْ صَدَقَةً تُطَهِّرُهُمْ وَتُزَكِّيهِم بِهَا وَصَلِّ عَلَيْهِمْ إِنَّ صَلَوٰتَكَ سَكَنٌ لَّهُمْ وَٱللَّهُ سَمِيعٌ عَلِيمٌ ﴿١٠٣﴾

  ‘‘(நபியே!) அவர்களின் செல்வங்களில் இருந்து ஸகாத்தை எடுத்து, அதனால்அவர்களை உள்ளும் புறமும் தூய்மைப்படுத்துவீராக!’’(அத்தவ்பா :103)

  ‘‘மக்கள், அல்லாஹ் ஒருவன் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என மொழிந்து தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் கொடுக்கும் வரை நான் அவர்களோடு போராட ஏவப்பட்டுள்ளேன்’’ (புகாரி, முஸ்லிம்)

  மேலேயுள்ள குர்ஆன், ஹதீஸ் வசனங்களினூடாக ஸகாத் பற்றி மாணவரிடம் வினவுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
  - ஸகாத் எனும் சொல்லுக்கு மொழி ரீதியான கருத்துக்களும், ஷரீஆ அடிப்படையிலான கருத்தும் உண்டு.
  - அடிப்படை வணக்கங்களில் ஒன்றான ஸகாத் பல்வேறு முக்கியத்துவங்களைக் கொண்டுள்ளது.
  - ஸகாத்தை கூட்டுக் கடமையாக நிறைவேற்றும்போது நிறைய நன்மைகள் கிடைக்கும் என நிறுவப்பட்டுள்ளது.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:
    - ஸகாத் என்ற அரபுப் பதத்திற்கு தூய்மை, வளர்ச்சி, அபிவிருத்தி எனும் மொழிக்கருத்துக்கள் உண்டு.
    - ஸகாத் என்பது முஸ்லிமான செல்வந்தர்கள் மீது அவர்களது செல்வங்களில் குறிப்பிடப்பட்டவைகள் மீது அதற்குரிய நிஸாப் / காலத்தை அடைந்ததன் பின்னர் குறித்த வீதத்தில் அறவிட்டு அல்குர்ஆன் கூறும் எட்டுக் கூட்டத்தாரிடையே பகிர்ந்தளிக்கப்படும் வகையில் அமைந்த ஒரு இபாதத் ஆகும்.
    - அடிப்படை வணக்கங்களில் ஸகாத்தும் ஒன்று என்ற வகையில் அதன் முக்கியத்துவத்தைக் குர்ஆனும் ஸுன்னாவும் எடுத்துக் கூறுகின்றன.

      “தொழுகையை நிலைநாட்டுங்கள், ஸகாத்தைக் கொடுங்கள்” (அல் பகரா : 110)

      “ஸகாத்தை செலுத்தாத மக்களுக்கு வானம் மழை பொழியாது கால் நடைகள் இல்லையெனில் பூமிக்கு மழையே கிடைக்காது” (இப்னு மாஜா)
    - ஸகாத்தின் முக்கியத்துவத்தை ஸஹாபாக்களது நடைமுறைகளும், தாபிஈன்களதும், அதன் பின்வந்தோரதும் ஈடுபாடுகளும் வலியுறுத்தி நிற்கின்றன.
    - ஸகாத்தை வழங்குபவர், பெறுபவர், சமூகம் ஆகியன பெற்றுக்கொள்ளும் நன்மைகள் அதன் முக்கியத்துவத்திற்கு எடுத்துக்காட்டாகும்.
    - ஸகாத் தொழுகையுடன் இணைத்து குர்ஆனின் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.
    - ஸகாத்தை வழங்க மறுப்பவர் முர்தத்தாக கணிக்கப்பட்டுள்ளமையும், அதனைக் கொடுக்க மறுப்போருக்கெதிராக போரிட இஸ்லாம் அனுமதித்துள்ளமையும் அதன் முக்கியத்துவத்திற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும்.
    - இஸ்லாமியப் பொருளியல் கோட்பாட்டின் அடிப்படை அம்சமாக ஸகாத் இருக்கின்றமை அதன் முக்கியத்துவத்திற்கு மற்றொரு எடுத்துக் காட்டாகும்.
    - தக்வாவுடையோரின் பண்புகளை வர்ணிக்கும் அல்குர்ஆன் அதில் ஒரு பண்பாக ஸகாத்தையும் குறிப்பிடுகின்றது.
    - ஸகாத் கூட்டுக் கடமை என்பதற்கான நியாயங்கள் பல உண்டு

- சமூக வாழ்வின் பொருளாதார மேம்பாடுகள் ஒருபோதும் கூட்டமைப்பின்றி செவ்வனே நிறைவேற்ற முடியாது.
- ஸகாத்தின் இலக்குகளை அடைய கூட்டமைப்பு அவசியமாகும்
- ஸகாத்தை சேகரித்து பாதுகாத்து விநியோகிப்பதற்கு ஒரு கட்டமைப்பு அவசியமாகும்.
- ஸகாத் பெறத் தகுதியானவர்களில் ''ஆமிலூன்'' என்ற சகாத் சேகரிப்பவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளமையும் இதனையே வலியுறுத்துகின்றது.
- நபி (ஸல்) அவர்கள், ஸஹாபாக்கள், தாபிஊன்கள், பின்வந்தோர் கூட்டாகவே ஸகாத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார்கள்.
- தனி நபர்களது செல்வப்பற்று, அறியாமை, ஸகாத்தை தனித்து நிறைவேற்றும் தேவையுடையோரைப் பாதிக்கச் செய்யும்.
- ஸகாத்தை செல்வந்தர்கள் நேரடியாக வழங்கும் போது அவர்களது கெடுபிடிகளுக்கு வறியோர் உட்பட நேரிடும், சுய கௌரவமும் பாதிக்கப்படலாம்.
- ஸகாத் சேகரிப்பு, களஞ்சியப்படுத்தல், பாதுகாத்தல், விநியோகித்தல் மிகச் சரியாக இடம் பெற ஒரு கூட்டுமுயற்சி அவசியமாகும்.
- இஸ்லாம் மார்க்கமாகவும், அரசாகவும் இருப்பதனால் அதன் நிதி, நிருவாக ஒழுங்குக்கு ஸகாத் கூட்டாக நிறைவேற்றப்படுவது அவசியமாகும்.
- தனித்து ஒருவர் நிறைவேற்றும் பணிகளைவிட கூட்டாக நிறைவேற்றும் பணிகள் மூலம் கூடுதல் பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** ஸகாத் அடிப்படை வணக்கங்களில் ஒன்று என்பதை ஆதாரபூர்வமாக அறிந்து எழுதுங்கள்.

**குழு-02** ஸகாத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களை பிரிஸ்டல் அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

**குழு-03** ஸகாத்தின் முக்கியத்துவம் பற்றிய பொதுவான கருத்துக்களை திரட்டி வகுப்பறையில் முன்வையுங்கள்.

**குழு-04** ஸகாத் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டிய கடமை என்பதற்கான ஆதாரங்களை திரட்டி எழுதி, வகுப்பில் அதனை முன்வையுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

ஸகாத்தின் முக்கியத்துவம் தொடர்பான கருத்துக்களை பெற்றோருடன் பகிர்ந்து அவர்கள் ஸகாத் மூலம் அடைந்த நன்மைகளை பரிமாறிக்கொள்ள வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 : ஸகாத் நிறைவேறறப்படும் முறைகளை, ஸகாத்தின் பயன்களையும் அறிந்து எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஸகாத் விதியாகும் பொருட்களை அறிந்து கூறுவார்.
- ஸகாத் விதியாகும் பொருட்களுக்குரிய நிஸாப், கொடுக்க வேண்டிய அளவு என்பவற்றை கணித்துக் கூறுவார்.
- ஸகாத் பெறத் தகுதியானவர்களை அறிந்து பட்டியலிட்டு விபரிப்பார்.
- ஸகாத்தினால் பெற முடியுமான நன்மைகளை அறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ٱلشَّيْطَٰنُ يَعِدُكُمُ ٱلْفَقْرَ وَيَأْمُرُكُم بِٱلْفَحْشَآءِ ۖ وَٱللَّهُ يَعِدُكُم مَّغْفِرَةً مِّنْهُ وَفَضْلًا ۗ وَٱللَّهُ وَٰسِعٌ عَلِيمٌ ﴿٢٦٨﴾

  ‘‘நீங்கள் தர்மம் செய்ய முற்படும் போது ஷைத்தான் உங்களை வறுமையைக் கொண்டு பயமுறுத்தி மானக் கேடானதைச் செய்யும் படி உங்களைத் தூண்டுகிறான். ஆனால் அல்லாஹ்வோ(நீங்கள் தர்மம் செய்யும் போது) அவனிடமிருந்து பாவமன்னிப்பையும், மேலதிகமான அருள்களையும் உங்களுக்குத் தருவதாக வாக்களிக்கிறான்’’ (அல்பகரா : 268)

  என்ற ஆயத்தை கூறி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.

- ஸகாத் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
  - முஸ்லிம் செல்வந்தர்கள் மீது ஸகாத் விதியாகின்றது.
  - பல்வேறு விதமான செல்வங்களில் ஸகாத் விதியாகின்றது.
  - ஸகாத் விதியாவதற்கு ‘‘நிஸாப்’’ (ஆரம்ப அளவு) உண்டு.
  - ஸகாத் குறித்த வீதத்தில் குறித்த காலத்தை அடைந்ததும் அறவிடப்படுகின்றது.
  - ஸகாத் எட்டுக் கூட்டத்தினரிடையே பகிரப்படுகின்றது.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி கலந்துரையாடுங்கள்:
    - ஸகாத் விதியாகும் ஒரு பொருளை, அதற்குரிய ஸகாத் விதியாகும் அளவில் சொந்தமாகப் பெற்றுள்ள சுதந்திரமான முஸ்லிமின் மீது குறித்த பொருளுக்குரிய ஸகாத்தை வழங்குவது கடமையாகும்.
    - தானிய வகை, கால்நடைகள், வியாபாரப் பொருட்கள், பழவகைகள், தங்கம், வெள்ளி, புதையல், பணம், கனிப்பொருட்களென பல்வேறு வகையான செல்வங்களில் ஸகாத் விதியாகின்றது.
    - செல்வங்களில் ஒவ்வொரு வகையான பொருட்களுக்கும் ஸகாத் விதியாவதற்குரிய நிஸாப் உண்டு.
    - சில செல்வங்களுக்கு வருடம் பூர்த்தியானதும், வேறு சிலவற்றுக்கு அறுவடை செய்த பின்னரும் புதையல் போன்றவை கிடைத்தவுடனும் ஸகாத் விதியாகின்றது.
    - ஒவ்வொரு வகையான செல்வங்களுக்கும் அறவிடப்படும் வீதமும் வித்தியாசமானதாகும்.
    - இவ்விதிமுறைகளுக்கு அமைய கடமையான முறையில் அறவிட்டு எடுத்துக்கொள்ளப்படும் ஸகாத் குர்ஆன் கூறும் எட்டுக் கூட்டத்தினரிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது.

      ''(ஸகாத் என்னும்) தானங்கள் பக்கீர்களுக்கும், மிஸ்கீன்களுக்கும், அதன் உத்தியோகத்தர்களுக்கும், இஸ்லாத்தின்பால் இணக்கமானோருக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்கும், கடனில் மூழ்கியிருப்பவர்களுக்கும், அல்லாஹ்வுடைய பாதையில் போராடுவதற்கும், வழிப்போக்கர்களுக்கும்(உரித்தானதாக)அல்லாஹ் ஏற்படுத்திய கடமையாகும். அல்லாஹ் மிக்க அறிந்தோனும் ஞானமுடையோனுமாயிருக்கிறான்.'' (தௌபா : 60)
    - ஸகாத் பெறுவதற்கு தகுதியற்றவர்களும் உள்ளார்கள்.
    - ஸகாத்தின் மூலம் அதனை வழங்குபவர்களும், பெறுபவர்களும், சமூகமும் பல்வேறு விதமான நன்மைகளைப் பெறுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** ஸகாத் விதியாகும் பொருட்கள், அவற்றின் நிஸாப் என்பவற்றை அட்டவணைப்படுத்திக் காட்டுங்கள்.

**குழு-02** உமது ஊரில் ஸகாத் வழங்கும் அளவிற்கு செல்வம் வைத்திருப்போரின் தகவல் ஒன்றை தயார்படுத்திச் சமர்ப்பியுங்கள்.

**குழு-03** உமது ஊரில் ஸகாத் பெறத் தகுதியானவர்கள் எனக் கணிக்கக் கூடிய தரப்பினர் பற்றித் தகவலறிந்து சமர்ப்பியுங்கள்.

**குழு-04** ஸகாத் வழங்கும் ஒருவருக்கு கிடைக்கும் பயன்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

உமது பிரதேசத்தில் ஸகாத் பகிரும் முறை பற்றி பெற்றோருடன் கலந்துரையாடி அது பற்றிய தகவல்களை சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.3 : நோன்பின் பயன்களை அறிந்து கடைப்பிடித்து ஒழுகுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நோன்பு அடிப்படை வணக்கங்களில் ஒன்று என்பதை அறிந்து கூறுவார்.
- நோன்பின் தாற்பரியங்களை அறிந்து கடைப்பிடித்து ஒழுகுவார்.
- நோன்பைக் கடைப்பிடித்து ஆன்மீக வலிமை பெற்றுக்கொள்ள முடியும் என்பதைக் கூறுவார்.
- நோன்பை ஈருலக வெற்றிக்குமான ஒரு சாதனமாகப் பயன்படுத்திக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- "அல்குர்ஆனும், நோன்பும் மறுமை நாளில் அடியானுக்காகப் பரிந்துரை செய்யும். நோன்பு அல்லாஹ்வைப் பார்த்து எனது இரட்சகனே நான் அவனை உணவிலிருந்தும் இச்சைகளிலிருந்தும் தடுத்து விட்டேன். எனவே அவனுக்காக ஷபாஅத் செய்யும் உரிமையைக் கொடு" (அஹ்மத், தபரானி) என்று சொல்லும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

  என்ற ஹதீஸைக் கூறி பாடத்தில் பிரவேசியுங்கள். இதனூடாக கருத்துப் பரிமாறுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
  - நோன்பு அடிப்படை வணக்கங்களில் ஒன்றாகும்.
  - நோன்பு பல்வேறு தாற்பரியங்களைக் கொண்டுள்ளது.
  - நோன்பு ஆன்மீக வலிமையை ஏற்படுத்துகின்றது.
  - நோன்பு ஈருலக வெற்றிக்கும் அடிப்படையாகின்றது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:
    - குறித்த நிபந்தனைகளுக்குட்படுகின்ற ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் திருப்தியை நாடி கிழக்கு வெளுத்ததிலிருந்து நோன்பை முறிக்கும் காரியங்களில் இருந்து தவிர்ந்திருந்து அல்லாஹ்விற்காக நிறைவேற்றும் இறை வணக்கமே நோன்பாகும்.
    - நோன்பு பர்ளானவை, ஸுன்னத்தானவை என இரு வகைப்படும்.
    - நோன்பு பல்வேறு தாற்பரியங்களைக் கொண்டுள்ளது.
        - அடிப்படை வணக்கமாகும்.
        - முன்னைய சமுதாயங்களுக்கும் விதியாக்கப்பட்டிருந்ததாகும்.
        - குர்ஆன், ஸுன்னாமூலம் வலியுறுத்தப்பட்டதாகும்.
        - அகீதாவை வலிமை பெறச் செய்யக்கூடிய ஒரு வணக்கமாகும்.
        - அதிக நற்கூலிகளைப் பெற்றுத் தரக்கூடியதாகும்.
        - ரமழான் மாதம் லைலதுல் கத்ர், குர்ஆன் அருளப்படல் எனும் சிறப்புக்களைக் கொண்டதாகும்.
        - ரமழான் நோன்பு ஏக காலத்தில் முஸ்லிம்களால் நிறைவேற்றப்படுவதாகும்
        - பல்வேறு நன்மைகளை உள்ளடக்கியதாகும்.
    - நோன்பு பல்வேறு பயன்களைப் பெற்றுத் தருகின்றது.
        - தக்வாவைத் தருகின்றது.
        - உளத்தூய்மையை ஏற்படுதுகின்றது.
        - பொறுமையைக் கட்டியெழுப்புகின்றது.
        - ஆன்மீக விமோசனத்திற்கு வழிவகுக்கின்றது.
        - குர்ஆனோடு பிணைத்து விடுகின்றது.
        - பாவ மீட்சிக்கு வழி வகுக்கின்றது.
        - பாவ காரியங்களிலிருந்து பாதுகாத்துவிடுகின்றது.
        - பசியை உணரச் செய்து வறுமை ஒழிப்பதற்கு தூண்டுகின்றது.
        - அன்பும், கருணையும் செலுத்த உதவுகின்றது.

- சகோதரத்துவம், ஒற்றுமை, மனிதநேயம், சமூக உணர்வு, சமத்துவம் என்பவற்றைப் பேண வழி வகுக்கின்றது.
- கட்டுப்பாடான வாழ்க்கைப் பயிற்சியைத் தருகின்றது.
- சிக்கன வாழ்வுக்கு மனிதனைப் பயிற்றுவிக்கின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** நோன்பின் தாற்பரியங்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-02** ரமழானில் கடைப்பிடித்த ஆன்மீக விவகாரங்களைப் பட்டியற்படுத்தி முன்வையுங்கள்.

**குழு-03** நீங்கள் நோன்பில் அடைய முடியுமாக இருந்த ஆன்மீக நன்மைகளை குறிப்பிடுங்கள்.

**குழு-04** உலகியல் விவகாரங்களுக்கு நோன்பு பயன்படும் விதத்தினை கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

நோன்பில் குடும்ப அங்கத்தவர்களிடையே ஏற்படுத்திய மாற்றங்களை அவர்களுடன் கலந்துரையாடி தொகுக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.4 : ஹஜ் உம்ரா ஆகிய கடமைகளின் முக்கியத்துவத்தையும் அவற்றின் மூலம் கிடைக்கும் பயன்பாடுகளையும் அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஹஜ்,உம்ராக் கடமைகள் பற்றி அறிந்து கூறுவார்.
- ஹஜ், உம்ரா நிறைவேற்றப்படும் முறையினை அறிந்து கூறுவார்.
- ஹஜ், உம்ராக் கிரியைகளின் சிறப்பு பற்றி அறிந்து கூறுவார்.
- ஹஜ், உம்ரா கிரியைகளின் பயன்கள் பற்றி தமக்குள் கலந்துரையாடி கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ‘‘(நபியே!) இப்ராஹீமை நம்முடைய வீட்டில் சமீபமாக வசிக்கும் படி செய்து (அவரை நோக்கி) நீங்கள் எனக்கு எவரையும் இணையாக்காதீர்கள். என்னுடைய(இந்த) வீட்டை (தவாப்) சுற்றி வருபவர்களுக்கும் அதில் நின்று குனிந்து சிரம் பணிந்து தொழுபவர்களுக்கும் அதனைப் பரிசுத்தமாக்கி வையுங்கள் என்று நாம் கூறிய சமயத்தில் (அவரை நோக்கி) ஹஜ்ஜுக்கு வருமாறு நீங்கள் மனிதர்களுக்கு அறிவிப்புச் செய்யுங்கள் (அவர்கள்) கால் நடையாகவும் உங்களிடம் வருவார்கள். இளைத்த ஒட்டகங்களின் மீது வெகு தொலை தூரத்திலிருந்தும் (உங்களிடம்) வருவார்கள். அவர்களுக்காக அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நன்மைகளை அவர்கள் காணட்டும்’’ (அல் ஹஜ் : 26-28)

  என்ற வசனத்தை ஓதச் செய்து மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- ஹஜ் அல்லது உம்ராவை தொடர்புபடுத்தி அதன் வரலாறு குறித்து மாணவர்களிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - ஹஜ், உம்ரா முஸ்லிம்களில் வசதியும் உடற்பலமும் உள்ளவர்கள் கடமையாகும் இபாதத்தாகும்.
  - ஹஜ், உம்ரா ஆகிய இரண்டுக்குமுரிய கிரியைகள் உள்ளன.
  - உரிய தலங்களை நாடிச் சென்று இக்கிரியைகள் நிறைவேற்றப்படும்.
  - இக்கிரியைகள் தனிச் சிறப்புக்களைக் கொண்டுள்ளன.
  - அபரிமிதமான பயன்களை இக்கடமைகள் எமக்குத் தருகின்றன.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:
    - ஹஜ் என்பது ஒவ்வொரு வருடமும் துல்ஹஜ் மாதம் பிறை 8 முதல் பிறை 13 வரையுள்ள தினங்களில் முஸ்லிம்களில் சில நிபந்தனைகளுக்கு உட்படுகின்றவர்கள், அதற்குரிய விதிமுறைகளை அனுரித்து வாழ்க்கையில் ஒரு தடவை புனித மக்க மா நகரின் குறித்த தலங்களை நாடிச் சென்று அல்லாஹ்விற்காக நிறைவேற்ற வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ள வணக்கமாகும்.
    - உம்ரா எல்லாக் காலங்களிலும் முஸ்லிம்களால் மேற்கொள்ள முடியும் ஹஜ்ஜின் பர்ளுகளில் அரபாவில் தரித்தல் தவிர்ந்த அனைத்தும் உம்ராவில் உள்ளடங்கும்.
    - ஹஜ், உம்ரா ஆகிய இரண்டுக்கும் ஹாஜிகள் நிய்யத் வைப்பதற்கான வெவ்வேறு முறைகள் உள்ளன.
    - ஹஜ், உம்ராவுக்கும் ஷர்த்துகள், பர்ளுகள், வாஜிபுகள், ஸுன்னத்துக்கள், முப்திலாத்துக்கள் என்பன உள்ளன.
    - ஹஜ், உம்ராவோடு தொடர்புடைய முக்கிய தலங்களாக மீகாத்துகள், க∴பதுல்லாஹ், அரபா, மினா, முஸ்தலிபா, ஸபா மர்வா, ஜம்ராக்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
    - ஹஜ்ஜுக்கு தனிச் சிறப்புக்கள் உண்டு.

- அடிப்படை வணக்கங்களில் ஒன்றான இதன் சிறப்பை குர்ஆன், ஸுன்னா எடுத்துக் கூறுகின்றன.
- முஸ்லிமினது உள்ளம், பொருள், உடலோடு சம்பந்தப்படும் இக் கடமை அடிமைப்படல், தியாகம், அர்ப்பணிப்பு எனும் பண்புகளை வளர்க்கக் கூடியது.
- சகலவிதமான வேறுபாடுகளையும் களைந்து ஐக்கியம், ஒற்றுமை, சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்புகிறது.
- சைத்தானுக்கும், மனோ இச்சைக்கும் எதிரான போராட்டப் பயிற்சியைத் தந்து முஸ்லிமகளது தனித்துவத்தை வெளிப்படுத்துகிறது.

- எளிமையான வாழ்க்கைக்குப் பயிற்சியளிப்பதோடு
- பொறுமை, பரஸ்பரம் உதவுதல், தக்வா, மறுமை நினைவு என்பவற்றைக் கட்டியெழுப்பப்புகின்றது.

- ஹஜ், உம்ரா பல்வேறு பயன்களையும் படிப்பினைகளையும் தன்னகத்தே கொண்ட கடமையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** ஹஜ்ஜின் கிரியைகளை பர்ளு, வாஜிபு, ஸுன்னத் அடிப்படையில் அட்டவணைப்படுத்துங்கள்.

**குழு-02** ஹஜ் தரும் படிப்பினைகளை அதன் வரலாற்றுப் பின்னணியில் முன்வையுங்கள்.

**குழு-03** ஹஜ்ஜின் கிரியைகள் நிறைவேற்றப்படும் முறையை ஹஜ்ஜை நிறைவேற்றி வந்த ஒருருடன் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-04** ஸஈ, ஜம்ராக்களில் கல்லெறிதல், ஸம்ஸம் என்பவற்றின் வரலாற்றுப் பிண்ணனியை கலந்தாலோசித்து எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

ஹாஜிகளின் ஹஜ் பயணத்துக்காக மேற்கொள்ளும் முன்னோடி நடவடிக்கைகளை வீட்டிலுள்ளோருடன் கலந்துரையாடி அது பற்றி அறிக்கை சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.5 : புனிதஸ்தலங்களின் சிறப்புக்களை அறிந்து கண்ணியப்படுத்துவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- மஸ்ஜிதுகள் முஸ்லிம்களது புனிதஸ்தலங்கள் என்பதனை அறிந்து கூறுவார்.
- புனித யாத்திரை மேற்கொள்ள முடியுமான மூன்று மஸ்ஜித்களையும் பற்றி அறிந்து விளக்குவார்.
- இம்மூன்று மஸ்ஜித்களும் அமைந்துள்ள இடங்கள் அருள் பொருந்திய இடங்கள் என நயந்து கூறுவார்.
- நபிமார்களது பணிகளோடும் வரலாற்றோடும் தொடர்புடைய இவ்விடங்கள் முஸ்லிம் உம்மத்திற்குச் சொந்தமான இடங்கள் என்பதை அறிந்து உணர்ந்து செயற்படுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- إِنَّ أَوَّلَ بَيْتٍ وُضِعَ لِلنَّاسِ لَلَّذِي بِبَكَّةَ مُبَارَكًا وَهُدًى لِّلْعَالَمِينَ ﴿٩٦﴾

  (இவ்வுலகில் இறைவனை வணங்குவதற்கென) மனிதர்களுக்கு அமைக்கப்பட்ட ஆலயங்களில் முதன்மையானது நிச்சயமாக 'பக்கா'வில் (மக்காவில்) இருப்பதுதான். அது மிக்க பாக்கியமுள்ளதாகும். உலகத்தாருக்கு நேரான வழியை அறிவிக்கக் கூடியாதாகவும் இருக்கின்றது'' (அலு இம்றான்: 96)

  என்ற வசனத்தை ஓதிக் காண்பித்து பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பைதுல் முகத்தஸ் தொடர்பாகவும் அதனது முக்கியத்துவம் குறித்தும் மாணவர்களிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இறை இல்லங்களான மஸ்ஜித்கள் இஸ்லாத்தின் புனித தலங்களாக மதிக்கப்படுகின்றன.
  - புனித யாத்திரை மேற்கொள்ள முடியுமென ஸுன்னா மூன்று மஸ்ஜித்களை அடையாளப்படுத்துகின்றது.
  - அம்மூன்று மஸ்ஜித்களும் அதனைச் சூழ உள்ள இடங்களும் அருள் பொருந்தியது என அல்குர்ஆன் கூறுகின்றது.
  - இம் மூன்று மஸ்ஜித்களும் முஸ்லிம் உம்மத்திற்குச் சொந்தமானவையாகும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும்

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:
    - மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுல் அக்ஸா, மஸ்ஜிதுந் நபவி ஆகிய மூன்று பள்ளிவாசல்களும் முஸ்லிம்களது முக்கியமன புனித தலங்களாகும்.

      ''மூன்று புனிதத்தலங்களுக்கு மாத்திரமே புனித யாத்திரை மேற்கொள்ள முடியும். மஸ்ஜிதுல் ஹராம், என்னுடைய இப்பள்ளி, மஸ்ஜிதுல் அக்ஸா'' (புகாரி)
    - ''மஸ்ஜிதுல் ஹராமில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை நூறாயிரம் தொழுகைக்குச் சமனானதாகும். எனது இந்தப்பள்ளியில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஆயிரம் தொழுகைக்குச் சமனாகும், மஸ்ஜிதுல் அக்ஸாவில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஐந்நூறு தொழுகைக்குச் சமனாகும்.'' (புகாரி)
    - இப்புனித தலங்களும், அதனைச் சூழவுள்ள பகுதிகளும் அல்லாஹ்வால் அருள்பாலிக்கப்பட்ட இடங்களாகும்.

      ''(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன். அவன் (முஹம்மத்(ஸல்) என்னும்)தன் அடியையாரை(க் க:.பாவாகிய)ச் சிறப்புற்ற பள்ளியில் இருந்து (வெகு தூரத்தில் இருக்கும் பைத்துல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஒரே இரவில் அழைத்துச் சென்றான். (அவ்வாறு அழைத்துச் சென்ற) நாம் அதனைச் சூழவுள்ளவை சிறப்புற்று ஓங்க அபிவிருத்தி அடையச் செய்திருக்கிறோம்.'' (பனிஇஸ்ராயீல் : 01)
    - மஸ்ஜிதுல் ஹராம் முதன்முதலில் இப்பூவுலகில் மலக்குகளினால் நிர்மாணிக்கபட்டது. வரலாற்றில் அநேகமான நபிமார்களினால் புனர் நிர்மாணம் செய்யப்பட்டது. இப்ராஹீம் (அலை), இஸ்மாஈல் (அலை) ஆகிய இருவரும் க:.பதுல்லாஹ்வை புனர்நிர்மாணம் செய்த வரலாற்றைக் குர்ஆன் கூறுகின்றது.
    - மஸ்ஜிதுல் ஹராமை புனர்நிர்மாணம் செய்த இப்ராஹீம்(அலை) அவர்கள் தாம் வாழ்ந்த பூமியாகிய பலஸ்தீனுக்கு வந்து மஸ்ஜிதுல் அக்ஸாவை புனர்நிர்மாணம் செய்தார்கள்.

- இவ்விரண்டு தலங்களும் இஸ்ராவுடன் மி∴ராஜுடனும் சம்பந்தப்படுகின்றன.
- முஸ்லிம்களது முதல் கிப்லாவாக மஸ்ஜிதுல் அக்ஸாவும் அதனைத் தொடர்ந்து க∴பதுல்லாஹ்வும் நோக்கப்படுகிறது.
- மதீனா ஹிஜ்ரத்தின் பின்னர் மஸ்ஜிதுந் நபவி நிர்மாணிக்கப்பட்டு முஸ்லிம்களது கேந்தர நிலையமாக மாற்றப்பட்டது.
- முஸ்லிம் உம்மாவின் சமூக நிர்மாணப்பணி மஸ்ஜிதுந் நபவியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.
- குலாபஉர் ராஷிதூன்கள் காலத்திலும் மஸ்ஜிதுந் நபவி முஸ்லிம்களின் மத்திய நிலையமாக இருந்து செயற்பட்டது.
- இம்மூன்று பள்ளிவாசல்களும் முஸ்லிம் உம்மத்தினருக்கு சொந்தமானதாக இருப்பதனால் அவர்களது உள்ளங்களும் உணர்வுகளும் அவற்றுடன் இணைந்திருக்க வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுல் அக்ஸா, மஸ்ஜிதுந் நபவி ஆகிய மஸ்ஜித்களின் சிறப்புக்கள் பற்றி அறிந்து எழுதுங்கள்.

**குழு-02** இம்மூன்று மஸ்ஜித்களுடனும் தொடர்புடைய சுருக்க வரலாற்றை திரட்டி எழுதுங்கள்.

**குழு-03** இம்மஸ்ஜித்களோடு தொடர்புடைய நபிமார்கள் பற்றியும். அவர்களுடைய பங்களிப்புக்கள் பற்றியும் திரட்டி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

**குழு-04** உளரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் இம்மஸ்ஜித்களுடன் முஸ்லிம்களது வகிபாகம் எவ்வாறு அமைய வேண்டும் எனக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

மஸஜிதுல் அக்ஸாவை மீட்டெடுப்பதற்கு வரலாற்று நெடுகிலும் இடம்பெற்று வரும் முயற்சிகள் பற்றி பெற்றோருடன் கலந்துரையாடி கட்டுரையொன்று வரைய வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கித் தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 : இஸ்லாம் கூறும் நற்பண்புகளை அறிந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவார்**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஒழுக்கப் பண்புகள் பற்றி இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளக்கிக் கூறுவார்.
- ஒழுக்கப் பண்புகளை கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- பொறுமை, வீரம், பணிவு, மன்னிப்பு, நீதி. நேர்மை முதலான நற்பண்புகளின் சிறப்புப் பற்றிய குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களை முன்வைப்பார்
- பொறுமை, வீரம், பணிவு, மன்னிப்பு, நீதி. நேர்மை முதலான நற்பண்புகளை கடைப்பிடிப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகளை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**
- நற்பண்புகள் பற்றி மாணவர்களிடம் கேட்டறியுங்கள். அதில் ஒன்றை உதாரணங்காட்டி கலந்துரையாடுங்கள்.
- நற்பண்புகளின் சிறப்பு பற்றி மாணவர்கள் விளங்கி வைத்திருக்கின்ற விடயங்கள் குறித்து வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - அக்லாக் என்ற பதம் "குலுகுன்" என்ற பதத்திலிருந்து தோன்றியதாகும்.
    - நற்பண்புகளை அல்குர்ஆனும், ஸுன்னாவும் விரிவாக விளக்குகின்றன.
    - நற்பண்புகள் ஒரு மனிதனின் தனித்தன்மையை வெளிப்படுத்தச் சிறந்த சாதனமாகும்.

**படி 2 :**
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படி 3 :**
- ஒவ்வொரு குழுவிற்கும் தாம் கலந்துரையாடியவற்றை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- போஷிக்கத்தக்க கருத்துக்களை அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.

- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மீளாய்வு செய்யுங்கள்:
  - மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான சட்ட திட்டங்களை வகுத்துத் தருவதும் ஒழுக்க விழுமியங்களைப் போதிப்பதும் இஸ்லாத்திற்கேயுரிய தனிச் சிறப்பாகும். நல்லொழுக்கத்தை இஸ்லாம் நம்பிக்கையின் ஒரு பகுதியாகவே கருதுகிறது. ஒழுக்க வீழ்ச்சியை நம்பிக்கையின் பலவீனமாகவே இஸ்லாம் கருதுகிறது.
  - அல்குர்ஆன், நபி (ஸல்) அவர்களை நற்பண்புகளைக் கொண்டவராக அறிமுகப்படுத்துகின்றது. நிச்சயமாக (நபியே) நீர் மகத்தான (உயர்ந்த) பண்புகளைக் கொண்டவராக இருக்கின்றீர் (அல் கலம் : 4) ஆயிஷா (றழி) அவர்கள் குறிப்பிடும் போது "நபிகளாரின் பண்பாடுகள் குர்ஆனாகவே இருந்தது" என்றார்கள். (முஸ்லிம்)
  - அல்லாஹ்வின் அடியார்களில் யார் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமானவர்? என நபிகளாரிடம் வினவப்பட்ட போது, சிறந்த ஒழுக்கத்திற்குச் சொந்தக்காரர் என நபிகளார் பதிலளித்தார்கள் (இப்னு ஹிப்பான்)
  - மனிதர்களுக்கு தரப்பட்ட மிகவும் சிறந்த பொருள் எது? என கேட்கப்பட்ட போது நபி (ஸல்) அவர்கள் சிறந்த ஒழுக்கப் பண்புகள் என பதிலளித்தார்கள் (திர்மிதி)
  - எந்த முஸ்லிமின் நம்பிக்கை முழுமையானது என நபிகளாரிடம் வினவப்பட்ட போது யாரிடம் சிறந்த ஒழுக்க பண்புகள் இருக்கின்றனவோ அவரே என பதிலளித்தார்கள் (தபரானி)
  - அல்லாஹ்வும் றஸுலும் நற்பண்புகள் என வரையறுத்தவைகளேயே நாம் நற்பண்புகளாகக் கொள்ள வேண்டும்.
  - அடிப்படையான நற்பண்புகளில் பொறுமை, வீரம், பணிவு, மன்னிப்பு, நீதி, நேர்மை ஆகிய நற்பண்புகள் அடங்குகின்றன.
  - மனித வாழ்வின் எல்லாத் துறைகளும் அல்லாஹ்வும் றஸுலும் இட்ட வரையறைகளைப் பேணி நடத்தப்படும்போது அது நற்பண்பில் உள்ளடங்குகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு-01** பொறுமை, வீரம் ஆகிய பண்புகளின் சிறப்பை வலியுறுத்தும் அல்குர்ஆன் அல் ஹதீஸ் ஆதாரங்களைக் குறிப்பிட்டு அப்பண்புகளைக் கடைபிப்பதன் முக்கியத்துவத்தை பட்டியல்படுத்துங்கள்.

**குழு-02** பணிவு, மன்னிப்பு ஆகிய பண்புகளின் சிறப்புகளைக் கூறும் வரலாற்று சம்பவங்கள் இரண்டினைத் தொகுத்து எழுதுங்கள்

**குழு-03** நீதி, நேர்மை ஆகிய பண்புகளின் சிறப்புக்களை எடுத்துக்காட்டும் சம்பவங்கள் இரண்டினை தொகுத்து எழுதுங்கள்

**குழு-04** நற்பண்புகளைக் கடைப்பிடிக்கத் தவறும் போது தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் ஏற்படும் பாதிப்புக்களைக் கலந்துரையாடிப் பட்டியல்படுத்துங்கள்

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

நாளாந்த வாழ்வில் தவறாது கடைப்பிடித்து வரவேண்டிய நற்பண்புகளை பெற்றோருடன் சேர்ந்து கலந்துரையாடி அவற்றைப் பின்பற்றி ஒருவருக்கான திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 :** **இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 :** **ஒழுக்க மேம்பாட்டுக்கான வழிமுறைகளை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவார்**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஒழுக்க மேம்பாட்டுக்கு இஸ்லாம் வழங்கும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்.
- ஒழுக்க மேம்பாடுமிக்க சமூகத்தை உருவாக்க நபி (ஸல்) அவர்கள் கையாண்ட வழிமுறைகளை விளக்குவார்.
- ஒழுக்கமிக்க சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகளை இனங்கண்டு கூறுவார்.
- ஒழுக்க வீழ்ச்சியினால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புக்களை அடையாளப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- وَإِنَّكَ لَعَلَىٰ خُلُقٍ عَظِيمٍ ﴿٤﴾

  நிச்சமாக (நபியே) நீர் மகத்தான (உயர்ந்த) பண்புகளைக் கொண்டவராக இருக்கின்றீர் (அல்கலம் : 4) என்ற அல்குர்ஆன் வசனத்தை எழுதி காட்சிப்படுத்தி மாணவர்களை கவனயீர்ப்புச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தியதாகக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்:
  - இஸ்லாமிய நோக்கில் ஒழுக்கம் என்பது இறைவணக்கங்கள், நம்பிக்கை என்பவற்றோடு இணைந்ததாகும். ஒருவரிடம் நல்லொழக்கம் இல்லையெனில் அவரிடம் நம்பிக்கை இல்லை என்பதுவே கருத்தாகும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தாம் கலந்துரையாடியவற்றை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- போஷிக்கத்தக்க கருத்துக்களை அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மீளாய்வு செய்யுங்கள்:
    - மனிதனை ஏனைய படைப்புகளிடமிருந்து பிரித்துக்காட்டுவது அவனுடைய சிறந்த நற்பண்புகளாகும்
    - தொழுகை உட்பட அனைத்து இஸ்லாமிய கடமைகளும் மனிதர்களை ஒழுக்கத்தின்பால் இட்டுச் செல்லும் பயிற்சிகளாகும். எனவேதான் இஸ்லாம் ஒழுக்கத்தை வெறும் பண்பாடாக மட்டும் நோக்காமல் அதனை இறை விசுவாசமாகவும் கருதுகிறது. சிறந்த பண்பாடு, ஒழுக்கம் இல்லாமல் இறைவிசுவாசம் பரிபூரணமடையாது.
    - தீர்ப்பு நாளில் மு.்.மீன்களின் தராசில் நன்நடத்தையை விட கனமான எதுவும் இருக்காது (அஹ்மத், அபூதாவூத்)
    - மனிதர்களை அதிகமாகச் சுவர்க்கத்தில் நுழைவிக்கக் கூடியது எது என நபி ஸல் அவர்களிடம் வினவப்பட்டபோது இறையச்சமும் நன்னடைத்தையும் என பதில் கூறினார்கள். நரகில் மனிதர்களை எது அதிகம் நுழைவிக்கும் எனக் கேட்கப்பட்ட போது வாயும், பாலுறுப்பும் என பதிலளித்தார்கள். (அஹ்மத், திர்மிதி)
    - ஒழுக்கம் நிறைந்த ஒரு முஸ்லிம் தனது மறுமை வாழ்வின் சுபீட்சத்தையும் இம்மை வாழ்வின் மன நிறைவினையும் அடைவான். எனவேதான் நபி ஸல் அவர்கள் தமது அன்றாட வாழ்வில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒழுக்க மேம்பாட்டை ஏற்படுத்துவதில் அக்கறையுடன் செயற்பட்டிருக்கிறார்கள்.
    - சமூகத்தில் ஒழுக்கம் வீழ்ச்சியடையும்போதே அனைத்துப் பிரச்சினைகளும் உருவாகின்றன. உலகில் எழுச்சியடைந்த எத்தனையோ சமூகங்கள் வீழ்ச்சியடைவதற்கு ஒழுக்க வீழ்ச்சியே காரணமாக அமைந்துள்ளன.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு-01** ரியாழுஸ்ஸாலிஹீன் தமிழ் மொழி பெயர்ப்பில் ''ஒழுக்க மேம்பாடு'' என்ற தலைப்பின் கீழுள்ள சில ஹதீஸ்களை தொகுத்து எழுதிக் கொள்ளுங்கள்.

**குழு-02** அல்குர்ஆனின் சூராக்கள் ஒழுக்க மேம்பாடு தொடர்பாகக் கூறியுள்ள வசனங்களை வாசித்து அது தரும் கருத்துக்களை உரைவடிவில் எழுதுங்கள்.

**குழு-03** ஒழுக்கம் மிக்க சமூகத்தை உருவாக்குவதற்காக தனிநபர்களை தூண்டும் விதத்தில் சுவரொட்டியொன்றினை தயார் செய்யுங்கள்.

**குழு-04** ஒழுக்க மேம்பாட்டின் முக்கியத்துவம் தொடர்பாக ஒரு உரையாடலினை எழுதுங்கள்

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

மாணவர்களின் பண்புகளைக் காட்டும் வீடியோக் காட்சி ஒன்றை பார்வையிட்டு அது தொடர்பாகப் பெற்றோருடன் கலந்துரையாடித் தாம் அறிந்துகொண்ட முக்கிய அம்சங்களைத் தொகுப்பதற்கு ஆலோசனை வழங்குங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.3 : ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகளை அறிந்து செயற்படுவார்**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஆன்மீகம் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளக்குவார்.
- ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிகளாக ஸப்ர், தவக்குல், ம.்.ரிபா, றிழா தொடர்பான இஸ்லாத்தின் போதனைகளை முன்வைப்பார்.
- ஆன்மீக மேம்பாட்டின் காரணமாக தனிமனித சமூக வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து கூறுவார்
- ஆன்மீக மேம்பாடு குறைவடையும் போது தனிமனித, சமூக வாழ்வில் ஏற்படும் பாதிப்புக்களை அடையாளப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

إِنَّمَا ٱلْمُؤْمِنُونَ ٱلَّذِينَ إِذَا ذُكِرَ ٱللَّهُ وَجِلَتْ قُلُوبُهُمْ وَإِذَا تُلِيَتْ
عَلَيْهِمْ ءَايَٰتُهُۥ زَادَتْهُمْ إِيمَٰنًا وَعَلَىٰ رَبِّهِمْ يَتَوَكَّلُونَ ٢
ٱلَّذِينَ يُقِيمُونَ ٱلصَّلَوٰةَ وَمِمَّا رَزَقْنَٰهُمْ يُنفِقُونَ ٣

- மு.்.மீன்கள் என்போர் யாரெனில் அல்லாஹ்வைப் பற்றி நினைவு கூறப்பட்டால் அவர்களது இதயங்கள் பக்தியால் நிறைந்து விடும். அவர்களுக்கு அவனது வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டால் அது அவர்களது ஈமானை அதிகரிக்கும். மேலும் அவர்கள் தங்களது இரட்சகன் மீதே தவக்குல் வைப்பார்கள். (அல் அன்பால்: 2-3) என்ற அல்குர்ஆன் வசனத்தை எழுதி, காட்சிப்படுத்தி மாணவர்களைக் கவனயீர்ப்புச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தியதாக கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்:
    - மனிதன், உடல், அறிவு, ஆன்மா என்ற மூன்று பகுதிகளக் கொண்டு படைக்கப்பட்டுள்ளான். இதில் முதன்மையான பகுதியாக இஸ்லாம் ஆன்மாவைக் கருதுகிறது.
    - ஆன்மாவின் ஆரோக்கிய நிலையே ஒரு மனிதனின் இம்மை மறுமை வெற்றியைத் தீர்மானிக்கின்றது.

- ஆன்மீக மேம்பாட்டிற்காக இஸ்லாம் பல வழிமுறைகளைக் காட்டியிருக்கிறது.
- ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிகளாக ஸப்ர், தவக்குல், ம.்.ரிபா, றிழா தொடர்பாக இஸ்லாத்தின் போதனைகள் முக்கியமானவையாகும்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள். கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தாம் எழுதியவற்றை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- போஷிக்கத்தக்க கருத்துக்களை அடுத்த குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மீளாய்வு செய்யுங்கள்:
- தான் படைத்த இறைவனுடன் இறுக்கமான தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு தன்னுடைய வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் அவனுடைய விருப்பத்தை எதிர்பார்த்து கருமமாற்றுவதை ஆன்மீக வாழ்வாகக் கருதலாம். அப்போது அம்மனிதன், இறைவன் எப்போதும் தன்னை அவதானித்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வைப் பெறுகிறான்.
- அந்நாளில் செல்வமும், பிள்ளைகளும் பயனளிக்காது, எவரொருவர் பரிசுத்த இதயத்துடன் அல்லாஹ்விடம் வருகிறாரோ அவரைத் தவிர (அஷ்ஷுஅரா 88,89)
- எந்தவொரு சமூகமும் தனது உள்ளங்களில் உள்ளவற்றை மாற்றிக் கொள்ளாதவரை அல்லாஹ் அவர்களில் மாற்றத்தைக் கொண்டுவர மாட்டான் (அர்ர.்.த் 11)
- உடலில் ஒரு சதைத்துண்டு இருக்கிறது. அது சீராகிவிட்டால் முழு உடலும் சீராகிவிடும். அது சீர்கெட்டுவிட்டால் முழு உடலும் சீர்கெட்டுவிடும். அதுவே உள்ளமாகும். (புகாரி)
- ஓர் அடியானின் உள்ளம் சீராகாதவரை அவனது ஈமான் சீர் பெறாது (அஹ்மத்)
- ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிகளாக ஸப்ர், தவக்குல், ம.்.ரிபா, றிழா தொடர்பாக இஸ்லாத்தின் போதனைகள் முக்கியமானதாகும்.
- இறைவன் உமக்குத் தந்தற்றைக் கொண்டு திருப்தி அடைவாயாயின் மக்களிடையே நீ பெரும் செல்வந்தனாகத் திகழ்வாய் (இப்னு மாஜா)

- நீ உலகத்தில் பற்றற்றவனாக இரு. அல்லாஹ் உன்னை விரும்புவான். மனிதர்களிடம் உள்ளவற்றில் பற்றற்றவனாக இரு. அல்லாஹ் உன்னை விரும்புவான். (இப்னு மாஜா)
- நீங்கள் மு.ஃமின்களாக இருப்பின் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்து பிரார்த்தியுங்கள். (மாயிதா : 23)
- அவர்கள் பொறுமையாளர்களாக இருந்ததன் காரணமாக சுவனத்தையும் (அணிவதற்கு) பட்டாடையையும் அவன் நற்கூலி வழங்குகிறான் ( இன்சான் : 12)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு-01** ஆன்மாவை மேம்படுத்துவது தொடர்பாக வலியுறுத்தும் அல்குர்ஆன் வசனங்களை தொகுத்தெழுதுங்கள்

**குழு-02** ஆன்மாவை மேம்படுத்துவது தொடர்பாக வலியுறுத்தும் ஹதீஸ்களை தொகுத்தெழுதுங்கள்.

**குழு-03** ஆன்மீக வாழ்வின் மூலம் தனிமனிதனுக்குக் கிடைக்கும் இம்மை மறுமை நன்மைகளைக் கலந்துரையாடிப் பட்டியல்படுத்துங்கள்

**குழு-04** ஆன்மீக வாழ்வைப் பாதிக்கும் பண்புகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

ஆன்மீக வாழ்வை மேம்படுத்த வீட்டுச் சூழலிலும் பாடசாலைச் சூழலிலும் மேற்கொள்ளத்தக்க வழிமுறைகள் இரண்டு பற்றி பெற்றோருடன் கலந்துரையாடிச் சட்டகமொன்றை வகுக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப்பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 : சட்ட மூலாதாரமாக அல்குர்ஆனை ஏற்ற ஒழுகுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- 'சட்ட மூலாதாரம்' என்பதற்கான விளக்கத்தை முன்வைப்பார்.
- அல் குர்ஆன் சட்ட மூலாதாரம் என்பதற்கான நியாயங்களை எடுத்துக்காட்டுவார்.
- அல் குர்ஆன் ஓர் அற்புதம் என்பதை பல்வேறு கோணங்களில் நிரூபித்துக் காட்டுவார்.
- அல் குர்ஆனின் சட்டங்களுக்கு ஏற்பத் தமது வாழ்வை அமைத்துக் கொள்ள முன்வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

وَيَوْمَ نَبْعَثُ فِي كُلِّ أُمَّةٍ شَهِيدًا عَلَيْهِم مِّنْ أَنفُسِهِمْ ۖ وَجِئْنَا بِكَ
شَهِيدًا عَلَىٰ هَٰؤُلَاءِ ۚ وَنَزَّلْنَا عَلَيْكَ الْكِتَابَ تِبْيَانًا لِّكُلِّ شَيْءٍ
وَهُدًى وَرَحْمَةً وَبُشْرَىٰ لِلْمُسْلِمِينَ ﴿٨٩﴾

- ஸூரா அந்நஹ்லின் 89 ஆவது வசனத்தை அழகாக ஓதக் கூடிய மாணவனைக் கொண்டு ஓதச் செய்து மொழி பெயர்ப்பை வாசித்துக் காட்டுங்கள்.
- சட்டம் மற்றும் மூலாதாரம் ஆகிய பதங்களுக்கு வழங்கப்படுகின்ற கருத்துக்களை விளக்குங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
  - படைத்த அல்லாஹ்வே மனிதனின் இயல்பை அறிந்தவன் என்றவகையில் மனித வாழ்வினை வழிநடத்திச் செல்வதற்காக அவன் உருவாக்கிய சட்டங்களை உள்ளடங்கிய வழிகாட்டலே அல் குர்ஆனாகும்.
  - அல்குர்ஆன் மனிதனின் தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்வின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய சட்டதிட்டங்களை வழங்கியுள்ளது.
  - சட்ட மூலாதாரமான அல்குர்ஆன் ஏனைய சட்ட நூல்களில் இருந்து அமைப்பு ரீதியாகவும் உள்ளடக்க ரீதியாகவும் வேறுபட்டு காணப்படுகின்றது.
  - அல்குர்ஆன் பல்வேறுபட்ட அற்புதங்களை உள்ளடக்கியுள்ளது.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவிற்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்:
    - அல்குர்ஆனின் மொத்த வசனங்களில் சுமார் ஐந்நூறு வசனங்கள் வாழ்க்கைக்கான சட்டதிட்டங்களையும், விதிகளையும் உள்ளடக்கியிருக்கின்றன.
    - அல் குர்ஆன், நபி (ஸல்) அவர்களின் மக்கா காலப்பிரிவில் சுருக்கமாகவும், மதீனா காலப்பிரிவில் விரிவாகவும் சட்டதிட்டங்களைத் தெளிவுபடுத்தியுள்ளது.
    - அல்குர்ஆன் முன்வைக்கும் தெளிவான சட்டங்கள் 'இபாரதுந்நஸ்' எனவும் அச்சட்டத்திலிருந்து பெறப்படும் முடிவுகள் 'தலாலதுந்நஸ்' எனவும் அழைக்கப்படுகின்றன.
    - சீரான வாழ்க்கைக்காக அல்குர்ஆன் வழிகாட்டுகின்றது.

      "நிச்சயமாக இது தான் என்னுடைய நேரானவழி. இதனையே பின்பற்றுவீராக. பல வழிகளைப் பின்பற்றாதீர்கள். அவை அல்லாஹ்வின் பாதையை விட்டு உங்களைப் பிரித்துவிடும். நீங்கள் இறை பக்தர்களாக இருப்பதற்காகவே அவ்வாறு உபதேசம் செய்கிறான்" (அல்அன்ஆம் : 153)
    - நபி (ஸல்) அவர்களது காலம் அறிவியல் ரீதியிலும் மொழி ரீதியிலும் உயர்வடைந்து கொண்டிருந்ததோடு சிந்தனை, பகுத்தறிவு என்பன விரிவடையும் சூழலும் காணப்பட்டது. எனவேதான் அல் குர்ஆன் நபியவர்களுக்கு ஓர் அற்புதமாக வழங்கப்பட்டது.
    - கவிதை, உரைநடை முதலிய இலக்கிய வடிவங்களை விஞ்சிய தனித்துவமான ஒரு மொழி நடையில் அல்குர்ஆன் வசனங்கள் அமைந்துள்ளன.
    - மனித அறிவால் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் கண்டுபிடிக்கப்படாத அறிவியல் உண்மைகளை அல்குர்ஆன் பிரஸ்தாபிக்கின்றது.
    - தனி மனிதருடன் தொடர்பான மற்றும் சமூகவியலுடன் தொடர்பான விடயங்களில் அல்குர்ஆன் சட்டங்களை முன்வைத்துள்ளது. இது அல்குர்ஆனின் சட்டவியல் ரீதியான அற்புதமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** சட்ட மூலாதாரம் என்பதனால் கருதப்படுவது யாது என்பதனை விளக்கி எழுதுங்கள்.

**குழு-02** அல் குர்ஆன் சட்ட மூலாதாரம் என்பதற்கான நியாயங்களை எடுத்துக்காட்டுங்கள்.

**குழு-03** அல் குர்ஆன் ஓர் அற்புதம் என்பதனை மொழி ரீதியான அற்புதம், அறிவியல் ரீதியான அற்புதம் என்ற தலைப்புக்களில் சுருக்கமாக எழுதுங்கள்.

**குழு-04** அல் குர்ஆன் ஓர் அற்புதம் என்பதனை, சட்டவியல் ரீதியான அற்புதம், முன்னறிவிப்பு தொடர்பான அற்புதம் என்ற தலைப்புக்களில் சுருக்கமாக எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

அல் குர்ஆனின் அற்புதத்தை விளக்கும் தமிழ் மொழி மூல நூல்கள் சிலவற்றின் பெயர்களைப் பட்டியற்படுத்த வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப்பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2 : ஸுன்னா தொகுக்கப்பட்ட வரலாற்றை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- அல்குர்ஆனிற்கு விளக்கமாக ஸுன்னா உள்ளது என்பதனை அறிந்து கூறுவார்.
- ஸுன்னா என்பது சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக்காட்டுவார்.
- ஸுன்னாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து தனது வாழ்விலும் பிறர் வாழ்விலும் நபி (ஸல்) அவர்களின் வாழ்வைப் பின்பற்ற வழிசெய்வார்.
- ஹதீஸ் தொகுக்கப்பட்ட முறையினை படிமுறையாகவும் வரலாற்று ரீதியாகவும் முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 : 
- ஸூறா அந்நஜ்மின் கீழ்வரும் வசனங்களை ஓதி அதன் மொழிபெயர்ப்பை வாசித்துக் காட்டுவதனூடாக பாடப்பிரவேசம் செய்யுங்கள்.

وَمَا يَنطِقُ عَنِ ٱلْهَوَىٰٓ ٣ عَلَّمَهُۥ شَدِيدُ ٱلْقُوَىٰ ٥
إِنْ هُوَ إِلَّا وَحْىٌ يُوحَىٰ ٤

"அவர் தன் இச்சைப்படி பேசுவதில்லை. அவை அனைத்தும் அவருக்கு வஹியாக அறிவிக்கப்பட்டவையே. மாபெரும் நுண்ணறிவாளரும் அதிக வலிமை வாய்ந்தவருமான ஒருவர் இதனை அவருக்குக் கற்றுக் கொடுக்கிறார்.' (அந்நஜ்ம் - 2-5)

- அந்த ஸூராவின் வசனங்களைக் கொண்டு ஸுன்னா இறைவனின் வஹி என்பதை விளக்கிக் காட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
    - அல்குர்ஆனும், ஸுன்னாவும் வேதவெளிப்பாடாகும். அல்குர்ஆன் வஹீஅல்மத்லுவ் ஆகவும் ஸுன்னா வஹீகைருமத்லுவ் ஆகவும் அமைந்துள்ளது. எனவே அல்குர்ஆன் சட்ட மூலாதாரம் என்பதுபோலவே ஸுன்னாவும் சட்ட மூலாதாரமாகும்.
    - "எவர் அல்லாஹ்வுடைய தூதருக்கு வழிபட்டு நடக்கின்றாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவராவார்." (அந்நிஸா: 81) நபியே! நீர் கூறும் நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான்"

(ஆலஇம்ரான் : 31) போன்ற வசனங்கள் ஹதீஸ் மூலாதாரம் என்பதனை உறுதிப்படுத்துகின்றன.

- அல் ஹதீஸ் மனிதனின் தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்வின் பல்வேறுபட்ட அம்சங்களையும் உள்ளடக்கிய சட்டதிட்டங்களையும் வழங்கியுள்ளது.
- உமையா ஆட்சியாளரான உமர் இப்னு அப்துல் அஸீஸ் (றஹ்) அவர்கள் ஹதீஸ்களைப் பாதுகாக்கும் முயற்சியினை அரசாங்க மட்டத்தில் மேற்கொண்டார்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன்வைத்த பின்னர் அது தொடர்பான போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்.

    - அல்லாஹ்வின் வேதநூலான அல்குர்ஆனில் காணப்படும் சட்டதிட்டங்களையும், வழிமுறைகளையும் பின்பற்றுவது போன்றே நபி (ஸல்) அவர்களது போதனைகளையும் பின்பற்ற வேண்டும்.

      ''அல்லாஹ்வும் அவனுடைய ரஸுலும் ஒரு விஷயத்தில் தீர்ப்புக் கூறினால் அதில் அபிப்பிராயத் தேர்வுக்கு எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடமில்லை. அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸுலுக்கும் மாறு செய்வோர் பகிரங்கமாக வழிகெட்டவர்களாவர்.'' (அல் அஹ்ஸாப் : 36)

      ''நிச்சயமாக என் இறைவன் எனக்குக் கற்றுத் தந்ததிலிருந்து நீங்கள் அறியாததை உங்களுக்குக் கற்றுத் தருமாறு அவன் எனக்குக் கட்டளை பிறப்பித்துள்ளான்'' (ஹதீஸ்)

    - நபி (ஸல்) அவர்களிடமிருந்து வெளியாகிய ஹதீஸ்களைப் பெற்றுக் கொள்வதற்கு நபித்தோழர்கள் தீவிர ஆர்வமும் ஈடுபாடும் காட்டினார்கள். உ-ம் : திண்ணைத் தோழர்கள். மற்றும் ஹதீஸ்களை மனனமிட்டும், எழுதி வைத்தும் செயற்படுத்தியும் வந்தனர்.
    - ஸஹாபாக்கள்; நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களைப் பாதுகாக்க அவற்றை தங்களது வாழ்வில் நடைமுறைப்படுத்தியும் அவற்றை ஏனையோருக்குச் சென்றடையவும் வழி செய்தனர்.
    - தாபிஈன்கள் காலத்தில் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஹதீஸ்களை ஒன்றுதிரட்டி எடுப்பதற்கான முயற்சிகளை ஆரம்பித்து வைத்தார்கள்.

- தபஉத்தாபிஈன்கள் காலத்தில் முன்னைய காலங்களைவிட ஹதீஸ்களைப் பாதுகாத்தல், ஒன்றுதிரட்டல், நூலுருப்படுத்தல், விளக்கமளித்தல் போன்ற காரியங்களில் மிகவும் ஆழமாக செயற்பட்டார்கள். (இமாம் மாலிக், இமாம் அஹ்மத்)

  இதனை அடுத்து ஹதீஸ் விளக்க நூல்கள், சுருக்க நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் தோன்றின.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** ஸுன்னா, அல் குர்ஆனுக்கு விளக்கமாகும் என்பதனை ஆதாரங்களுடன் விளக்கி எழுதுங்கள்.

**குழு-02** ஹதீஸ் சட்ட மூலாதாரம் என்பதனை நிரூபிக்கும் அல்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள் இவ்விரண்டினை எழுதுங்கள்.

**குழு-03** நபி (ஸல்) அவர்களது காலம் தொடக்கம் தாபிஈன்கள் காலம் வரை ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்ட முறையினை எழுதுங்கள்.

**குழு-04** ஹதீஸ் தொகுக்கப்பட்ட வரலாற்றைக் கால ஒழுங்கிக்கேற்ப பட்டியற்படுத்துங்கள்

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஹதீஸ் திரட்டும் செயற்பாட்டிற்கு மேற்கொண்ட பிரயத்தனங்களை வீட்டாருடன் அல்லது ஓர் ஆலிமுடன் கலந்துரையாடி வகுப்பறையில் முன்வைக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப்பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 : இஜ்திஹாத் கோட்பாட்டை அறிந்து அதன் பிரயோகத்தின் தேவையை எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்**

- ‘இஜ்திஹாத்’ என்பதன் பதவிளக்கத்தையும் கருத்தையும் தெளிவுபடுத்துவார்.
- இஜ்திஹாதின் தேவையை விளங்கி ஆதாரங்களுடன் முன்வைப்பார்.
- முஜ்தஹித்களின் பணியை கண்ணியத்துடன் நினைவுகூர்ந்து மாணவர்கள் முன் எடுத்து வைப்பார்.
- நவீனகால சட்டப் பிரசினங்களுக்குரிய இஜ்திஹாத் முடிவுகளைத் தேடிப் பெற்று தமது வாழ்விலும் பிறரது வாழ்விலும் நடைமுறைப்படுத்த முயற்சிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :** يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ وَأُوْلِي ٱلۡأَمۡرِ مِنكُمۡ

- “நீங்கள் அல்லாஹ்விற்கு வழிப்படுங்கள், அவ்வாறே அவனது தூதருக்கும் வழிப்படுங்கள். இன்னும் உங்களில் உலும் அம்ர் (அறிஞர், முஜ்தஹித், தலைவர்)களுக்கும் வழிப்படுங்கள்” (அந்நிஸா :59)

  “தீர்ப்பு சொல்பவர் இஜ்திஹாத் செய்து அவரது முடிவு சரியாக அமைந்தால் அவருக்கு இரண்டு கூலிகள் உண்டு. இஜ்திஹாத் செய்து அவரது முடிவு பிழையாக அமைந்துவிட்டால் அவருக்கு ஒரு கூலி உண்டு” (புகாரி)

  என்ற அல்குர்ஆன் வசனத்தையும், ஹதீஸையும் காட்சிப்படுத்தி பாடப்பிரவேசம் செய்யுங்கள்

- நவீனகால பிரச்சினைகளை மாணவர்களிடம் கேட்டு அவற்றுக்கான தீர்வுகளை எங்கிருந்து பெறுவது என்பது பற்றி மாணவர்கள் மத்தியில் சிந்தனைக்கிளர்வை ஏற்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்
  - ‘இஜ்திஹாத்’ என்ற சொல் ‘ஜுஹ்த்’ என்ற அறபுச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். முயற்சித்தல், உழைத்தல், பாடுபடுதல் என்பது இதன் பொருளாகும்.
  - “இஸ்லாத்தின் அடிப்படையிலான மூலாதாரங்களின் ஆழமான கருத்துக்களிலிருந்து ஷரீஆ உள்ளடக்கும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெறுவதற்கு ஒரு சட்டத்துறை

அறிஞர் தனது ஆற்றல்களைப் பிரயோகிப்பதே இஜ்திஹாதாகும்'' (இமாம் ஷவ்கானி)

- ஒரு பிரச்சினைக்கான சட்டத்தீர்ப்பு அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ தெளிவாகக் காணப்படாதவிடத்து அதனைப் பெற்றுக் கொள்வதற்கான தேவை ஏற்படுகின்றது.
- ஷரீஆவின் ஆதாரங்களுள் அநேகமானவை பல கருத்துக்களுக்கு இடம்பாடானவை. இவற்றுள் ஒரு கருத்தை தெரிவு செய்ய இஜ்திஹாத் அவசியமாகும்.
- குர்ஆனோ, ஹதீஸோ திட்டவட்டமாகக் கருத்துத் தெரிவிக்காத இடங்களில் இஜ்திஹாத் இடம்பெறும்.
- முஜ்தஹித்கள் இஸ்லாமிய சட்டங்களின் உயிர்த்தன்மையை பேணுபவராகவும், இஸ்லாத்தை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நடைமுறைப்படுத்த வாய்பளிப்பவராகவும் இருப்பார்கள்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்
- ஆக்கபூர்வமான மேலதிக கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்றுக் குறை நிரப்புச் செய்யுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்
    - இஜ்திஹாத், இஜ்திஹாத் ஜுஸ்ஈ, இஜ்திஹாத் குல்லி என இரண்டு வகையாக மேற்கொள்ளப்படும்.
    - குர்ஆன்,ஸுன்னா என்பவற்றின் சட்டவசனங்களைக் கண்டறியவும் அவற்றிலிருந்து சட்ட விதிகளை வகுத்துக் கொள்ளவும் மற்றும் அறிஞர்களால் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களில் மிகப் பொருத்தமானதை தெரிவு செய்து கொள்ளவும் இஜ்திஹாத் அவசியப் படுகின்றது.
    - நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களின் இஜ்திஹாதை அங்கீகரித்துள்ளார்கள். அவரும் வஹி வராத சந்தர்ப்பங்களில் இஜ்திஹாத் செய்திருக்கின்றார்.
    - நபி (ஸல்) அவர்களின் வபாத்தின் பின்னர் எழுந்த பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு ஸஹாபாக்கள் இஜ்திஹாதை மேற்கொண்டனர்.

- அல்குர்ஆன், ஹதீஸ் முன்வைத்துள்ள பொது விதிகளைக் கால மாற்றத்துக்கு ஏற்ப தொழிற்படுத்துவதற்குப் பொருத்தமான வழிகளை கையாள்வதில் இஜ்திஹாத் பங்காற்றுகிறது.
- ஒருவர் முஜ்தஹிதாக இருப்பதற்கு பல்வேறுபட்ட தகைமைகளை கட்டாயம் பெற்றிருத்தல் வேண்டும்.
- முஜ்தஹித்கள் அவர்களின் அறிவுப் பின்னணி, தேர்ச்சி என்பவற்றின் அடியாக முஜ்தஹித் முத்லக், முஜ்தஹித் பில் மத்ஹப், முஜ்தஹிதுல் பத்வா என மூன்று வகைப்படுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** இஜ்திஹாத் என்பதன் கருத்தை விளக்கி முஜ்தஹித்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகளை தேடி எழுதுங்கள்.

**குழு-02** இஜ்திஹாதின் அவசியத்தை உணர்த்தும் ஆதாரங்களைக் கண்டறிந்து முன்வையுங்கள்.

**குழு-03** இஜ்திஹாத் செய்வது பற்றி வந்துள்ள அல்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்களை தேடியறிந்து எழுதுங்கள்.

**குழு-04** நவீனகால சட்டப் பிரச்சினைங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இஜ்திஹாத் முடிவுகளைத் தேடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

முஜ்தஹித்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் பற்றி குறிப்புக்களைத் தொகுத்து மாணவர்களின் கற்றல் அறையில் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப்பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.4 : இஸ்லாமிய சட்டத்துறை பற்றியும் அதன் வளர்ச்சிக்குப் பங்காற்றிய இமாம்கள் பற்றியும் அறிந்து கூறுவர்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாமிய சட்டங்களைத் தெளிவுபடுத்தும் பிக்ஹ் கலை நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே முதலில் ஆரம்பித்தது என்பதனை எடுத்துரைப்பார்.
- இஸ்லாமிய சட்டத்துறையின் வளர்ச்சிக் காலகட்டங்களையும் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணிகளையும் அட்டவணைப்படுத்துவார்.
- பிக்ஹுத் துறை இமாம்களின் பணிகளை உணர்ந்து எடுத்துக்காட்டுவார்.
- முக்கிய பிக்ஹுத்துறை இமாம்கள் நால்வரினதும் புத்தகங்கள் மற்றும் பணிகள் பற்றி அட்டவணை ஒன்றை அமைத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- 'பிக்ஹு' என்பது 'விளக்கி வைத்தல், தெளிவுபடுத்தல், வார்த்தைகளிலுள்ள சிக்கல்களை நீக்குதல் எனப் பொருள்படும். சமூக வளர்ச்சிக்கும் இஸ்லாத்தின் பரம்பலுக்கும் ஏற்ப, சட்டத்துறையின் தேவை அதிகரிக்கின்றது என்ற விளக்கத்தினை முன்வைத்து பாடத்தில் பிரவேசியுங்கள்.
- அதுபற்றி அனைவரினதும் அபிப்பிராயங்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - பருவமடைந்த ஒரு மனிதனின் வாழ்க்கையில் உருவாகும் சகல விவகாரங்களையும் அல்குர்ஆன்,ஸுன்னா,இஜ்மா,கியாஸ் என்ற மூலாதாரங்களின் அடிப்படையில் விளக்கும் கலையே பிக்ஹ் எனப்படுகின்றது.
  - இஜ்திஹாதின் காரணமாகவே இஸ்லாமிய சட்டக்கலை ஒரு தனியான கலையாக உருவாகி பாரிய வளர்ச்சியைக் கண்டது.
  - இஸ்லாமிய சட்டங்களைத் தெளிவுபடுத்தும் பிக்ஹ் கலை நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே முதலில் ஆரம்பித்தது.

    ஒரு தடவை இரண்டு நபித்தோழர்கள் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தனர். தொழுகைக்குரிய நேரம் வந்த போது நீர் கிடையாமையால் இருவரும் தயம்மும் செய்து தொழுகையை நிறைவேற்றினர். பின்னர் நீர் கிடைத்த போது ஒருவர் வுழூச் செய்து தொழுகையை மீட்டினார். அடுத்தவர் அவ்வாறு தொழவில்லை. இருவரும் நபியவர்களிடம் தாம் நடந்து

கொண்ட முறையினை விளக்கினர். தயம்மத்துடன் தொழுதவர் நபியின் ஸுன்னாவைப் பின்பற்றிய நன்மையடைந்தார் என்றும் வுழூச் செய்து தொழுதவருக்கு இரட்டிப்பு நன்மை கிடைக்கும் என்றும் நபியவர்கள் விளக்கினார்கள் (நஸாஈ, அபூதாவுத்)

- நபி (ஸல்) அவர்களின் காலம் தொடக்கம் ஸஹாபாக்களது காலம், தாபிஈன்களது காலம் மற்றும் அப்பாஸியர்கள் காலம் வரை சட்டத்துறை வளர்ச்சி கண்டது. அப்பாஸியர்கள் காலம் சட்டத்துறையின் பொற்காலம் (ஹிஜ்ரி 120- ஹிஜ்ரி 210) என வர்ணிக்கப்படுகின்றது.
- இஸ்லாமிய சட்டத்துறை உருவாக்கத்தில் முதன்மை வகிக்கின்றவர்களாக இமாம் அபூஹனீபா(றஹ்), இமாம் மாலிக் (றஹ்), இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல் (றஹ்), இமாம் ஷாபிஈ (றஹ்) ஆகியோரைக் குறிப்பிடலாம்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3
- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - அப்பாஸியர்களது ஆட்சிக்காலத்தில் பிக்ஹ் கலை வளர்ச்சி துரிதமடைவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள்.
        - இஸ்லாமிய அறிஞர்களைச் சூழ சட்டக்கலை ஆய்வாளர்கள் திரண்டமை
        - சட்ட ஆய்வுகளுக்கான வசதிகள் கிட்டியமை
        - தகுதி பெற்ற முஜ்தஹித்கள் உருவாகியிருந்தமை
    - இஜ்திஹாத் காண்பதற்கு அறபு மொழி அறிவும், அல்குர்ஆன், ஸுன்னா பற்றிய ஆழமான அறிவும், தக்வாவும், சமகால பிரச்சினைகள் தொடர்பான அறிவும் அவசியப்படுகின்றன.
    - ஹிஜ்ரி 80-150 கால கட்டத்தில் வாழ்ந்த இமாம் அபூ ஹனீபா கூபாவில் எழுந்த பிரச்சினைகளுக்கு இஜ்திஹாத் செய்து தீர்ப்புக்களை வழங்கினார்கள்.

- இவரது சமகாலத்தவரான இமாம் மாலிக் ஹிஜ்ரி 95-179 கால கட்டத்தில் மதீனாவில் வாழ்ந்த முஹத்திஸும் முஜ்தஹிதும் ஆவார். அவர் அங்கு எழுந்த பிரச்சினைகளுக்கு இஜ்திஹாத் செய்து தீர்ப்புக்களை வழங்கினார்.
- இமாம் மாலிகின் மாணவரான இமாம் ஷாபிஈ (150-204) மக்கா, மதீனா, பக்தாத், எகிப்து ஆகிய பிரதேசங்களில் பணியாற்றினார். இவர் பல நூல்களை எழுதியதோடு பல சிறந்த மாணவர்களையும் உருவாக்கிச் சென்றார்.
- இவரின் மாணவனான இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (164-241) பக்தாதில் வாழ்ந்த முஜ்தஹிதாவார்.
- சமகால உலகின் அறிஞர்கள் நவீன சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக முற்பட்ட கால, பிற்பட்ட கால இமாம்கள் அறிஞர்கள் பலரதும் கருத்துக்களை கவனத்திற் கொள்கிறார்கள் என்பதை அவதானிக்க முடிகிறது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** இஸ்லாமிய சட்டத்துறையின் வளர்ச்சிக் காலகட்டங்களையும் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணிகளையும் அட்டவணைப்படுத்துங்கள்.

**குழு-02** இமாம்களான அபூ ஹனீபா(றஹ்), மாலிக் (றஹ்), ஷாபிஈ (றஹ்), அஹ்மத் இப்னு ஹம்பல் (றஹ்) ஆகியோரின் சட்டத்துறைக்கான சேவைகள் பற்றி தகவல்கள் திரட்டி எழுதுங்கள்.

**குழு-03** சட்டத்துறை முக்கிய நான்கு இமாம்களினதும் புத்தகங்கள், கிரந்தங்கள், முக்கிய பணிகள், வகித்த பொறுப்புக்கள் பற்றித் தேடித் தொகுப்பாக முன்வையுங்கள்.

**குழு-04** சட்டத்துறை ஒரு தனிக்கலையாக வளர்ச்சி அடைய காரணமாக அமைந்த விடயங்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

இலங்கை முஸ்லிம் சமூகத்தில் இமாம்கள் கண்ணியப்படுத்தப்படுவதற்கான காரணங்களை வீட்டாருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறையைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1: அல்குலபாவுர் ராஷிதூன்கள் பற்றி அறிந்து அபூபக்ர் (ரழி) அவர்களின் தனிப்பட்ட, அரசியல் பங்களிப்புக்கள் பற்றி அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- குலாவுர் ராஷிதூன்கள் என்ற சொற்பிரயோகத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- கலீபா அபூபக்ர் (ரழி) அவர்களின் ஆளுமை பற்றி எடுத்துக்காட்டுவார்.
- அவர் கலீபாவாக தெரிவுசெய்யப்பட்ட முறையினை விபரிப்பார்.
- அவர் கிலாபத்திற்குச் செய்த பணிகளைப் பட்டியற்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகத்தை வழிநடாத்திய தலைவர்கள் தொடர்பாகவும் அவர்களில் முதல் நான்கு ஆட்சியாளர்களையும் கலீபாக்கள் என அழைக்கப்படுவதற்கான காரணத்தையும் வினவி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- கலீபாக்கள் தொடர்பாக மாணவர்களின் அபிப்பிராயங்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் ஆட்சி செய்த நான்கு கலீபாக்களையும் குலபாவுர் ராஷிதீன்கள் என அழைக்கப்படுகின்றனர்.
    - நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் சமூகத்தை இவர்களே வழிநடத்தினர். அவர்களில் முதலாவது கலீபாவாக அபூபக்ர் (ரழி) அவர்கள் ஆட்சி செய்தார்கள்.
    - கலீபா அபூபக்ர் (ரழி) அவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கையோட்டம் பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - அபூபக்ர் (ரழி) அவர்கள் குறைஷிக் கோத்திர பனூதைம் கிளையில் பிறந்தார்கள்.
    - இஸ்லாத்தை ஏற்கமுன் அக்கால பத்து ஷரீப்களுள் ஒருவராக இருந்தார்கள். தனிப்பட்ட முறையிலும் பல சமூகப் பணிகளில் ஈடுபட்டார்கள். நபியவர்களின் இளமைக்கால நண்பராகவும் இருந்தார்கள்.
    - இஸ்லாம் அறிமுகமான போது முதலாவது இஸ்லாத்தை ஏற்ற ஆண்மகனாக நின்றார்கள். இதனால் பல இன்னல்களுக்கும் உட்பட்டார்கள்.
    - நபியவர்களின் சிரேஷ்ட தோழர் என்ற வகையில் அவரின் தலைமைத்துவப் பண்புகள் காணப்பட்டன. ஆதலால் ஸகீபா பனீஸாஇராவில் கூடியோர் அவரைக் கலீபாவாக தெரிவு செய்தார்கள். அவரது கிலாபத் காலம் ஹிஜ்ரி 11-12 ஆகும்.
    - கிலாபத்துக்கு அழைப்புக் கொடுத்தல், அல்குர்ஆனைத் தொகுத்தல், அல்குர்ஆனைத் தொகுத்தல் போன்ற பணிகளை நிறைவேற்றினார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** கலீபா, குலபா, கிலாபத், குலபாஉர் ராஷிதூன்கள் என்ற சொற்களை பொருள் வேறுபடுமாறு விளக்குங்கள்.

**குழு-02** அபூபக்ர் (ரழி) அவர்கள் கலீபாவாக வருவதற்கு பெற்றிருந்த தகுதிகளை எடுத்துக்காட்டுங்கள்.

**குழு-03** அபூபக்ர் (ரழி) அவர்கள் கலீபாவாக தெரிவு செய்யப்பட்ட முறையினை எடுத்துக் காட்டுங்கள்.

**குழு-04** அபூபக்ர் (ரழி) அவர்களின் கிலாபத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளை எடுத்துக்காட்டுங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறையைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 : அல்குலபாஉர் ராஷிதூன்களின் தனிப்பட்ட, அரசியல் பங்களிப்புக்கள் பற்றி அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- உமர் (ரழி) அவர்களின் ஆளுமை பற்றி எடுத்துக் கூறுவார்.
- உமர் (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின்னணியையும் அதன் விளைவுகளையும் விபரித்துக் கூறுவார்.
- உமர் (ரழி) அவர்கள் கலீபாவாக நியமிக்கப்பட்ட முறையினையும், அவர் கிலாபத்திற்குச் செய்த சேவைகளையும் முன்வைப்பார்.
- உமர் (ரழி) அவர்கள் அறிமுகப்படுத்திய நிர்வாக அமைப்பை விளக்கிக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- அமீருல் மு'.மினீன் எனப்படுபவர் யார் என்ற வினாவோடு பாடத்தில் பிரவேசியுங்கள்.
- அதுபற்றி அனைவரினதும் அபிப்பிராயங்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - உமர் (ரழி) அவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கையோட்டத்தையும், சிறப்பம்சங்களையும் கொண்டுள்ளது..
  - அவர் இஸ்லாத்தை ஏற்ற பின்னணியையும் அதன் விளைவுகளையும் எடுத்துக்காட்டுங்கள்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடி கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3
- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - உமர்(ரழி) அவர்கள் குறைஷிக் கோத்திர அதீ கிளையில் பிறந்தார்கள்.
    - இஸ்லாத்தை ஏற்கமுன் அக்கால பத்து ஷரீப்களுள் ஒருவராக இருந்தார்கள். வெளிநாடுகளுக்கு தூதராகச் சென்றுள்ளார்கள். சிறந்த வீரரும் ஆவார்.
    - ஆரம்பத்தில் இஸ்லாத்தின் எதிரியாகச் செயற்பட்டு நபியவர்களின் பிரார்த்தனை காரணமாக இஸ்லாத்தை ஏற்றார்கள். இதன் மூலம் முஸ்லிம்கள் தைரியமடைந்தார்கள்.
    - உமர் (ரழி) அவர்களிடம் காணப்பட்ட தலைமைத்துவ பண்புகள் சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருந்ததால் அபூபக்கர் (ரழி) அவர்கள் அடுத்த கலீபாவாக நியமித்தார்கள்.
    - கிலாபத்தை விரிவுபடுத்தியும், அதற்கு ஒரு நிருவாக அமைப்பைக் கொடுத்தும், முன்மாதிரியான ஆட்சியொன்றை நடாத்தியும், சமூக நல பணிகளை ஏற்படுத்தியும் பிரபலமானார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** இஸ்லாத்தை ஏற்கு முன் உமர்(ரழி) அவர்களின் வாழ்வு என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவைத் தயாரித்து ஒருவர் மூலம் பேசிக்காட்டுங்கள்.

**குழு-02** உமர் (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற நிகழ்வை ஒரு நாடகமாக எழுதிக் காட்டுங்கள்.

**குழு-03** உமர் (ரழி) அவர்களின் திறமைகளும் சாதனைகளும் என்ற தலைப்பில் உரைச்சித்திரம் ஒன்றை எழுதிக் காட்டுங்கள்.

**குழு-04** உமர்(ரழி) அவர்களின் ஆட்சி சிறப்படைந்தமைக்கான காரணங்களை கருத்துப்பரிமாறி பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

உமர் (ரழி) அவர்களின் திறமை பற்றி குடும்பத்துடன் கருத்துப்பரிமாறி அதுபற்றி ஓர் அறிக்கையை தயார்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறையைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.3 : அல்குலபாஉர் ராஷிதூன்களின் தனிப்பட்ட, அரசியல் பங்களிப்புக்கள் பற்றி அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- உஸ்மான் (ரழி) அவர்களின் ஆளுமை பற்றி எடுத்துக் கூறுவார்.
- உஸ்மான் (ரழி) அவர்கள் கலீபாவாக தெரிவுசெய்யப்பட்ட முறையினை விபரிப்பார்.
- உஸ்மான் (ரழி) அவர்கள் சமூகத்திற்கும், ஆட்சிக்கும் செய்த பங்களிப்புக்களை விளக்கி எழுதுவார்.
- உஸ்மான் (ரழி) அவர்கள் கிலாபத்தின் எதிர்நிலைகளை நேர்மைய சிந்தனையோடு எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- உமர் (ரழி) அவர்களின் கொலைக்குப் பின் என்ன நடக்கும் என்ற வினாவோடு பாடத்துள் பிரவேசியுங்கள்.
- அதுபற்றி அனைவரினதும் அபிப்பிராயங்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - உஸ்மான் (ரழி) அவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கைப் போராட்டத்தையும், சிறப்பம்சங்களையும் எடுத்துக் காட்டுங்கள்.
  - அவர் இஸ்லாத்தை ஏற்ற பின்னணியையும் அதன் விளைவுகளையும் விளக்கிக் காட்டுங்கள்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3
- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - உஸ்மான்(ரழி) அவர்கள் குறைஷிக் குலத்தில் உமையாக் கிளையில் பிறந்தார்கள்.
    - இஸ்லாத்தை ஏற்கமுன்பும் பின்பும் பல பொதுநலப் பணிகளில் ஈடுபட்டார்கள்.
    - ஆரம்பகட்டத்திலேயே இஸ்லாத்தை ஏற்க அவர்கள் எதிரிகளின் துன்புறுத்தல் காரணமாக குடும்பத்துடன் ஹபஷாவுக்கும் மதீனாவுக்கும் ஹிஜ்ரத் சென்றார்கள்.
    - கிலாபத்தைப் பொறுப்பேற்பதற்கு தகுதியானவர்களாக உமர்(ரழி) அவர்களால் விதந்துரைக்கப்பட்டவர்கள் அறுவரில் ஒருவரான இவர் உமர் (ரழி)க்குப் பின் பதிவியேற்றார்கள்.
    - நயவஞ்சகர்களின் சூழ்ச்சியாலும், மவாலிகளின் பெருக்கத்தினாலும் இவரது ஆட்சிக்காலத்தில் உள்நாட்டில் அமைதியின்மை காணப்பட்டது.
    - கலீபா நடுநிலையில் செயற்பட்டாலும் சதிகாரர்களால் கொலை செய்யப்பட்டார்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** உஸ்மான் (ரழி) அவர்கள் கலீபாவாக தெரிவு செய்யப்பட்ட முறையை கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-02** உஸ்மான் (ரழி) அவர்கள் காலத்தில் கிலாபத்தில் அமைதி நிலவாமைக்கான காரணங்களை வாசித்தறிந்து எழுதிக் காட்டுங்கள்.

**குழு-03** உஸ்மான் (ரழி) அவர்களின் சமூகப்பணிகளை பட்டியற்படுத்துங்கள்.

**குழு-04** நபி (ஸல்) அவர்களுக்கும் உஸ்மான் (ரழி) அவர்களுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை எடுத்துக்காட்டும் மூன்று நிகழ்வுகளைத் தேடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

உஸ்மான் (ரழி) அவர்களிடம் காணப்பட்ட குணப்பண்புகளைப் பற்றி வீட்டில் கலந்துரையாடி அவற்றில் பின்பற்ற முடிந்த குணங்களைப் பற்றி எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறையைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.4 : அல்குலபாஉர் ராஷிதூன்களின் தனிப்பட்ட, அரசியல் பங்களிப்புக்கள் பற்றி அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- அலி (ரழி) அவர்களின் ஆளுமை பற்றி எடுத்துக் கூறுவார்.
- அலி (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற முறையையும் அவர் இஸ்லாத்திற்குச் செய்த சேவைகளையும் எடுத்துக்காட்டுவார்.
- அலி (ரழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்ட சூழ்நிலையையும், அவர் கிலாபத்துக்குச் செய்த சேவைகளையும் விபரிப்பார்.
- அவர் கிலாபத்தில் எதிர்நோக்கிய பிரச்சினைகளை விமர்சன ரீதியாக விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- இஸ்லாத்தை ஏற்ற முதல்வருள் ஒருவராகவும் நபியவர்களின் மிக நெருங்கிய உறவினராகவும் இருந்தும் கூட அவர் ஏன் முதலாவது கலீபாவாக வரவில்லை என்ற வினாவை எழுப்பி பாடத்தில் பிரவேசியுங்கள்.
- அதுபற்றி அனைவரினதும் அபிப்பிராயங்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - அலி (ரழி) அவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கைப் போராட்டத்தையும், சிறப்பம்சங்களையும் எடுத்துக் காட்டுங்கள்.
  - அவர் இஸ்லாத்தை ஏற்ற பின்னணியையும் அதன் விளைவுகளையும் விளக்கிக் காட்டுங்கள்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.

- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - அலி (ரழி) அவர்ககள் குறைஷிக் குலத்தில் ஹாஷிம் கிளையில் பிறந்தார்கள்.
    - முதலில் இஸ்லாத்தை ஏற்ற சிறுவராக இருந்தாலும் இஸ்லாமிய பிரசாரத்தில் நபியவர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பை வழங்கினார்கள்.
    - உஸ்மான் (ரழி) அவர்களின் படுகொலைக்குப் பின்னர் கலீபாவாக தெரிவு செய்யப்பட்டாலும் பல எதிர்ப்புக்களை சமாளித்து ஆட்சி நடத்தினார். (ஹி : 35-40)
    - ஜமல், சிப்பீன், நஹ்ர்வான் போர்கள் அவர்களுக்கு சவாலாக அமைந்தன.
    - முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக பிரிந்து குழம்பிய பின்னணியில் கலீபா தெரிவு செய்யப்பட்டார்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** அலி(ரழி) அவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கைப் போராட்டத்தைக் கால ஒழுங்கில் ஆண்டு குறித்து கலந்துரையாடி எழுதிக் காட்டுங்கள்.

**குழு-02** இஸ்லாமிய பிரசாரத்தில் அலி (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுடன் இணைந்து செயற்பட்ட முறையினை கலந்துரையாடி எடுத்துக்காட்டுங்கள்.

**குழு-03** அலி (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் குழப்பங்கள் அதிகரித்தமைக்கான காரணங்களைக் கலந்துரையாடி எடுத்துக்காட்டுங்கள்.

**குழு-04** அலி (ரழி) அவர்களின் இளமைக்கால முன்மாதிரிகளை தேடிப் பெற்று கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

கலீபாக்கள் நால்வரதும் இளமைக்கால முன்மாதிரிகளை வீட்டில் எடுத்துக் கூறி அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களை எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறையைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.5 : இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகிய வரலாற்றையும் முஸ்லிம்கள் தாய்நாட்டுக்கு ஆற்றிய பங்களிப்புக்கள் பற்றியும் அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- அறபிகள் இலங்கையை அடைவதற்குச் சாதகமாக அமைந்த காரணிகளைக் கண்டறிந்து கூறுவார்.
- இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.
- இலங்கையில் முஸ்லிம்களின் பரம்பல் பற்றியும், அவர்கள் தாய்நாட்டுக்கு ஆற்றியுள்ள பங்களிப்புக்கள் பற்றியும் விளக்கமளிப்பார்.
- இலங்கை முஸ்லிம் முன்னோடிகள் இருவரின் பங்களிப்பை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டம் எந்த வடிவத்தை எடுத்தாலும் அதற்கு யதார்த்தபூர்வமான உணர்வைக் கொண்டு வருவதில் ரீ.பி.ஜாயாவுக்கு முக்கிய பங்குண்டு. இதன் மூலம் திருப்திகரமான சுதந்திர மொன்றையே நாம் பெற்றுக் கொள்ளப் போகிறோம் என்ற முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டார நாயக்காவின் கூற்றைக் கூறிக்காட்டிப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- அதுபற்றி அனைவரினதும் அபிப்பிராயங்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - அறபிகளின் வணிகப்பாதைக்கு- பட்டுப்பாதை- மத்தியில் இலங்கை அமைந்துள்ளது.
    - அறபு நாட்டில் இஸ்லாம் அறிமுகமாக முன்பே அறபிகள் இலங்கையுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.
    - அவர்களின் வணிகத்துக்கான வாய்ப்புக்கள் இலங்கையில் இருந்தன.
    - மன்னர்கள் ஆதரவுடன் இலங்கையில் குடியிருந்தமை, வணிக முயற்சிகளில் ஈடுபட்டமை, இலங்கை சமூகத்துடன் ஒன்றித்தமை.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடி கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - பட்டுப்பாதை கடற்பயணிகளுக்கு, சாதகமான துறைமுக வசதி, நீர்வசதி, கப்பல்களைப் பழுது பார்க்கும் வசதி, சாதகமான காலநிலை இங்கு காணப்பட்டன.
  - வணிகப் பொருள்களைக் கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் வாய்ப்புக்கள் காணப்பட்டன.
  - சுதேச மன்னர்களுடனும், மக்களுடனும் நெருங்கிய தொடர்பிருந்தமையால் அறபிகள் முஸ்லிம்களாக இருந்த போதும் நேச உறவு காணப்பட்டது. இதனால் பெரும்பான்மை சமூகத்துடன் இணைந்து அரசியல், சமூக, பொருளாதார, கலாசார துறைகளில் பங்களிப்புச் செய்தனர்.
  - காலனித்துவ வாதிகளை வெளியேற்றலிலும் சுதந்திரம் பெறுவதிலும் பங்களிப்புச் செய்தனர்.
  - சித்திலெப்பை தொடங்கிய பணியை ரீ.பி.ஜாயா தொடர்ந்தார்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** அறபிகளின் இலங்கை வருகைக்கு சாதகமாக அமைந்த அம்சங்களை கலந்துரையாடி பட்டியற்படுத்துங்கள்.

**குழு-02** இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகிப் பரவிய பின்னணியை கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-03** முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பைக் கலந்துரையாடி பட்டியற்படுத்துங்கள்.

**குழு-04** ரீ.பி. ஜாயாவின் பணிகளை தொகுத்து எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

தேசிய நலனுக்காக தமது பெற்றோர் அல்லது மூதாதையர் செய்த பங்களிப்புக்களைக் கேட்டறிந்து எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும் வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 : இஸ்லாம் தடைசெய்துள்ள உழைப்பு முறைகள் பற்றி அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- தவறான உழைப்பு முறைகளை இனங்கண்டு கூறுவார்.
- தவறான உழைப்பின் மூலம் பிறர் அடையும் துன்பங்களை உணர்ந்து அதிலிருந்து விலகி நடப்பார்.
- தவறான முறையில் உழைக்க முற்படும் ஒருவர் ஈருலகிலும் அடையும் நட்டங்களை எடுத்துக் கூறுவார்.
- தவறான உழைப்பு முறைகளில் இருந்து விலகி நடக்க பிறரைத் தூண்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் சந்தைக்குச் சென்று ஒரு வியாபாரியின் தானியக் குவியலினுள் தனது கையை நுழைத்துப் பார்த்த போது அது ஈரமாக இருக்கக் கண்டார்கள். இது ஏன் என வியாபாரியிடம் கேட்ட போது மழைக்கு நனைந்து விட்டது எனக் கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள் அவனைப் பார்த்து மனிதர்கள் பார்க்கக்கூடிய வகையில் அதனை மேல் பகுதியில் வைத்திருக்கக் கூடாதா? எனக் கூறிவிட்டு "எம்மை ஏமாற்றுபவர் எம்மைச் சார்ந்தவர் அல்லர்" என்றார்கள். (முஸ்லிம்) என்ற சம்பவத்தைக் கூறி பாடப் பிரவேசம் செய்யுங்கள்.
- அந்த நிகழ்வைப் பற்றியும் இது போன்ற வேறு நிகழ்வுகள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - வியாபாரத்தில் பொய்ச்சத்தியம் செய்தல், வியாபாரப் பொருட்களைப் பதுக்கல், மோசடி செய்தல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளன.
  - கொடுக்கல் வாங்கலில் தவிர்க்க வேண்டிய இன்னும் ஒரு பிரதான அம்சமாக வட்டி கருதப்படுகின்றது.
  - ஹராமான பொருட்களை வாங்குவதும் விற்பதும் ஹராமாகும்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - மனிதர்களுடன் தொடர்புடைய எல்லா விவகாரங்களிலும் ஏமாற்றுதலையும், மோசடியையும் இஸ்லாம் தடை செய்துள்ளது.
    - ஒரு முஸ்லிம் எல்லா சந்தர்ப்பங்களிலும் உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்வதோடு அற்ப இலாபத்திற்காக அவற்றை இழந்து விடக் கூடாது.
    - ஒரு பொருளைப் பற்றி எல்லாவற்றையும் தெளிவாகக் கூறாமல் விற்பனை செய்வது ஆகுமானதல்ல.
    - வியாபாரக் கொடுக்கல் வாங்கலில் அடிக்கடி சத்தியம் செய்வதை பொதுவாகவும் பொய்ச்சத்தியம் செய்வதைக் குறிப்பாகவும் நபியவர்கள் தடுத்துள்ளார்கள். அது பெரும் பாவங்களில் ஒன்று.
    - விலையேறும் வரை பொருட்களைச் சந்தைக்கு வராமல் தடுத்து அல்லது மறைத்து கேள்வியை ஏற்படுத்தி விலையேற்றம் செய்து மக்களைத் துன்பத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு தந்திரமான வியாபார மோசடியே பதுக்கல் வியாபாரமாகும்.
        - விலை உயர்வை நாடி நாற்பது நாட்கள் தானியத்தை பதுக்கிக் கொள்பவனை அல்லாஹ் உதறித் தள்ளி விடுவான் (அஹ்மத்)
        - வட்டியின் இரு வகைகளும் அது சிறிய அளவிலோ பெரிய அளவிலோ எவ்வகையில் காணப்பட்டாலும் அனைத்துமே ஹராமாகும்.
        - ஓர் ஊரில் வட்டியும் விபச்சாரமும் பரவிவிட்டால் அவ்வூர் அல்லாஹ்வின் தண்டனையை தாமே தங்கள் மீது இறக்கி கொண்டோர் ஆவார். (அல் ஹாகிம்)
        - ஹராமான பொருட்களை வாங்குவதும் விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.
        - வியாபார பொருட்கள் நஜீஸானவையாகவோ தடுக்கப்பட்டவையாகவோ பயனற்றவையாகவோ இருக்கக் கூடாது.

    "நிச்சயமாக அல்லாஹ்வாலும் அவனது தூதராலும் மதுபானம், செத்த பிராணிகள், பன்றி, விக்கிரகங்கள் என்பவற்றின் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது" (புஹாரி)

- (பகார: 173), (மாஇதா:3) ஆகிய வசனங்களில் ஹராமான பொருட்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** உழைப்பில் ஏமாற்றுதல், பொய்ச்சத்தியம் செய்தல் என்பன பற்றி நீங்கள் தேடியறிந்தவற்றைக் கலந்துரையாடி முன்வையுங்கள்.

**குழு-02** பதுக்கல், வட்டி என்பவற்றின் விபரீதங்கள் பற்றி நீங்கள் அறிந்த இரண்டு ஹதீஸ்களையும் இரண்டு அல்குர்ஆன் வசனங்களையும் எழுதி முன்வையுங்கள்.

**குழு-03** இஸ்லாத்தில் வாங்குவதற்கும் விற்பதற்கும் தடை செய்யப்பட்டுள்ள பொருட்களின் பெயர்களைத் தேடி கலந்துரையாடிப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-04** உழைப்பில் ஹலால் ஹராம் பேணாதபோது தனிப்பட்ட வாழ்விலும் சமூக வாழ்விலும் மனிதன் அடையும் பாதிப்புக்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

வட்டியினால் ஏற்படும் தனிமனித, குடும்ப, சமூக பாதிப்புக்கள் பற்றி பெற்றோருடன் அல்லது ஆசிரியருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும் வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 : இஸ்லாமிய வங்கி முறை பற்றிய எண்ணக்கருவை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாமிய வங்கி முறை பற்றிய எண்ணக்கருவை விளக்கிக் கூறுவார்.
- இஸ்லாமிய வங்கிக்கும் மரபுரீதியான வங்கிக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைப் பட்டியற்படுத்துவார்.
- இஸ்லாமிய வங்கிச் செயன்முறையின் அவசியம் குறித்து உரையாற்றுவார்.
- இஸ்லாமிய வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்து செயற்படுத்த முன்வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- நம் நாட்டில் காணப்படும் வங்கி அமைப்புக்கள் பற்றியும் அவற்றின் பொதுவான செயற்பாடுகள் பற்றியும் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். எல்லோருக்கும் தமது கருத்துக்களை வழங்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - இன்றைய பொருளாதார அமைப்பில் வங்கி முறை தவிர்க்க முடியாத ஒன்றாகும்.
    - வர்த்தக போட்டிமிக்க இன்றைய உலகில் இஸ்லாமிய வங்கிமுறை மிகப் பிரதான அம்சமொன்றாக மாறியுள்ளது.
    - இஸ்லாமிய வங்கி என்றால் யாதென அறிஞர்கள் விளக்குகின்றனர்.
    - இஸ்லாமிய வங்கிக்கும் பொதுவான வங்கிக்கும் இடையே சில அடிப்படையான வேறுபாடுகள் காணப்படுகின்றன.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3
- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.

- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - இஸ்லாமிய வங்கிக்கான அடிப்படைகளை இஸ்லாமிய வரலாற்றில் காண முடியும். ஆயினும் 1960களின் பின்னரே இஸ்லாமிய வங்கி என்ற பெயரில் நவீன வங்கிமுறைகளைத் தழுவிய வங்கிகள் தோற்றம் பெற்றன.
    - இன்று சர்வதேச ரீதியாக வேகமாக வளர்ச்சியடைந்து செல்லும் ஒரு துறையாக இஸ்லாமிய வங்கித் துறை காணப்படுகின்றது. இதனால் பொதுவான வங்கிகளில் கூட இஸ்லாமிய வங்கி முறை ஓர் கிளைப்பிரிவாக பல நாடுகளில் தோற்றம் பெற்றுள்ளன.
    - இஸ்லாமிய பொருளாதார வழியில் செல்வத்தைப் பயன்படுத்துவதற்கும், வளப்பங்கீட்டினை ஒழுங்கு செய்வதற்கும், நீதியையும் சமூகப் பொறுப்புக்களையும் நிலை நாட்டுவதற்கும், சேவைகளை வழங்குவதற்கும் என செல்வங்கள் ஒன்று திரட்டி தொழில்களில் ஈடுபடுகின்ற, நிதிசார் நடவடிக்கைகளை இஸ்லாமிய வரையறைக்குள் மேற்கொள்கின்ற நிறுவனமே இஸ்லாமிய வங்கியாகும்.
    - இஸ்லாமிய வங்கிகள் இறை சட்டங்களால் ஆளப்பட, மரபுரீதியான வங்கிகள் சாதாரண மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டங்களால் ஆளப்படுகின்றன.
    - மரபுரீதியான வங்கிகளில் வட்டி பிரதான இடம் வகிக்கின்றது. இஸ்லாமிய வங்கிகள் வட்டியின்றி இலாப நஷ்டத்தில் பங்கு கொள்ளல் என்ற அடிப்படையில் இயங்குபவையாகும்.

      இஸ்லாமிய வங்கிகள் இலாபத்திலும், நஷ்டத்திலும் பங்கேற்றல் என்ற தத்துவத்தில் இயங்குகிறது. ஆனால் மரபுரீதியான வங்கிகள் வட்டியை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன.

      இஸ்லாமிய வங்கிகளின் செயற்பாட்டைக் கண்காணிக்க துறைசார் விற்பன்னர்களைக் கொண்ட ''ஷரீஆ சபை'' உண்டு.

      மரபுரீதியான வங்கிகள் பணத்தை மையப்படுத்தியே நிதியீட்டல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. கடன் அவ்வங்கிகளின் பிரதான தொழிலாகும்.
    - இஸ்லாமிய வங்கிகள் தனது சகல நிதியீட்டல் செயற்பாடுகளையும் பொருட்களை மையப்படுத்தியே மேற்கொள்கின்றன. ஆகவே அவை முராபஹா, இஜாரா, ஸலம், இஸ்திஸ்னா போன்றவற்றை மையப்படுத்தியே நிதியீட்டல் செய்கின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** இஸ்லாமிய வங்கியின் அவசியம் குறித்து கலந்துரையாடி முக்கிய அம்சங்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-02** மரபுரீதியான வங்கிகளின் செயற்பாட்டிற்கும் இஸ்லாமிய வங்கிகளின் செயற்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடுகளைக் கண்டறிந்து எழுதுங்கள்.

**குழு-03** மரபுரீதியான வங்கிகளினால் முஸ்லிம் சமூகத்திற்குக் கிடைக்கும் பாதிப்புக்களை மதிப்பிட்டு அவற்றை தொகுத்து எழுதுங்கள்.

**குழு-04** இஸ்லாமிய வங்கிச் செயன்முறையில் முஸ்லிம்களுக்கு ஆர்வமூட்டுவதற்கு மேற்கொள்ளத்தக்க வழிமுறைகள் பற்றி கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

இஸ்லாமிய வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதன் அவசியம் குறித்து பெற்றோருடன் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும் வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.3 : திருமணத்திற்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தையும் அதன் சட்ட விதிகள் பற்றியும் அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- திருமணத்தின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் ஆதாரங்களுடன் விளக்கிக் கூறுவார்.
- நிகாஹ்ிற்கான சட்டதிட்டங்களை விளங்கி எழுதுவார்.
- திருமணத்தில் இணைந்துள்ள மார்க்கத்திற்கு முரணான அம்சங்களை இனங்கண்டு கூறுவார்.
- திருமணம் ஓர் இபாதத் என்பதை ஏற்று ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ‘‘நான்கு விடயங்கள் நபிமார்களின் வழிமுறையாகும். அவை, மருதோன்றி இடல், மணம் பூசுதல், பல்துலக்குதல், நிக்காஹ் செய்தல்’’ (திர்மிதி)
- இளைஞர்களே, உங்களில் வசதியுடையோர் நிகாஹ் செய்து கொள்ளுங்கள். பார்வையைத் தாழ்த்தவும் கற்பைப் பாதுகாக்கவும் அதுவே சிறந்த வழியாகும். வசதியில்லாதவர் நோன்பு நோற்கட்டும் அது அவருக்குப் பாதுகாப்பைத் தரும். (புஹாரி)

  இவ்விரண்டு ஹதீஸ்களையும் கரும்பலகையில் எழுதி அவை தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடி அவர்களது கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - இஸ்லாம் இல்லறத்தை வலியுறுத்துகின்றது. துறவறத்தை வெறுக்கின்றது.
  - இல்லற வாழ்வில் ஈடுபடுவது ஓர் இபாதத் ஆகும்.
  - இல்லற வாழ்வு பல்வேறு தூய நோக்குகளைக் கொண்டுள்ளது.
  - இல்லற வாழ்வுக்கு அடிப்படையாக அமையும் திருமணம் தொடர்பான வழிமுறைகளையும் விதிமுறைகளையும் இஸ்லாம் விளக்குகிறது.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - குர்ஆனும் ஸுன்னாவும் இல்லற வாழ்வைத் தூண்டுகின்றன.
    - இல்லற வாழ்வை மேற்கொள்வது நபி (ஸல்) அவர்களின் வழிமுறையாகும்.
    - நிகாஹ் என்பது ஓர் ஆணும் பெண்ணும் ஷரீஅத்தின் அடிப்படையில் மணமுடித்துக் கொள்வதாகும்.
    - நிகாஹுக்கு பல விதிமுறைகள் உள்ளன.
        - ஒருவர் முஸ்லிமான அஜ்னபியையே மணமுடிக்க முடியும்.
        - நிகாஹுக்கு முன்னர் பேச்சு முடித்தல் (கித்பா) இடம்பெற வேண்டும்.
        - நிகாஹை வலி அல்லது அவரது வகீல் நடத்தி வைப்பதோடு அதற்கு இரு ஷாஹிதுகளும் இருக்க வேண்டும்.
        - நிகாஹின் போது மஹர் கொடுக்கப்பட வேண்டும். நிகாஹ் முடிவுற்ற பின்னர் (மணமகனால்) வலீமா கொடுக்கப்பட வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** மணமுடிப்பதற்குத் தடுக்கப்பட்ட மஹ்ரமிகளை அட்டவணைப்படுத்துங்கள் (4: 22-23 வசனங்களின் மொழிபெயர்ப்பை நோக்குங்கள்)

**குழு-02** நிகாஹின் முக்கியத்துவம், பயன்பாடுகள் பற்றி கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-03** நிகாஹ் நிறைவேறுவதற்கு அடிப்படையான அம்சங்களைப் பற்றிக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-04** இலங்கை முஸ்லிம்களிடையே நிகாஹின் போது கலந்திருக்கும் இஸ்லாத்திற்கு முரணான அம்சங்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

திருமணம் தொடர்பாக வந்துள்ள ஹதீஸ்களை ஓர் ஆலிமின் உதவியுடன் திரட்டி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும் வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.4: இஸ்லாமியக் குடும்ப அமைப்பை அறிந்து பின்பற்றுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாமியக் குடும்பம் என்றால் என்ன என்பதை வரையறைசெய்வார்.
- குடும்ப வாழ்வின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் குர்ஆன் சுன்னா ஒளியில் அறிந்து கூறுவார்.
- குடும்ப வாழ்வுக்கான இஸ்லாமிய நோக்கங்களை அறிந்து செயற்படுவார்.
- குடும்ப வாழ்வின் நோக்கங்களை அறிந்து கொள்வதற்கான திட்டங்களை வகுத்து செயற்படுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- “ எங்கள் இறைவனே எங்கள் மனைவியையும் எங்கள் குழந்தைகளையும் எங்களுக்கு கண்குளிர்ச்சியாக்கி வைத்தருள்வாயாக! அன்றி பரிசுத்தவான்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக! (அஷ்ஷுஅறா: 75) என்ற வசனத்தின் அறபு மூலத்தை அழகுற ஓதக் கூடிய ஒரு மாணவனைக் கொண்டு ஓதச் செய்து அதன் மொழிபெயர்ப்பை வாசித்துக்காட்டி சிந்தனைக் கிளர்வை ஏற்படுத்துங்கள்.
- குடும்ப வாழ்வு தொடர்பாக மாணவர்களது கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - ஓர் ஆணும் பெண்ணும் இஸ்லாம் வரையறுத்த சட்டதிட்டங்களை அடிப்படையாக வைத்து இணைவதன் மூலம் இஸ்லாமியக் குடும்பம் உருவாகின்றது.
  - குடும்ப வாழ்வுக்கான சகல வழிகாட்டல்களையும் குர்ஆனும் சுன்னாவும் முன்வைக்கின்றன.
  - குடும்ப வாழ்வில் கணவன், மனைவி, பிள்ளைகள் என ஒவ்வொருவருக்கும் பொறுப்புக்களும் கடமைகளும் காணப்படுகின்றன.
  - குடும்பத் தலைவனான கணவன் குடும்பத்தின் ஆன்மீக பொருளாதார பாதுகாப்பு முதலானவற்றிற்கும் வழிகாட்டியாவான்.
  - சுவன வாழ்வை இலக்காகக் கொண்டே குடும்பம் செயற்பட வேண்டும்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - இறை நம்பிக்கையினை அடித்தளமாகக் கொண்டே இஸ்லாமியக் குடும்பம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.
  - அமைதியான இல்லற வாழ்வொன்றை கட்டியெழுப்புவது குடும்ப வாழ்வின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்.
  - குடும்ப அங்கத்தவர்கள் பரஸ்பரம் கடமைகளை முறையாக நிறைவேற்றுவதோடு ஒருவரை ஒருவர் மதித்தும் மன்னித்தும் விட்டுக்கொடுத்தும் நடந்துகொள்ள வேண்டும்.
  - குடும்பம் இறை திருப்தியைப் பெற்று சுவனம் நுழைவதற்கான திட்டங்களை வகுத்துச் செயற்படுவது குடும்பத் தலைவனது பொறுப்புக்களில் ஒன்றாகும்.
  - நம்பிக்கையாளர்களே நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். (அத்தஹ்ரீம் : 6)
  - குடும்பம் இறை திருப்தியைப் பெற்று சுவனம் நுழைவதற்கான திட்டங்களை வகுத்துச் செயற்படுவது குடும்பத் தலைவனது பொறுப்புக்களில் ஒன்றாகும்.
  - குடும்பத்தினர் ஒன்றிணைந்து குடும்ப வாழ்வின் ஆன்மீக, அறிவு, ஒழுக்கம், பொருளாதாரம் முதலான துறைகளில் முன்னேற்றுவதற்கான திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டும்.
  - குடும்ப உறுப்பினர்கள் தமக்கிடையேயும் அயலார், சுற்றத்தார், சமூகம் என அனைவரது உரிமைகளையும் பேணி பரஸ்பரம் நல்லுறவைக் கட்டியெழுப்ப வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-01 குடும்ப வாழ்வில் கணவன் மனைவியரது கடமைகள், உரிமைகள் பற்றி குர்ஆனிலிருந்தும் சுன்னாவிலிருந்தும் தேடியாய்ந்து எழுதுங்கள்.

**குழு-02** சிறந்த குடும்ப வாழ்வொன்றுக்கு மாணவர்களாகிய நீங்கள் எவ்வாறு பங்களிப்பு வழங்கலாம் என்பது குறித்து கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-03** அயலவர்களது உரிமைகளை மதித்து அவர்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகள் பற்றி சுன்னாவின் போதனைகளிலிருந்து தேடி எழுதுங்கள்.

**குழு-04** உங்கள் தாய் தந்தையரது சொந்த பந்தங்களுடன் நல்லுறவை வலுப்படுத்துவதற்கு உங்களால் மேற்கொள்ள முடியுமான பங்களிப்புக்கள் குறித்துக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

நீங்கள் குடும்பமாக சுவனம் நுழைவதற்காக வேண்டி உங்கள் குடும்ப சூழலை ஆன்மீக ரீதியாக நெறிப்படுத்திக்கொள்வதற்கான ஒரு திட்டம் குறித்துப் பெற்றோருடன் கலந்துரையாடி நடைமுறைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும் வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.5 : தலாக் பற்றிய இஸ்லாமிய சட்டவிதிகளை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாத்தில் விவாகரத்தின் நிலைப்பாட்டை விளக்கிக் கூறுவார்.
- தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களிலேயே விவாகரத்து அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார்.
- விவாகரத்தின் வகைகளை விளக்கி எழுதுவார்.
- விவாகரத்தின் பாதிப்புக்களை மதிப்பிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

ٱلطَّلَٰقُ مَرَّتَانِۖ فَإِمۡسَاكُۢ بِمَعۡرُوفٍ أَوۡ تَسۡرِيحُۢ بِإِحۡسَٰنٖۗ وَلَا يَحِلُّ
لَكُمۡ أَن تَأۡخُذُواْ مِمَّآ ءَاتَيۡتُمُوهُنَّ شَيۡـًٔا إِلَّآ أَن يَخَافَآ أَلَّا يُقِيمَا
حُدُودَ ٱللَّهِۖ فَإِنۡ خِفۡتُمۡ أَلَّا يُقِيمَا حُدُودَ ٱللَّهِ فَلَا جُنَاحَ عَلَيۡهِمَا فِيمَا ٱفۡتَدَتۡ
بِهِۦۗ تِلۡكَ حُدُودُ ٱللَّهِ فَلَا تَعۡتَدُوهَاۚ وَمَن يَتَعَدَّ حُدُودَ ٱللَّهِ فَأُوْلَٰٓئِكَ هُمُ
ٱلظَّٰلِمُونَ ٢٢٩

- ஸூறா பகராவின் 229 ஆவது வசனத்தை ஓதச் செய்து அதன் மொழிபெயர்ப்பையும் வாசிக்கச் செய்யுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - இஸ்லாம் விவாகரத்தை ஊக்குவிப்பதில்லை, தவிர்க்க முடியாத சில சூழ்நிலைகளில் மாத்திரமே அங்கீகரிக்கின்றது.
    - கணவன் மனைவி வாழ்வில் பிரச்சினைகள் ஏற்பட்டால் அவற்றைத் தீர்ப்பதற்கான விதிமுறைகளை இஸ்லாம் கற்றுத் தந்துள்ளது.
    - விவாக விடுதலைக்கு தலாக், பஸ்கு, குல்உ, ஈலாஉ, லிஹார் என பல்வேறு முறைகள் காணப்படுகின்றன.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
  - ''அல்லாஹ் அனுமதித்தவற்றுள் அவனுக்கு மிகவும் வெறுப்பானது தலாக் ஆகும்''(அபூ தாவூத்)
  - குடும்ப வாழ்வில் தம்பதியிடையே பிணக்குகள் தோன்றினால் நடந்து கொள்ள வேண்டிய வழிமுறையை குர்ஆன் அந்நிஸா : 34-35 வசனங்களில் குறிப்பிடுகிறது.
  - கணவன், மனைவியிடையே கடமைகளை முறையாக நிறைவேற்றாத போதும் வாழ்க்கையை கொண்டு நாடத்த முடியாத அளவு நோய், அடிப்படை வசதிகள் இல்லாத போதும் திருமண பந்தத்திலிருந்து விலகிக் கொள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் வழங்கப்பட்ட சலுகையே விவாகரத்து ஆகும்.
  - தலாக் சொல்லப்படும் முறை, சந்தர்ப்பம் ஆகியவற்றைக் கவனித்து இது தலாக் பிதஈ, தலாக் ஸுன்னி என இரண்டாக வகுப்பர். மேலும் தலாக்கை தலாக் ரஜஈ, தலாக் பாஇன் என இரண்டாகப் பிரிக்கலாம்.
  - தலாக் என்பதன் நேரடிக் கருத்து மணமுறிவு, விவாகரத்து என்பதாகும். இது கணவனுக்கு வழங்கப்பட்ட ஒரு சலுகையாகும். ''பஸ்கு'' விவாகம் செல்லுபடியற்றது என்பதைக் குறிக்கும். உதாரணமாக தம்பதியருள் ஒருவர் இஸ்லாத்தை விட்டு மதம் மாறினால் உடனே பஸ்கு நிகழும்.
  - ஒரு மனைவி நியாயமான காரணங்களை முன்வைத்து காழியிடம் முறையிட்டு தன் கணவனிடமிருந்து விவாக விலக்கு கூறுவது ''குல்உ'' ஆகும்.
  - லிஆன் போன்றன பற்றிய இஸ்லாமிய சட்ட விதிகளும் காணப்படுகின்றன.
  - விவாகரத்து, பல்வேறு குடும்ப, சமூக பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** விவாகரத்துக்கு இட்டுச் செல்லும் காரணிகள் பற்றி ஆராய்ந்து எழுதுங்கள்.

**குழு-02** விவாகரத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-03** விவாகரத்து பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் சட்டதிட்டங்களை தேடி எழுதுங்கள். (தலாக், லிஹார், லிஆன்)

**குழு-04** தலாக் பற்றிய இஸ்லாமிய நோக்கு யாதென கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

விவாகரத்து சமூகத்தில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் பற்றி பெற்றோருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும் வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.6 : இத்தா பற்றிய இஸ்லாமிய சட்டவிதிகளை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- இத்தா என்றால் என்ன என்பது பற்றி விளக்கிக் கூறுவார்.
- இத்தா தொடர்பான சட்டதிட்டங்களை விளங்கி எழுதுவார்.
- இத்தா பற்றி முஸ்லிம் சமூகத்திடையே காணப்படும் பிழையான செயன்முறைகளை விளங்கித் தடுப்பார்.
- இத்தாவின் போது தவிர்க்க வேண்டியவற்றை எடுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

وَٱلَّذِينَ يُتَوَفَّوْنَ مِنكُمْ وَيَذَرُونَ أَزْوَٰجًا يَتَرَبَّصْنَ بِأَنفُسِهِنَّ أَرْبَعَةَ
أَشْهُرٍ وَعَشْرًا ۖ فَإِذَا بَلَغْنَ أَجَلَهُنَّ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيمَا فَعَلْنَ فِىٓ
أَنفُسِهِنَّ بِٱلْمَعْرُوفِ ۗ وَٱللَّهُ بِمَا تَعْمَلُونَ خَبِيرٌ ﴿٢٣٤﴾

- ஸூறா பகராவின் 234 ஆவது வசனத்தை ஓதச் செய்து அதன் மொழிபெயர்ப்பையும் வாசிக்கச் செய்யுங்கள். அது தொடர்பாக மாணவர்களிடம் கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - இத்தா என்ற சொல்லின் கருத்து கணக்கிடல், கணித்தல் என்பதாகும்.
    - கணவன் இறந்ததற்காக அல்லது விவாக விடுதலை காரணமாக மனைவி சில விதிகளுக்குக் கட்டுப்பட்டு சில காலங்கள் காத்திருப்பதே இத்தா ஆகும்.
    - இத்தா அனுஷ்டிக்கும் படி அல்லாஹ் கட்டளை பிறப்பித்துள்ளான். ஆதலால் அது ஓர் இபாதத் ஆகும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.

- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - இத்தா அனுஷ்டிக்கும்படி அல்லாஹ் குர்ஆனில் கட்டளையிட்டுள்ளான்.
    - பெண்ணின் கணவன் இறந்துவிடுதல், அல்லது கணவன் மனைவியைத் தலாக் செய்து விடுதல், அல்லது பெண் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெறுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் பெண் மீது இத்தா கடமையாகும்.
    - இத்தா அனுஷ்டிக்கும் கால அளவு பற்றி ஸூறா பகரா 228, 234 வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.
    - இத்தா அனுஷ்டிக்கும் பெண் அலங்காரங்களைத் தவிர்த்தல் வேண்டும். இத்தாக் காலத்தில் திருமணம் செய்வதோ, தனது திருமணப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதோ கூடாது.
    - இஸ்லாத்தில் இத்தா அனுஷ்டிக்கப்படும் முறை இலகுபடுத்தப்பட்டுள்ளது. அது ஒரு சமூக கொடுமையல்ல.
    - இத்தாவின் நோக்கங்களுள் பின்வருவன குறிப்பிடத்தக்கவை.
        - கணவன் மீதுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தல்.
        - கவலையை வெளிப்படுத்தல்.
        - பெண் கர்ப்பம் தரித்திருக்கிறாளா என்பதை உறுதி செய்தல்.
        - தலாக் ரஜஈ இற்கான இத்தாவாயின் மீண்டும் இணைந்து வாழ்வதற்கான அவகாசத்தை வழங்குதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-01 இத்தா பற்றி விளக்கும் அல்குர்ஆன் வசனங்களைத் தேடி அவை பற்றிக் கலந்துரையாடி அவற்றிலிருந்து பெறக்கூடிய படிப்பினைகளை எழுதுங்கள்.

குழு-02 இத்தா அனுஷ்டிக்கும் போது நமது நாட்டில் பின்பற்றப்படுகின்ற ஒழுங்குகள் பற்றி மதிப்பிட்டு எழுதுங்கள்.

குழு-03 இத்தாவின் வகைகளை விளங்கி அவை தொடர்பாக இன்று இலங்கை மக்களிடம் காணப்படும் நோக்குகளை கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-04 இத்தா என்பது சமூகக் கொடுமையல்ல என்பதை கலந்துரையாடி நிரூபித்து எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

இத்தா பற்றி முஸ்லிம் அல்லாத ஒருவருக்கு விளக்கிக் கூற பொருத்தமான கடிதம் ஒன்றை எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 : ஒவ்வொரு அம்சம் பற்றியும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 : பிரபஞ்சம், மனிதன், வாழ்வு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தை அறிந்து வாழ்வை ஒழுங்கமைத்துக்கொள்வார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- பிரபஞ்சம். மனிதன், வாழ்வு பற்றிய உலக நோக்கே ஒரு சமூகத்ததை அல்லது நாகரிகத்தை இனங்காட்டும் என்பதை அறிந்து கூறுவார்.
- பிரபஞ்சத்தின் தோற்றம், இயக்கம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளங்கி வாழ்வொழுங்கை அமைத்துக்கொள்வார்.
- மனிதனின் பிரதான பணிகள் மூன்றையும் வகைப்படுத்தி இனங்கண்டு கூறுவார்.
- இம்மை, மறுமைக்கான விளைநிலம் என்பதை அறிந்த உலக வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

وَإِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَٰٓئِكَةِ إِنِّى جَاعِلٌ فِى ٱلْأَرْضِ خَلِيفَةً ۖ قَالُوٓا۟
أَتَجْعَلُ فِيهَا مَن يُفْسِدُ فِيهَا وَيَسْفِكُ ٱلدِّمَآءَ وَنَحْنُ نُسَبِّحُ
بِحَمْدِكَ وَنُقَدِّسُ لَكَ ۖ قَالَ إِنِّىٓ أَعْلَمُ مَا لَا تَعْلَمُونَ ﴿٣٠﴾

- நான் பூமியில் எனது பிரதிநிதியை ஏற்படுத்தப் போகிறேன் (அல்பகரா : 30) என்ற அல்குர்ஆன் வசனத்தையும் அதன் பொருளையும் கூறிப் பாடப் பிரவேசம் செய்யுங்கள்.
- மனிதனை இறைவன் பூமியில் படைத்ததன் நோக்கம் பற்றி மாணவர்களிடம் வினவுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
  - அல்லாஹ் தவிர்ந்த ஏனைய அனைத்தும் பிரபஞ்சம் என்பதற்குள் அடங்கும்.
  - அல்லாஹ் மனிதனை அவனது பிரதிநிதியாகவே உலகில் படைத்தான்.
  - வாழ்வு ஓர் அமானிதம்; எனவே வாழ்வை மறுமைக்கான விளை நிலமாகப் பயன்படுத்த வேண்டும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3

- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
  - பிரபஞ்சம் தானாக உருவாகவில்லை. அல்லாஹ்வே அதனைத் திட்டமிட்டுப் படைத்துள்ளான். (79; 27-30) அல்லாஹ் வின் விதிப்படியே அது இயங்கும் (38; 27) (2;117) (36;38) அல்லாஹ்வின் திட்டப்படியே அது அழியும் (46;3)
  - உலக வாழ்வையும் அதன் இலக்கையும் அல்லாஹ் வரையறுத்துக் கூறியுள்ளான்.அல்லாஹ் முதல் மனிதனை (ஆதமை) மண்ணினால் படைத்தான்; அவனுக்கு அறிவூட்டினான். அவன் படைப்புக்களில் உயர்ந்தவன். அவனுக்கு நேர்வழி காண்பிக்கப்பட்டது. (2;30-34) அவன் பொறுப்புக் கூற வேண்டியவனாவான்.
  - அவனுக்கு இபாதத் கிலாபத் இமாரம் என்ற பணிகள் உள்ளன. குர்ஆனின் பின்வரும் வசனங்கள் அதனை விளக்குகின்றன. (24;55, 51;56, 11;61)
  - மனித வாழ்வு ஓர் அமானிதம். மறுமைக்காக இம்மையைப் பயன்படுத்த வேண்டும். அதற்காக வழிகாட்டப்படுகிறது.
  - மனிதனின் உடல் உளம் ஆன்மா ஆகிய மூன்றும் சமநிலையில் போஷிக்கப்பட வேண்டும் (அல்முல்க் ; 2, அல் அஃராப் ; 32, அல்கஸஸ் ; 77).

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** பிரபஞ்சம் தொடர்பான இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை கலந்துரையாடி முன்வையுங்கள்.

**குழு-02** மனிதன் படைக்கப்பட்டு அறிவூட்டப்பட்டுள்ளதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-03** வாழ்வு ஒரு அமானிதம் என்பதை விளக்குங்கள்.

**குழு-04** பிரபஞ்சம், மனித வாழ்வு தொடர்பாக இஸ்லாமல்லாத கோட்பாடுகளின் கண்ணோட்டத்தை எழுதுங்கள்) தத்துவஞானிகள், விஞ்ஞானிகள், நாத்திரகர்கள், ஏனைய சமயங்கள்)

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

மனித வாழ்வின் நோக்கம் குடும்பத்தின் ஊடாக எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது என்பதை பெற்றோருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 : ஒவ்வொரு அம்சம் பற்றியும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 : ஊடகங்களை உரிய முறையில் பயன்படுத்தவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- ஊடகங்களின் பயன்பாடு தொடர்பாக அறிந்து கூறுவார்.
- ஊடகங்களை வகைப்படுத்தி அவற்றின் வளர்ச்சி பற்றி விபரிப்பார்.
- நவீன ஊடகங்களின் சாதக பாதகங்களை வகைப்படுத்திக் கூறுவார்.
- ஊடகங்களைப் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய இஸ்லாமிய விழுமியங்களை முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ஒரு காலத்தில் கடற்படையும் போராயுதங்களுமே சர்வதேச மாற்றங்களைக் கொண்டு வந்தன. ஆனால் இன்று ஊடகங்களே மௌமான மாற்றத்தை எற்படுத்தி வருகின்றன என்ற கருத்தை வலியுறுத்தி மாணவர்களை கவனஈர்ப்புச் செய்யுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - மனித தொடர்பாடலுக்கான சாதனங்களாக ஊடகங்கள் அறிமுகமாயின.
    - அவை அச்சு ஊடகங்கள் மின்னியல் ஊடகங்கள், சமூக ஊடகங்கள் என மூன்றாக வகுக்கப்படுகின்றன.
    - ஆரம்பத்தில் ஓசைகள், கீறல்கள், சமிக்ஞைகள், மெய்ப்பாடுகள், மொழிப் பிரயோகங்கள் ஊடகமாகப் பயன்பட்டன.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3
- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
    - விஞ்ஞான தொழினுட்ப அறிவு வளர்ச்சி கட்புல செவிப்புல சாதனங்ளை விரிவுபடுத்தியுள்ளன. இதனால் அச்சு ஊடகங்களும்

இலத்திரனியல் ஊடகங்களும் சமூக ஊடகங்களும் புழக்கத்திற்கு வந்தன.

- ஊடகங்களுக்கூடாக தனிமனிதனும் குடும்பங்களும் சமூகமும், சர்வதேச உலகமும், அதிகமான பாதிப்புக்களுக்கு உட்பட்டுள்ளன.
- ஊடகங்களின் ஒரு பகுதி மக்களுக்கு நலன் பயப்பதாகவும் மறுபகுதி மனிதனின் உடல், உள, சமூக, தேசிய, சர்வதேச ரீதியாக பாதகங்களை ஏற்படுத்துவனவாக உள்ளன.
- ஊடகங்கள் மனித வாழ்வில் இரண்டறக் கலந்தள்ளதால், அவை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளங்க வேண்டிய தேவை உள்ளது.
- இஸ்லாம், ஊடக இயக்கம், நுகர்வு என்பவற்றை ஓர் அமானிதமாகக் கருதுகிறது. மறுமையில் விசாரிக்கப்படும் என எச்சரிக்கின்றது. பொது நலனைப் பாதிப்பன அனைத்தும் பாவம் எனக் கருதுகிறது.
- ஊடக ஒழுக்கத்தை வரையறுத்துள்ளது. அது ஆதாரபூர்வமானதாக (அன்நம்ல் : 64) நம்பகரமானதாக (அன்ஆம்:143) நடுநிலை தவறாததாக (அந்நிஸா : 135) பண்பாட்டுத் தழுவலாக (அந்நிஸா : 128) பொது நலனைக் காப்பதாக அமைய வேண்டும். அதே வேளை ஷரீஆ வழிமுறைக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்-

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** ஊடகங்களின் கடைப்பிடிக்க வேண்டிய இஸ்லாமிய ஒழுக்கப் பண்புகள் பற்றி கலந்துரையாடி ஓர் ஆக்கத்தைத் தயாரியுங்கள்.

**குழு-02** நவீன ஊடகங்களும் அவற்றின் பாதிப்புகளும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுங்கள்.

**குழு-03** சமூக ஊடகங்களை இஸ்லாமிய விழுமியங்களைப் போதிப்பதற்காக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றி சில ஆலோசனையை முன்வையுங்கள்.

**குழு-04** இஸ்லாமிய பிரச்சாரங்களுக்கு ஊடகங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை ஆதாரங்களுடன் திரட்டி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

வீட்டுச் சூழலில் விழுமியங்களை மேம்படுத்த மேற்கொள்ளக் கூடிய பிரச்சாரங்களுக்கு எவ்வாறான ஊடகங்களைப் பயன்படுத்தலாம் என்பது குறித்து பெற்றோரின் ஒத்துழைப்போடு ஒரு ஆக்கம் எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 : ஒவ்வொரு அம்சம் பற்றியும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.3 : முஸ்லிம் உம்மத் பற்றிய எண்ணக்கருவை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- உம்மத் என்பதை வரையறுத்து விளக்குவார்.
- முஸ்லிம் உம்மத்தின் சிறப்பம்சங்களை பட்டியற்படுத்துவார்.
- முஸ்லிம் உம்மத் உருவாகி வளர்ந்த பின்னணியை விளக்கிக் கூறுவார்.
- முஸ்லிம் உம்மத்தின் பணியை ஏனைய சமூகத்தின் பணிகளுடன் ஒப்பிட்டு எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- நம்பிக்கையாளர்களே நீங்கள் அனைவரும் (ஒரே மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டிய ) ஒரே வகுப்பார் தான். உங்கள் அனைவருக்கும் இறைவன் நான் ஒருவனே. ஆகவே என்னையே நீங்கள் வணங்குங்கள் (21: 92) என்ற ஆயததை ஓதி பொருள் கூறி உம்மத் பற்றிய மாணவரின் கருத்தைக் கலந்துரையாடிப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிக்கொணரும் விதமாக அவர்களுடன் கலந்துரையாடுங்கள்:
    - உம்மத் என்பது விரந்த கருத்துடையது. அது கவ்ம் எனப்படும் குழு என்பதிலிருந்து வேறுபட்டது.
    - இனம், பிரதேசம், காலம், மொழி, மதம் சார்ந்து சமுதாயங்கள் உருவாகின்றன. ஆனால் இவை அனைத்தையும் உள்ளடக்கியதே உம்மத் ஆகும்.
    - உம்மத் என்பது கொள்கையை - இஸ்லாத்தை மையப்படுத்திய விரிந்த சமுதாயமாகும்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3
- ஒவ்வொரு குழுவிற்கும் தம்முடைய செயற்பாடுகளை முன்வைக்க இடமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள். ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:

- முஸ்லிம் உம்மத் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு பல சிறப்புப் பெயர்களைக் கொண்டுள்ளது.
- உதாரணம் உம்மதன் வசதன் (2:143) நடுநிலைச் சமூகம் கைர உம்மதன் (3:104) சிறந்த சமுதாயம் உம்மத் முகம்மதிய்யா முஹம்மதிய சமுதாயம் உம்மத் அல் ஆலம் சர்வதேச சமுதாயம்.
- இது மக்காவில் கருக்கட்டி மதீனாவில் பிரசவித்தது. மக்காவில் தனிநபர்கள் உருவாக்கப்பட்ட மதீனாவில் உம்மத உருவாக்கப்பட்டது.
- ஹிஜ்ரத்துக்கு முன்பே நபி (ஸல்) அவர்களிடம் இந்தச் சிந்தனை காணப்பட்டது என்பதை பைஅதுல் அகபாவும் மதீனா சாசனமும் எடுத்துக்காட்டுகின்றன.
- சமூகமின்றி இஸ்லாம் இல்லை என உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள். இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் பாதுகாப்தற்கும் உம்மத் தேவை. அநியாயத்தில் எனது உம்மத் ஒன்றிணையமாட்டாது என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
- முஸ்லிம் உம்மத் சுதந்திரம், சமத்துவம், சமூக - தரத்துவம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கியுள்ளது.
- தனிநபர்- சமூகம், உலகியல் - ஆன்மீகம், இம்மை - மறுமை, கோட்பாடு - செயற்பாடு, நெகிழ்வு - நெகிழாமை போன்றவற்றுக்கிடையே அது இணக்கம் கண்ணடுள்ளது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-01** குழு-கவ்ம், சமுதாயம் - உம்மத் என்பவற்றுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை அட்டவணைப்படுத்துங்கள்.

**குழு-02** முஸ்லிம் உம்மத் உருவான வரலாற்றைச் சுருக்கமாக விபரியுங்கள்.

**குழு-03** முஸ்லிம் உம்மத்தின் சிறப்புப் பண்புகளை பட்டியற்படுத்துங்கள்.

**குழு-04** சமூகமின்றி இஸ்லாம் இல்லை என்ற உமர் (ரழி) அவர்களின் கூற்றுக்கு சார்பான கருத்துக்களை விளக்குங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

இலங்கை முஸ்லிம் உம்மத் பற்றியும் உம்மத் என்ற அமைப்பில் வாழும் எம்மிடம் காணப்படும் ஒத்த பண்புகளையும் வேறுபட்ட பண்புகளையும் பெற்றோருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்தங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுள்**

- டிமை கடதாசி
- ∴பெலற் பேனாக்கள்
- எழுது கடதாசி
- பென்சில்கள்
- அடிமட்டம்
- றெஜிபோம்
- பிறிஸ்டல் போர்ட்
- ஒலி / ஒளி நாடாக்கள்
- இறுவட்டுக்கள்
- பசை நாடாக்கள்
- இணையத்தளங்கள்

**நூல்கள்**

- தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி
- றியாழுஸ் ஸாலிஹீன்- இமாம் நவவி (ரஹ்) தமிழ் மொழி பெயர்ப்பு
- இலங்கை சோனகர் பற்றிய கடந்த கால நினைவுகள் (தொகுப்பு)
- பலஸ்தீன வரலாறு - கலாநிதி எம்.எச். ஜவாஹிருல்லாஹ்
- முன்மாதிரி முஸ்லிம் - முஹம்மத் அலி அல் ஹாஷிமி
- அமல்களின் சிறப்பு - மௌலானா ஸகரிய்யா ஸாஹிப் (ரஹ்)
- ஒழுக்க மாண்புகள் - ஷெய்க் அல் கஸ்ஸாலி
- வாழ்க்கைக் கலை - மௌலானா முஹம்மத் யூசுப் இஸ்லாஹி
- அர்ரஹீக் - எஸ். முபாரக் பூரி
- இஸ்லாத்தில் இறை நம்பிக்கை - ஹஸன் ஐயூப்
- அல்குர்ஆன் ஓர் அறிமுகம் - ஏ.எல்.பீர் முஹம்மது
- மறுவிலா முழுமதி நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் - ஜமால்
- இலங்கை முஸ்லிம்கள் - தொன்மைகான வரலாற்றுப் பாதை - எம்.ஏ.எம்.சுக்ரி
- அபூ பக்ர் (ரழி) - முஹம்மத் தம்பி
- உமர் (ரழி) - முஹம்மத் தம்பி
- உஸ்மான் (ரழி) - முஹம்மத் தம்பி
- அலி (ரழி) - முஹம்மத் தம்பி
- நான்கு கலீபாக்கள் - எஸ்.எச். ஆதம்பாவா
- வறுமை ஒழிப்பு - கலாநிதி த. அப்துர் ரஹ்மான்
- ஒரு முத்தகீயின் முப்பது நாட்கள் - இஸ்மத் அலி
- இஸ்லாம் உங்கள் பார்வைக்கு - ஹமூதா அத்தி
- இலங்கை முஸ்லிம்களின் வளர்ச்சிக்கு பங்காற்றி முன்னோடிகள் - எம்.ஐ.எம். அமீன்
- இறுதி நபித்துவம் - மௌலான மௌதூதி
- கழா கத்ர் - சீ. அய்யூப் அலி
- இஸ்லாமிய சட்டக் கலை - எம்.ஐ.எம்.அமீன்
- இஸ்லாமிய வங்கி முறை ஓர் அறிமுகம்- எஸ்.எம்.எம்.மஸாஹிர், எச்.எம்.அஹ்மத் ஹில்மி
- விவாகம் - எம்.எம்.ஏ அப்துல் லதீப்